# தமிழரசு

1-3-1982 75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2013
துன்மதி—மாசி-17







சமயபுரம் திருக்கோயிலில் 103 தம்பதிகளுக்குச்
சிறப்புத் திருமணம் (14. 2. 1982)





திருவேற்காடு
திருக்கோயிலில்
50 தம்பதிகளுக்குச்
சிறப்புத் திருமணம்
(21-2-1982)

# உடலை ஓம்புக; உயர்வே பெறுக!



## மாண்புமிகு முதல்வர்

"தியாகம் செய்கிறவர்கள், தியாகத்திற்கு மட்டும் தான் சொந்தக்காரரர்கள் என்கிற வரலாறு மாற்றப்படும்போதுதான் சாரணர் இயக்கத்தின் முதல் கொடி பறக்கவிடப்படும்.

எனக்குத் தகுதி இருக்கிறதோ இல்லையோ, தகுதி உள்ளவர்கள் எனக்கு வெள்ளி யானை பரிசு அளித்துள்ளனர்.

யானை இருந்தாலும் ஆயிரம் பொன். இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். என்னைப் பொறுத்தவரை இருக்கும்போது என்ன விலை மறைந்த பிறகு என்ன விலை என்று தெரியாது. ஆனால், இந்த வெள்ளி யானையைத் தந்திருப்பதன் மூலமாக என் கடமைக்கு ஒரு பாலம் அமைத்து, நான் செல்லும் பாதையை எச்சரிக்கையாக, சரியாகச் செல்ல வேண்டும் என்று தரப்பட்டது என்று கருதுகிறேன். எனக்கு அளிக்கப்படும் பரிசுப் பொருட்களை உடனே சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்துவிடுவேன்.

ஆனால், இங்கு அளிக்கப்பட்ட வெள்ளி யானைப் பரிசை மட்டும் இன்னும் கழற்றவில்லை. இதனால் இதற்கு எவ்வளவு மரியாதை தருகிறேன் என்பதை அறியலாம். இதனால் மற்றவற்றிற்கு மரியாதை இல்லை என்று பொருள் அல்ல.

அறிவாற்றலும், கடமை ஆற்றலும் உணர்த்துவதால் இதனைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அப்படியே வைத்துள்ளேன்.

திருமதி லட்சுமி மஜூம்தார் தேசிய சாரணர் சாரணியர் அமைப்புக்கு இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் 17 ஆண்டுகளாக ஆணையராக உள்ளார். இதனால் அவரது தகுதியை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இங்கு குழந்தைகள் பற்றிக் கூற வேண்டும். இங்கே பல மொழிகள் பேசும் குழந்தைகள் வந்திருக்கிறீர்கள். மியூசிக் டைரக்டர் திரு எம்.பி. சீனிவாசன் புகழ் பெற்ற தம் குழுவினருடன் தமிழ்ப் பாடல்களை இசைத்தபோது ரசித்தீர்கள். அவர் திறமை மிக்கவர் என்பது நிரூபிக்கப்பட்டது. பாரதியார் பாடல்களை இசையமைத்துப் பாடினார்கள்.


# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2013 துன்மதி—மாசி- 17

மலர் : 12 இதழ் : 17 1-3-1982

பாரதியார் எப்படிப்பட்ட கருத்துக்களைச் சொன்னார் என்பதை நினைத்துப் பார்த்து அவருக்கு ஆண்டு முழுதும் விழாக்கள் நடக்கின்றன. இந்தியா முழுவதும் வெளிநாடுகளிலும் விழாக்கள் கொண்டாடப்படுவதைப் பார்க்கிறோம்.

இந்தியா ஒரு நாடு என்பதும், அனைவரும் ஒரு குலத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் உங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. நாம் அனைவரும் ஒரு குலம் என்பதைக் காட்டும் வகையில் இங்கே பரவியுள்ளீர்கள்.

இங்கே இளைஞர்களாக உள்ள நீங்கள் குறிப்பாக தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் சாரணர் இயக்கத்தில் 4 ஆண்டுக் காலத்தில் 70 ஆயிரத்திலிருந்து ஒன்றரை லட்சம் பேராக உயர்ந்திருப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தியா முழுமையும் கணக்கிட்டுப்பார்த்தால் 7 லட்சம் பேர் உள்ளனர். இதில் இந்த ஒன்றரை லட்சம் எந்த விகிதாச்சாரம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இது பெருமைக்குரியது என்றாலும் அனைத்து மாநிலங்களிலும் இதைப் பின்பற்றவேண்டும் என்பதுதான் நம் ஆசையாகும்.

நடை, நடத்தை என்பதை நாம் பிரித்துப் பார்க்கக்கூடாது. நடைதான் நடத்தையாகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஏனெனில் நடை ஒழுங்காக இல்லை என்றால் அவர் குடித்து விட்டார் என்கிறோம். குடித்து விட்டார் என்றால் நடத்தை கெட்டவர் என்கிறோம்.

அதுபோல ஒழுங்காக நடை போடுவதும், ஒழுங்காகப் பணியாற்றுவதும், நாட்டில் உள்ள அனைவருடைய இன்றியமையாத கடமை - பொறுப்பு என்பதை உணரவேண்டும்.

இன்னொன்றையும் சொல்கிறேன். நாம் பிறரைத்தான் விமர்சனம் செய்கிறோமே தவிர நம்மை அல்ல. தன்னைத் தானே விமர்சனம் செய்து கொள்வதில்லை. முதலில் நம்மைத் திறனாய்வு செய்த பின்னர்தான் மற்றவர்களைத் திறனாய்வு செய்யவேண்டும். அதுபோல நம்மை வலிவாக - உறுதியாக வைத்துக் கொண்டால்தான் மற்றவர்களுக்கு ஆலோசனை கூறமுடியும்.

ஓடுவதிலும், தாண்டுவதிலும், நீந்துவதிலும், எங்கு உதவி தேவையோ அங்கே உதவி தரும் வகையில் கயிற்றின் உதவினால் பள்ளத்திலிருந்து மேலே வரவும், இங்கேயுள்ள சாரண சாரணியர் ஒவ்வொருவரும் பழக்கப்படுகிறீர்கள்.

உங்களை நான் பணிந்து கேட்டுக் கொள்வேன். எந்த வயதிலும் இந்தப் பயிற்சியை-தேகப் பயிற்சியை நல்ல பழக்கத்தை கைவிட்டுவிடாதீர்கள் என்பதுதான்.

நான் இன்னொன்றையும் கூறுவேன். நாட்டு மக்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால்சாரணர் எண்ணிக்கை மிகவும் குறைவு. அதை அதிகப் படுத்த வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ள குழந்தைகள் அதில் ஈடுபட வேண்டும். அதனால்தான் நாங்கள் உதவி செய்கிறோம். இந்த எண்ணிக்கை வளர வேண்டும் என்பதுதான் என் ஆசை.

நாட்டைக் காப்பாற்ற வேண்டிய இளைஞர்கள் நல்ல கட்டுப்பாட்டுகளைக் கொண்டு விளங்க வேண்டும். ஒவ்வொரு பிள்ளைகளும் இரவில் படுக்கப்போகும் வரை காலை முதல் இரவு வரை என்ன செய்தோம் என்று எழுதி வைக்க வேண்டும்.

அன்று என்னென்ன செய்தோம் என்பது வேறு அல்ல; இப்படி பொறுப்புகளில் என்ன செய்தோம் என்பதைக் கோடிட்டு எழுத வேண்டும்; உங்களுடைய செயலை மறுநாள் காலைப் படித்துப் பார்க்க வேண்டும். நேற்று செய்த தவறுகளைத் திருத்தி நன்மை செய்ய வேண்டிய அன்றைய தினத்தின் கடமையை நீங்களே அறிவீர்கள்.

நம்மைப் பெற்ற தாய் தந்தையரிடம் மட்டும் எந்தப் பொய்யும் சொல்லக்கூடாது. மற்றவர்களிடம் சொல்லலாமா என்றால் சில சமயங்களில் அந்த நிலை ஏற்படும். சமூகத்துக்கு விரோதமான காரியம் இல்லை என்றால் அதற்காக நாம் வெட்கப்பட வேண்டிய தேவையில்லை. சமூகத்தைக் காக்க இந்தப் பயிற்சி தொடர வேண்டும்.

அதனால்தான் இதை வளர்க்க என்னென்ன வசதிகள் கொடுக்கப்பட வேண்டுமோ அனைத்தையும் தமிழக அரசு கொடுக்கத் தயாராக உள்ளது.

"நீங்கள் தாயை-தந்தையை-ஆசானைக் கடவுளாக வணங்கியாக வேண்டும்.

ஆண்களுக்கு, பெண்கள் சரிநிகர் சமானமாக இருக்க வேண்டும் என்று பாரதி பாடினார். இங்கே இதை இளைஞர்களிடம் காணுகிறோம்.



சமத்துவம் என்பதற்கு முன்னால் உள்ளத்தில் சமநிலை ஏற்பட வேண்டும்.

ஒய்.எம்.சி.ஏ. திடலில் அந்த உறுதியைச் சமாளிக்க எத்தனை பேர் தயாராகிறார்கள் என்பதை அறிந்து அவர்களுக்குப் பயிற்சி தருபவர்களைப் பாராட்டுகிறேன்.

பெரியவர்கள் சொல்ல முடியாததை ஒரு மாமன்னன் இளம் வயதில் சொன்னான் என்று தமிழ் இலக்கியத்தில் சொல்லுவார்கள். அதுபோல் நீங்கள் அதிகமான பேர்களுக்கு கல்லாத முதியோர்களுக்கு கல்வி சொல்லிக் கொடுக்கவேண்டும்.

எனக்குத் தங்க யானை தர வேண்டும் என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. விரும்பினார். வேண்டுமானால் கிடைத்தால் போட்டுக் கொள்ளலாம்.

தமிழகத்தில் ஏழைக் குடி மக்களுக்கு இன்னும் தங்கத்தாலி கொடுக்க முடியவில்லை. அதை நினைவுப்படுத்தத்தான் வேறு வகையில் நினைவுபடுத்தினார் என்று நினைக்கிறேன். அவருக்குச் சொல்லிக்கொள்வேன். எங்களால் ஆன கடமையைச் செய்வோம் அதை அதிகப்படுத்துவோம்.

உருவத்தில் சிறிய - கருத்தில் பெரிய யானையைத் தந்தார்கள். துணிந்து செல்லுங்கள் என்று சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கூறினார். அண்ணாவின் கொள்கைப்படி எங்கள் கடமையைத் தொடருவோம்.

[சென்னையில் நடைபெற்ற 20-ஆம் குடியரசுத் தலைவர் அணிவகுப்பு முகாம் நிறைவுநாளில் (21.2.82) மாண்புமிகு முதல்வர் ஆற்றிய உரையிலிருந்து]



அட்டைப்படக் கட்டுரை

# சாரணர் இயக்கத்தில் முதன்மை வகிப்பது தமிழ் நாடு

சிறுவர், சிறுமியர் மற்றும் இளம் ஆடவர், மகளிர் ஆகியோரது உடல், உள்ளம் இரண்டையும் பண்படுத்தியும் அவர்களது திறமைகள், மனப்பான்மை ஆகியவற்றை வளப்படுத்தியும் அவர்களை நற்குடிமக்களாக வளர்ப்பதே சாரண, சாரணீயர் இயக்கத்தின் குறிக்கோளாகும். பயிற்சிகள், விளையாட்டுக்கள், புத்துணர்வளிக்கும் செயல்கள் இவற்றின் மூலம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இவற்றை இளைஞர்களிடம் இவ்வியக்கம் உருவாக்குகிறது என்று சாரணர் இயக்கத்தின் நோக்கம் கூறப்படுகிறது.

**இயக்கத்தின் தோற்றம்:**

இங்கிலாந்து நாட்டிலுள்ள கில்வெல் என்னும் இடத்தைச் சேர்ந்த பேடன்பவல் எனபவர் இவ்வியக்கத்தைத் தொடங்கினார். இவர் 1857 முதல் 1941 வரை வாழ்ந்தார். பிரிட்டிஷ் ராணுவத்தில் பணிபுரிந்த இவர் தென் ஆப்பிரிக்க நாட்டில் நடத்திய போயர் போரில் முதன் முதலாகச் சிறுவர்களைச் செய்தி கொண்டு செல்லுதல்முதலிய சிறு பணிகட்குப் பயன்படுத்திப் பயன் கண்டார். இதைத் தொடர்ந்து 1907ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் 20 சிறுவர்களுடன் சாரணர் முகாமை முதன்முதலாக நடத்தினார். 1909ஆம் ஆண்டில் சிறுமியர் உள்ளக் கிடக்கையையும் கருத்தில்கொண்டு சாரணர் இயக்கத்தைத் தொடங்கினார். 1941 ஆம் ஆண்டில் பேடன் பவல் பிரபு மறைந்தபின், அவரது மனைவி பேடன் பவல் சீமாட்டி கணவன் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து நடத்தினார். இவ்விருவரது பணியினால், சாரண சாரணீயர் இயக்கம் பல்வேறு நாடுகளிலும் பரவி வளர்ந்தது.

**-மாமூலன்**

1909ஆம் ஆண்டில் நம் நாட்டில் சாரணர் இயக்கம் தொடங்கியது. தொடக்கத்தில் ஐரோப்பிய மற்றும் ஆங்கிலோ இந்தியச் சிறுவர்களிடம் மட்டும் பரவிய இவ்வியக்கம் டாக்டர் அன்னி பெசண்ட், டாக்டர் ஜி.எஸ். அருண்டேல் இவர்களது முயற்சியால், சென்னையில் இந்தியச் சாரணர் குழாமாக உருவாகியது. பண்டிட் மதன் மோகன் மாளவியா முதலிய பெரியோர்களால் அலகாபாத்திலும் ஒரு சாரணர் குழாம் தொடங்கப்பட்டது. பல்வேறு சாரணர் இயக்கங்களும் 1950ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 7ஆம் நாள் ஒருங்கிணைந்து பாரத சாரணர், சாரணியர் சங்கம் உருவாகியது.

உலக சாரணர் அமைப்பில் கொள்கை வகுக்கும் உலக சாரணர் மாநாடு, கொள்கைகளைச் செயற்படுத்தும் உலக சாரணர் குழு, செயலகமாக இயங்கும் உலக சாரணர் செயல்கம் ஆகிய பேருறுப்புக்கள் உள. நம் நாட்டில் பாரத சாரணர் சாரணீயர் குழாம் எனப்படும் நாட்டு நிறுவனமே தலைமை நிறுவனமாகும். இதன் தலைமையிடம் புதுடெல்லி.

சாரணர், சாரணீயரும் தனித் தனிக் குழுக்களாக இயங்கி வருகின்றனர். இவ்வியக்கத்தின்அடிப்படை அமைப்பு ஓர் சாரணர்அல்லது சாரணீயர் குழுவாகும். முழுமையான ஒவ்வொரு சாரணர் படையிலும் குருளையர் மந்தை (6 முதல் 10க்குள் வயதுடையவர்), சாரணர் படை (10 முதல் 18க்குள் வயதுடையோர்) திரி சாரணர் படை (16 முதல் 35க்குள் வயதுடையோர்) ஆகிய மூன்று பிரிவுகள் உண்டு. முழுமையான ஒவ்வொரு சாரணீயர் படையிலும் இதே போன்று மூன்று பிரிவுகள் உள. அவை நீலப் பறவைத் திரள் (வயது 6-9) சாரணீயர்படை (வயது 10-17) திரி சாரணீயர் (படை வயது 16-24 ) ஆகும். குருளையர், நீலப்பறவையினர் இவர்களது குறிக்கோள் இயன்றதனைத்தையும் செய் என்பதாகும். சாரண-சாரணீயரது குறிக்கோள்(ஆயத்த நிலையிலிரு) என்பதாகும். திரி சாரண-சாரணீயரது குறிக்கோள் 'பணி' என்பதாகும்.

**முதன்மை வகிக்கும் தமிழ்நாடு:**

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களில் சாரணர் இயக்கத்தில் முதன்மை வகிக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சாரணர் இயக்கம் மகத்தான வளர்ச்சி அடைந்துள்ளது.

வழக்கமாக சாரணர் இயக்கத்தின் இந்தியக் குடியரசுத் தலைவர் அணிவகுப்பு முகாம் புதுடில்லியில்தான் நடைபெறும். இவ்வாண்டுதான் முதன் முதலாக 20வது குடியரசுத் தலைவர் அணிவகுப்பு முகாம் சென்னையில் ஐந்து நாட்கள் நடைபெற்றது.

முகாமினை 17.2.82-ல் மேதகு ஆளுநர் திரு சாதிக் அலி அவர்கள் தொடங்கி வைத்தார். நிறைவு விழா 21.2.82 அன்று நடைபெற்றது.

சாரணர் இயக்கத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உதவிடும் தொண்டினை பாராட்டிப் போற்றும் வகையில் சாரணர் இயக்கத்தின் மிகஉயர் விருதான வெள்ளி யானை விருதினை, முதல்வர் அவர்களிடம் தேசிய சாரண இயக்கத்தின் ஆணையாளர் லட்சுமிமஜூம்தார் வழங்கினார்.

இந்தியாவிலேயே ஒரு முதலமைச்சருக்கு இந்த விருது வழங்கப்படுவது இதுதான் முதல் முறையாகும்.

நிறைவுநாள் விழா நிகழ்ச்சி தொடக்கம் முதல் கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க நிலையில் அமைந்திருந்தது. விழாவில் பங்கேற்க வந்திருந்த முதல்வரை சாரணர் சாரணீயர் மலர் தூவி வரவேற்றனர்.

சாரணர் சாரணீயர் அணி வகுப்பு மரியாதையை முதல்வர் ஏற்றுக் கொண்டார். அதன்பின்னர் முதல்வருக்கு வெள்ளியானை விருது வழங்கப்பட்டது.

இந்த முகாமில் பங்குகொண்ட சாரணர் சாரணீயர்களுக்கு முதலமைச்சர் சான்றிதழ்களை வழங்கினார். பிறகு சாரண சாரணீயரின் உடற்பயிற்சிகளும், இந்திய ஒருமைப்பாட்டை விளக்கிடும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. விழாவில் திருமதி சௌந்தரம் கைலாசம் விருது பெறும் முதலமைச்சரை வாழ்த்தி வாழ்த்துப் பாவினைப் படித்தார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் பள்ளிக் கல்வி இயக்குநரும் சாரணயர் சாரணீயர் இயக்க மாநில தலைமை ஆணையாளருமான திரு வெங்கடசுப்பிரமணியம் வரவேற்றார்.

சாரணயர் இயக்கத்தின் உலக அமைப்பினைச் சேர்ந்த ஜே.பி. ஏ. சில்வஸ்டர் பேசுகையில் ''மாநிலத் தலைவராகவும், மக்கள் தலைவராகவும் இருக்கும் முதல்வர் சிறந்த பணிகளை ஆற்றுகிறார். சாரணீயர் இயக்கத்துக்குப் பல்வேறு வகையில் உதவியுள்ளார். இந்தத் தகுதிகளால் சாரணர் இயக்கத்தின் உயர் விருதான வெள்ளியானையைப் பெறும் முதல்வரைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார்.

தமிழ்நாடு சாரணர் இயக்கத்தின் பயிற்சி முகாமுக்காக மாமல்லபுரம் செல்லும் வழியில் 21 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு நன்கொடையாகக் கொடுத்துள்ளது. இதற்கான பட்டாவை மாநில சாரணர் இயக்க ஆணையர் வேங்கடசுப்பிரமணியத்திடம் கல்வியமைச்சர் அளித்தார். விழா மலரை தலைமைச் செயலாளர் கே. திரவியம் இ.ஆ.ப., வெளியிட்டார். சாரணயர் இயக்கக் கொடி விற்பனையை கல்வித் துறை செயலாளர் சி. ராமதாஸ் இ.ஆ.ப. தொடங்கி வைத்தார்.

விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு சி. அரங்கநாயகம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''குடியரசுத் தலைவர் விருது பெற்ற சாரணர்களில் அதிக விருதுகள் பெற்றவர்கள் தமிழக சாரணர்கள்தான். இதையறிந்து பெருமைப்படுகிறேன். சாரணர் இயக்கத்தின்பால் முதல்வர் காட்டும் அன்பையும் ஆதரவையும் பாராட்டி அவருக்கு சாரணர் இயக்கத்தின் மிகச்சிறந்த விருது வழங்கப்படுகிறது.

தேசிய ஒருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சாரணர் இயக்கம் செயல்படுகிறது. இந்த இயக்கத்தின்பயிற்சி முகாமிற்காகத் தமிழக அரசின் சார்பில் 21 ஏக்கர் நிலம் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே அதிக சாரணர்கள் இருப்பது தமிழகத்தில்தான் என்பது பெருமைப்படத்தக்கது.

தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிக் காப்பதில் அனைவரும் எடுத்துக் காட்டாக விளங்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்தில் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக் கொள்ளவேண்டும்.''

விழாவின் நிறைவு உரை நிகழ்த்திய மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் குறிப்பிட்டதாவது:

''வேறு எந்த முதல்வருக்கும் இப்படிப்பட்ட விருதினைத் தரவில்லை. முதல் விருது பெறுபவராக முதல்வர் உள்ளார். வாங்குவதற்குரிய முதல்வர் இப்போதுதான் உள்ளார். புகழ்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஒருவரை புகழுவதை விட இகழ்ந்தால்தான் அதற்கு வரவேற்பு உள்ளது.

பரிசினைத் தேடி முதல்வர் போகவில்லை. பரிசு அவரைத் தேடி வந்தது. அதற்காக அவரைப் பாராட்டுகிறேன். அவர் தலைசிறந்த கலைஞர். ஒருவருடைய நடப்பும் நடத்தையும் ஒன்றாக இருக்க வேண்டும். முதல்வரின் நடப்பும் நடத்தையும் ஒன்றாக இருக்கிறது. அவர் பெயர் ஆளவந்தார் என்று நான் கூறுகிறேன். அவர் ஆளுவார். ஆண்டு கொண்டிருப்பார் என்று கூறுகிறேன். நான் இங்கே சாரணர் இயக்கத்தைப் பார்க்கவில்லை. பாரத தேசத்தையே பார்க்கிறேன்.''

விழாவில் பங்கேற்ற திருமதி மஜூம்தார் சில்வஸ்டர், லட்சுமணசிங், எஸ்.கே.பட் ஆகியோருக்கும் முதல்வர் நினைவுப்பரிசுகளை வழங்கினார். விழாமுடிவில் சர்தார் லட்சுமணசிங் நன்றி கூறினார்.

சாரணர் இயக்கத்தின் 20 வது குடியரசுத் தலைவர் அணிவகுப்பு முகாம் நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழ்நாடு சாரணர் இயக்கத்தில் முதன்மை வகிக்கின்றது என்பதை எடுத்துரைத்தன.



# சமயபுரம்: மாரியம்மன் கோவில் மணவிழா!


மா. விசுவநாதன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.


தமிழ்நாடு அரசு அறநிலையத் துறை சார்பில் மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனையில், ஆலயங்களில் கிடைக்கும் வருமானத்திலிருந்து ஏழை எளிய மக்களுக்கு இலவசத் திருமணம் செய்து தருவதில் மிக்க ஆர்வம் காட்டி, செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு திருமணத்திற்கு ஆயிரக்கணக்கில் செலவு செய்ய வேண்டியதிருக்கும். இக்காலத்தில் கூட்டாக பல திருமணங்களை ஒரே மேடையில் நடத்துவது என்பது அவ்வளவு எளிதான காரியமன்று. ஏழைகளுக்கு எதனையும் செய்து வரும் நமது அரசு, இந்த அரிய செயலையும் எளிதாக மேற்கொண்டு ஆலயங்களிலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து ஏழைகளுக்கு இலவச திருமணங்களைச் செய்து வருகிறது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாகத்தான் கடந்த பிப்ரவரித் திங்கள் 14-ஆம் நாள் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் சன்னிதானத்தில் 103 திருமணத் தம்பதிகளுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் இலவசமாக திருமணங்களை நடத்தி வைத்தார். ஒவ்வொரு தம்பதியருக்கும் 2 கிராம் எடையில் தங்கத் தாலியும், ஒரு எவர்சில்வர் குடமும், ஒரு எவர்சில்வர் குத்துவிளக்கும் அமைச்சரால் வழங்கப்பட்டது. இத்துடன் தம்பதிகளுக்கு இலவச வேஷ்டியும், சட்டை, சேலைகளும் வழங்கப்பட்டன. எல்லாச் செலவுகளும் ஆலையத்தின் சார்பில் ஏற்கப்பட்டு, ஒவ்வொரு தம்பதியருக்கும் ரூ. 800 முதல் ரூ. 900 வரை மொத்தம் ரூபாய் 90,000 செலவில் திருமணச் சடங்குகள் மிகச் சிறப்பாக நடந்தேறியது. மொத்தம் 103 திருமணத் தம்பதியர்களில் 63 தம்பதியர்கள் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். 36 தம்பதியர்கள் பிற்பட்டோர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். 4 தம்பதியர்கள் கலப்பு திருமணம் செய்து கொண்டவர்கள் ஆவார்கள். இத்துடன் தம்பதிகளுக்கும், தம்பதியர்களின் குடும்பத்துக்கும் உறவினர்களுக்கும் திருமணச் சாப்பாடு ஆலயத்தின் சார்பில் வழங்கப்பட்டது. திருமணத்தை நடத்தி வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தம்பதியர்களுடன் உணவருந்திய காட்சி அங்கு கூடியிருந்த மணமக்களது குடும்பங்களை பெரிதும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது.

இந்தத் திருமணம் எளிய திருமணமாக அமைந்தாலும் இறைவன் ஆசி பெற்ற திருமணமாகும். பொதுவாக எவ்வளவு வசதி படைத்தவர்களுக்கும் கிடைக்காத பாக்கியம் இத்திருமணத்தில் கலந்து கொண்ட தம்பதிகளுக்கு கிடைத்துள்ளது.

இரண்டாவது அட்டைப் படக் கட்டுரை



# திருவேற்காடு திருமணத் திருவிழா

சென்னையை அடுத்துள்ள திருவேற்காடு கருமாரியம்மன் கோயிலில், 50 ஜோடிகளுக்கு, அக்கோயில் நிதியில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களால் 21-2-82 அன்று திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

மணம் கண்டவர்களில் அரிசன வகுப்பைச் சேர்ந்த ஜோடிகள் 34. கலப்பு மணம் புரிந்து கொண்ட ஜோடிகள் 12. பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஜோடிகள் 4. உடல் ஊனமுற்றோர் 1.

இவர்களில் செட்டியார் வகுப்பைச் சேர்ந்தவரான பாலசுப்பிரமணியம், அரிசன வகுப்பைச் சேர்ந்த விதவைப் பெண் லட்சுமி என்பவரை மணந்து கொண்டதும் ஒன்று.

தேவி கருமாரியம்மன் கோயிலையொட்டி அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் இறைவணக்கத்தோடு தொடங்கப்பட்ட இந்த மண விழாவில், அம்மன் சன்னிதானத்திலே அம்மனே அலங்கரிக்கப்பட்ட தங்கத் தேரில் அமர்ந்து காட்சி கொடுத்து, திருமணத் தம்பதியர்களை ஆசீர்வதித்த காட்சி தேவலோகத்தில் அமைந்த திருக்காட்சியாய் விளங்கியது, என அமைச்சர் அவர்கள் தன் உரையில் கூறினார். இக்காணருங் காட்சியை 25,000 பேர்களுக்கு மேல் கண்டுகளித்தனர்.

சமூகத்தில் 500 ரூபாய் கூட கிடைக்காமல் சிலர் தங்கள் பெண்களை திருமணம் செய்து கொடுக்க முடியாமல் பல ஆண்டுகள் வீட்டில் வைத்து விடுகிறார்கள். சிலர் ஆலயங்களுக்குப் போய் தங்கள் பெண்ணுக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து உண்டியலில் பணம் போட்டு வருகிறார்கள். தன் பிள்ளைக்கு நல்ல இடம் கிடைக்க கோவிலை வேண்டி பணம் போடும் பெற்றோர்கள் தாங்கள் போட்ட பணம் எத்தனையோ ஏழை எளிய பெண்களின் திருமணத்திற்கு உதவி இருக்கிறது என்று எண்ணினால் அவர்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். இந்த மகிழ்ச்சிக்கு கோவிலின் சமூகப்பணி காரணமாக இருக்குமானால்



அந்தப் பணியை யாரால் மறுக்க முடியும்? நல்லவர்கள், பெரியவர்கள், மனம் படைத்தவர்கள் வாழ்த்தவே செய்வார்கள் என்று மேலும் அமைச்சர் தமது உரையில் கூறினார்.

திருமணத்தை நடத்திவைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் பேசுகையில் இதுபோன்ற திருமணங்கள் சென்னை அருள்மிகு கருமாரியம்மன் ஆலயத்திலும், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்திலும், தென் ஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஆலயங்களிலும் நடைபெறும் என்று தெரிவித்தார். இதுவரை ஆலயங்களின் சார்பில் 317 இலவச திருமணங்கள் நடத்தப்பட்டுள் ளன என்பதை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிக்கு முன்னர் சுமார் 2.5 லட்ச ரூபாய் செலவில் அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோவிலுக்குச் சொந்தமாக கட்டப்பட்ட திருமண மண்டபத்தையும், தங்கும் விடுதியையும் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். ●

தேவி கருமாரியம்மன் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு. இரா. சர்வேசுவரராவ் வரவேற்புரையாற்றினார். மணமக்களை வாழ்த்தி-தவத்திரு இராமதாஸ் அடிகள், மயிலை தவத்திரு குருஜி சுந்தரராமசாமி, பழநி திருமுருகன் திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திருமதி டாக்டர் இராதா தியாகராசன், திரு. ஜே. சி. டி. பிரபாகரன் எம். எல். ஏ., தேவி கருமாரியம்மன் கோயில் அறங்காவலர் குழு உறுப்பினர் திரு. புலவர் வேதா, அறநிலையத் துறை ஆணையர் திரு. யு. சுப்பிரமணியம் ஐ. ஏ. எஸ்., மயிலை கபாலீஸ்வரர் கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு குப்புசாமி ஆகியோர் உரையாற்றினார்கள்.

**-பி-எல்-ஆர்**

திருமாங்கல்யம், சேலை, வேட்டி உட்பட ஒவ்வொரு ஜோடி மணமக்களுக்கும் ரூபாய் 807.38 பெறுமானமுள்ள திருமணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த வகையில் அத்தனை ஜோடிகளுக்கும் திருமாங்கல்யம் செலவு ரூ. 18,924.40.

மணமக்கள் வேட்டி, துண்டு, சட்டை, ரவிக்கைத் துணி வகையறாச் செலவு ரூ. 5,900.78.

சேலைகள் வாங்கிய தொகை ரூ. 2,040.00.

பித்தளைக் குத்து விளக்கு ஒன்று ரூ. 40.00 வீதம் அத்தனைப் பேருக்கும் ரூ. 2,040.00.

அத்தனைப் பேருக்கும் எவர் சில்வர் தவலைகள் ரூ. 6,660.96.

ஒவ்வொருஜோடிக்கும்இரண்டு எவர்சில்வர் தட்டும் ஒரு குங்குமச் சிமிழும் ரூ. 2,550.00.

தேவி கருமாரியம்மன் படங்கள் ரூ. 510.00.

மெட்டி, குங்குமம், தேங்காய் பழம், மாலை, வெற்றிலைப் பாக்கு, லட்டு வகையறாவுக்கு ஆன செலவு ரூ. 2,550.00.

இந்த வகையில் இத்திருமணத்திற்கென அந்தந்த ஜோடிகளுக்கு மட்டும் கோயில் நிதியில் செய்யப்பட்ட மொத்தச் செலவு ரூ. 41,176.14 ஆகும்.

மணவிழாவிற்குத் தலைமை யேற்று மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் திருமண விழாவை நடத்தி வைத்தார். மணமக்கள் மாலை மாற்றிக் கொண்ட பின். திருமதி ராஜம்மாள் வீரப்பன் அவர்கள் மணமக்களுக்கு மங்கல நாணை வழங்கினார்.

**அமைச்சர் உரை:**

மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் மணமக்களை வாழ்த்திச் சொற்பொழிவாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

கடந்த இரண்டு மூன்று மாதத்தில் பல்வேறு கோயில்களின் சார்பில் 300-க்கும் மேலான திருமணங்கள் நடத்தப்பட்டுள்ளன. இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் இப்படிப்பட்ட திருமணங்கள் 500 நடத்தப்படவிருக்கின்றன. இவை இலவசத் திருமணங்கள் என்பது சரியல்ல; சிறப்புத் திருமணங்கள் என்பதே பொருந்தும்.

இங்கே மணவிழாக் காணும் மணமக்களைப் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

ஆசிபெறுகிற மணமக்களுக்குப் பணம் வைத்துக் கொடுப்பது தமிழகத்தில் தொன்றுதொட்டு இருக்கிற பழக்கமாகும். அந்த அடிப்படையில் என்னுடைய துணைவியார் சார்பிலும் மகள்களின் சார்பிலும் தம்பதிகளுக்குத் தலா நூறு ரூபாய் வழங்குகிறோம். இந்தப் பணம் கோயில் நிதியைச் சேர்ந்தது அல்ல; எங்களது சொந்தப் பணம்.

நான்காண்டுகளில் கோயில்களின் வருமானம் அதிகரித்திருக்கிறது.

வருமானத்தில் முதலிடம் வகிப்பது பழநி திருமுருகன் கோயிலாகும். 1976 ஜூன் வரை அக்கோயில் வருமானம் ஒருகோடியே 6 லட்சத்து 27 ஆயிரத்து 54 ரூபாய் 43 காசாக இருந்தது. 1981-ஆம் ஆண்டு ஜூன் வரை ஒரு கோடியே 95 லட்சத்து 35 ஆயிரத்து 50 ரூபாயாக உயர்ந்துள்ளது. அர்ச்சனைகள் மூலமான வருமானம் 42 லட்சத்து 75 ஆயிரத்து 418 ரூபாய் 29 காசாக அப்போதிருந்தது, இப்போது 1981 ஜூன் வரை 79 லட்சத்து 69 ஆயிரத்து 409



ரூபாய் 24காசாக உயர்ந்துள்ளது.

உண்டியல் வருமானம் எவ்வாறு கண்காணிக்கப்பட்டு வருகிறது என்பதற்கு இது உதாரணமாகும்.

திருச்செந்தூர் முருகன் கோயிலின் 1976-ஆம் ஆண்டு ஜூன் முடிய உள்ள வருமானம் 28 லட்சத்து 58 ஆயிரத்து 603 ரூபாய் 92 காசு. அதன் பிறகு 1981 ஜூன்வரை வந்திருப்பதோ 55 லட்சத்து 24 ஆயிரத்து 362 ரூபாய் 45 காசு.

உண்டியல் வருமானம் 1976 ஜூன் வரை 9 லட்சத்து 69 ஆயிரத்து 693 ரூபாய் 85 காசாகும். 1981 ஜூன் முடிய உள்ள வரவோ 18 லட்சத்து 8ஆயிரத்து 907 ரூபாயாகும்.

திருச்செந்தூர் கோயில் நிலக் குத்தகை, மனை வாடகை மூலம் 1976 ஜூன் வரையான வருமானம் 7 லட்சத்து 13 ஆயிரத்து 848 ரூபாய் 47 காசு. அதன்பின் 1981 ஜூன் வரை 16 லட்சத்து 18 ஆயிரத்து 789 ரூபாய் 65 காசு வருமானம்.

1976 ஜூன் முடிய திருத்தணி கோயில் வருமானம் 39 லட்சத்து 95 ஆயிரத்து 185 ரூபாய் 38 காசாகும். 1981 ஜூன் முடிய 57 லட்சத்து 67 ஆயிரத்து 111 ரூபாய் 69 காசு.

மீனாட்சியம்மன் கோயிலில் 1971 ஜூன் முடிய வருமானம் 34 லட்சத்து 13 ஆயிரத்து 373 ரூபாய் 8 காசு. 81 ஜூன் வரை 48 லட்சத்து 99 ஆயிரத்து 842 ரூபாய் 79 காசு.

இராமேசுவரம் கோயிலில் 14 லட்சத்து 91 ஆயிரத்து 888 ரூபாய் 63 காசு. அது 30 லட்சத்து 46 ஆயிரத்து 746 ரூபாய் 98 காசாக உயர்ந்துள்ளது.

ஸ்ரீரங்கம் கோயிலில் 1971 ஜூன் முடிய 11 லட்சத்து 21 ஆயிரத்து 152 ரூபாய் 58 காசு வருமானம். 1981 ஜூன் வரை 21 லட்சத்து 18 ஆயிரத்து 34 ரூபாய் 23 காசு.

சமயபுரம் மாரியம்மன் கோயிலில் 8 லட்சத்து 62 ஆயிரத்து 846 ரூபாய் 54 காசாக இருந்த வருமானம், 20 லட்சத்து 69 ஆயிரத்து 194 ரூபாய் 85 காசாக உயர்ந்துள்ளது. மாங்காடு கோயிலில் ஒரு லட்சத்து 73 ஆயிரம் ரூபாயாக இருந்த வருமானம் 18 லட்சத்து 25 ஆயிரத்து 410 ரூபாயாக உயர்ந்துள்ளது.

ஆக மொத்தத்தில்—

கடந்த நான்காண்டுகளில, இந்த ஆட்சிக் காலத்திலேதான் கோயில்களின் வருமானம் 80 சதவிகிதம் உயர்ந்துள்ளது.

கோயில்களின் செலவு போக, 1-7-78 வரை சேர்த்து வைக்கப்பட்டிருந்த ரொக்கப் பணம் 4 கோடியே 69 லட்சத்து 38 ஆயிரத்து 224 ரூபாய் 88 காசுகள்.

இப்போது, இந்த நான்காண்டுக் காலத்தில், அதாவது 31-12-81 வரையில் 15 கோடியே 27 லட்சத்து 558 ரூபாய் 20 காசுகளாக அத்தொகை பன்மடங்கு உயர்ந்திருக்கிறது.

இது தவிர தங்க ஆபரணங்கள் வேறு இருக்கிறது.

அறநிலையத்துறை சார்பிலும் கோயில்களின் சார்பிலும் தொழிற் கல்வி நிறுவனங்கள் அமைக்க வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது. குறிப்பாக மகளிருக்கான தொழிற்கல்வி நிலையங்கள் வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இவை பற்றிய ஆக்க பூர்வமான முயற்சிகளை அரசு விரைந்து மேற்கொண்டுள்ளது.

—இவ்வாறு மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசினார்.

மணவிழா முடிவில் - புலவர் திரு. வேதா நன்றி கூறினார்.



# பாரதி-யார்?

## கவிஞர் மலையமான்

[ ஜனவரி 1982-ல் பாரதி நூற்றாண்டு விழாவை ஒட்டி தலைமைச் செயலகப் பண்பாட்டு மன்றம் நடத்திய கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற கவிதை]

சோறளிக்கும் ஏர்உழவன் தலைப்பாகை; என்றும்
மாறாத கூர்விழிகள்; மயக்கு மீசை;
தேர்ந்தெடுத்த நல்முத்து ஒளிமுகம் கொண்ட
பாரதியை, யார்என்றா கேட்கின் றீர்கள்?
பாரதி, தமிழகத்துத் தென்றல்பெற்ற புயல்காற்று;
அமைதிக் கருவீன்ற புரட்சி நெருப்புப்பூ;
பின்ன மதியிடையே பிறந்த முழுஎண்;
சின்ன மானிடரின் புதுவை ஆண்ஔவை;
'சாதி இரண்டொழிய வேறில்லை,' என்ற
ஆதித் தத்துவத்தின் அவதாரம்; வாதுகள்
செய்யவந்த நாக்குக்கு வீரவெட் டரிவாள்;
வையம் தழைக்கவந்த கட்டழகு வட்டநிலா;
பாவேந்தர் வல்லூறு வளர்த்த தமிழ்ப்பருந்து;
சாவேந்தும் காட்டிடையே வந்தமர்ந்த மணமேடை;
தாழ்வுற்ற கனக லிங்கத்து உடன்பிறப்பை
வாழ்விக்கப் பூணூல் கொடியேற்றும் மணிக்கை;
சீர்கேடு நாற்ற அறியாமைச் சகதியிலே
வேர்அறுந்து போன பாரத நெடுமரத்தைக்
தனியாகத் தாங்கத் துடிதுடித்த தனிவிழுது;
தன்நிழலைக் கண்டு தானே நடுநடுங்கும்
அந்நாளில், 'அச்சமில்லை' என்றே முரசறைந்து
சொல்லோடு செயலுக்கு மணம்கண்ட பூமாலை;
புதுக்கவிதைப் படைப்பைத் தாள்கட்டில் கிடத்தி
மெதுவாகச் சோதித்த இலக்கிய ஆய்வகம்;
பரலோக முக்திக்குத் தாவிய சிந்தனையைத்
தரைலோக விளைச்சலுக்குப் பாய்ச்சிய சொல்காவிரி;
புல்லுக்குப் பின்னின்ற கல்நெஞ்சக் கணவனது
உதைமுத்தம் பெற்ற விழிமுத்து மங்கையர்க்கு
நிமிர்ந்த நடைத்தூண் மீதே, நல்லறிவு,
திமிர்ந்த ஞானப் பார்வைப் பந்தல்கீழ்,
விடுதலைப்பெண் வேள்வியை நடத்திய பேரொளி;
தன்னல இருட்டறையில் தடுமாறிக் கொண்டிருந்த
சின்ன புத்திகள் சிந்தனைத் தெளிவுபெறக்
கவிதைக் குமிழ்விளக்கில் உணர்ச்சிப் புத்தொளியை
அவிழ்த்து விட்ட அருளாட்சி மின்சாரம்;
நைந்துருகிக் கரைந்த பழம்பாஞ் சாலிக்குப்
பைந்தமிழ்ப் புடவையில் புரட்சிப் புதுச்சரிகை
இடைவைத்து நெய்தளித்த நடைஅழகு அற்புதம்;
ஆண்டஅக் கண்ணனையே அடிமையாய் ஆக்கி
வேண்டும்தன் காதலி யாகவும் மாற்றிப்
போற்றும் பக்திக்குளம் பூத்த புதுமலர்;
காக்கை குருவியையும் தன்ஜாதியாய்க் கொண்டு
தாக்கும் மாட்டுடன், பாக்குயில், குரங்குக்
கூட்டத்தில் தத்துவம் கூறிய வழிகாட்டி;
உலகப் பொதுமை நலக்கொற்றக் குடைக்கீழ்
எளிமை அரியணையில், சமுதாய அரசனை
இளமை, அரசியல் இன்பத் துணையுடன்
வளம்பெற ஏற்றிய வண்டமிழ் வள்ளல்;
அவர்,
சேர்ந்த சிறுசூரிய காந்தி என்னையும்
ஆர்வக் கதிரால் மருவிய தமிழ்ச்சுடர்!

# புதியதோர் உலகு செய்வோம்!



உலகில் முன்னணியில் இருக்கும் தொழில் துறை நாடுகளில் ஒன்றாக இன்றைக்கு நமது நாடு திகழ்கிறது. ஐந்தாண்டுத் திட்டங்கள் விவசாயம் மற்றும் தொழில் துறையில் தொழில் நுட்ப மாற்றங்கள் பெருமளவில் நமது நாட்டில் உண்டாகியுள்ளன. பயிற்சி பெற்ற மனித சக்தி பெருவாரியாகக் கிடைக்கிறது. தன்னிறைவை நோக்கிப் பாரதம் நிலையான வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. தனி நபர் வருமானம் அதிகமாக இல்லாவிட்டாலும் நமது நாடு தன்னுடைய பழைய பிரச்சினைகளைப் போக்கி வளர்ச்சிப் பாதையில் ஏறுநடை போடுகிறது.

பொதுத் திட்டங்களில் மேம்பாட்டுக்காகச் சிறப்பு நடவடிக்கையைக் கருத்தில் கொண்டு 1975-ல் அறிவிக்கப்பட்ட திட்டம் 20 அம்சத் திட்டம்.

இந்த திட்டத்தின் பல இலக்குகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1976-ல் கொத்தடிமைத் தொழிலாளர்கள் ஒழிப்புக்கான சட்டம் இயற்றப்பட்டது.

கடத்தல் காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறைந்த வருமானம், நடுத்தர வருமானப் பிரிவினரில் கிட்டத்தட்ட லட்சம் பேருக்குமேல் வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. சாலைப் போக்குவரத்துக்கான தேசிய பர்மிட் திட்டம் அமலுக்கு வந்தது.

ஐம்பது லட்சம் ஹெக்டேர் பரப்புக்குப் பாசன வசதி அளிக்கும் இலக்கு அடையப்பட்டுள்ளது. நிலத்தடி நீரை உபயோகப் படுத்தும் தேசிய திட்டம் மெற்கொள்ளப் பட்டது.

உயர் அனல் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 20 அம்சத் திட்டத்தின் மற்ற அம்சங்களிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

பழைய 20 அம்சத் திட்டத்தின் பல நோக்கங்கள் நிறைவேறிப் பல இலக்குகள் கைகூடி புதிய சவால்கள் ஏற்பட்டதால் இந்தத் திட்டம் சீரமைக்கப்பட்டுள்ளது. புதிய 20 அம்சத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை 1982 ஜனவரி 14-ம் தேதி வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றும்போது இந்தியத் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் இத்திட்டத்தை நாட்டு மக்களுக்கு அறிவித்தார்.

புதிய 20 அம்சத் திட்டத்தின் சிறப்புக் கூறுபாடுகள் வருமாறு:—

(1) பாசன வசதியை அதிகரித்தல். புன்



செய் விவசாயத்திற்கு இடுபொருட்களை அளித்தல்.

**(2) பருப்பு வகைகள், உணவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்க சிறப்பு நடவடிக்கைகள்.**

(3) ஒருங்கிணைந்த கிராமப்புற மேம்பாடு, தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தி விரிவாக்குதல்.

(4) விவசாய நில உச்சவரம்பு நிர்ணயத்தை சரிவர அமலாக்கி உபரி நிலத்தை வினியோகித்தல்.

(5) விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நன்கு அமலாக்குதல்.

(6) கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளித்தல்.

(7) ஷெட்யூல்டு வகுப்பினர் ,மலைஜாதியினர் வளர்ச்சிக்குத் துரிதப் பணிகளை மேற்கொள்ளுதல்.

(8) எல்லாப் பிரச்சினைக்கும் இடமான கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல்.

(9) கிராமப் புறக் குடும்பங்களுக்கு வீட்டு மனைகளை ஒதுக்கி அவற்றுக்கு வீடு கட்ட உதவுதல்.

(10) குடிசைப்பகுதிகளை அபிவிருத்தி செய்து பொருளாதாரத்தில் பலவீனமான பகுதியினருக்கு வீடுகட்டும் திட்டங்களை மேற்கொண்டு, அகாரணமாக நிலங்கள் விலை உயர்வைத் தடுத்தல்.

(11) விசை உற்பத்தியை அதிக பட்சமாக்கி எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளித்தல்.

(12) தீவிரமாகக் காடு வளர்க்கும் பணிகளை அமலாக்கி சாண எரிவாயு மற்றும் மாற்று எரிசக்தி அபிவிருத்தி செய்தல்.

(13) இஷ்டப்பூர்வ அடிப்படையில் மக்கள் இயக்கமாகக் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுதல்.

(14) அனைவருக்கும் ஆரம்ப சுகாதார வசதியைக் கணிசமாக அதிகரித்துத் தொழுநோய், காசநோய், கண்பார்வை இழத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துதல்,

(15) பெண்கள் ,குழந்தைகளுக்கு நல்ல திட்டங்களைத் துரிதப் படுத்திக் கர்ப்பிணிகளுக்கும், குழந்தை பெற்ற பெண்களுக்கும் குறிப்பாகப் பிற்பட்ட மலைப்பகுதிகளில் சத்துணவு அளித்தல்.

**(16) 6 முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் குறிப்பாகச் சிறுமிகளுக்கு ஆரம்ப கல்வியைப் பரப்புதல். வயது வந்தோரிடையே அறியாமையைப் போக்க மாணவர்களையும், சேவாஸ்தாபனங்களையும் பயன்படுத்துதல்.**

(17) பொது வினியோக முறையை விரிவாக்குதல், மாணவர்களுக்கு முன்னுரிமையுடன் பாடப் புத்தகங்கள்,நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல். வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

(18) முதலீட்டு நடைமுறையைத் தாராளமாக்கித் திட்டங்கள் உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்காகத் தொழில்துறைக் கொள்கைகளைச் சீரமைத்தல். நவீன தொழில் நுட்பம் பெற கைத்தறி ,கைவினை, சிறு கிராமத் தொழில்களுக்கு உதவுதல்.

(19) கள்ளக் கடத்தல் காரர்கள் பதுக்கல் காரர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்துக் கறுப்புப் பணத்தைத் தடுத்தல்.

(20) அரசுத்துறை நிறுவனங்கள் செயல்பாட்டில் மேம்பாடு காணுதல்.

பழைய திட்டத்தில் பல அம்சங்களைப் புதிய திட்டம் சேர்த்துக் கொண்டு விவசாயம் தொழில்துறை உற்பத்தியைப் பெருக்குவதைப் பெரிதும் வலியுறுத்துகிறது.

மக்கள் வாழ்வில் மேம்பாடு காண்பது அரசின் முதல் பணியாகும்.

## திருத்தி அமைக்கப்பட்ட 20 அம்சத் திட்டத்தின் செயல்பாட்டு விளக்கம் :



**பாசனமும் பண்ணைத் தொழில் நுட்பமும்.**

**அம்சம் 1:** பாசன வசதியை அளித்தல்; புன்செய் விவசாயத்திற்கு இடுபொருட்களை அளித்தல்;

1980-81ம் ஆண்டில் 5 கோடியே 66 இலட்சம் ஹெக்டேருக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. இதில் 2 கோடியே 66 இலட்சம் ஹெக்டேர் பெரிய மற்றும் நடுத்தர பாசனப் பணிகள் மூலம் பலனடைந்தன . 3 கோடி ஹெக்டேர் சிறுபாசனப் பணிகள் மூலம் பலனடைந்தன.

ஆறாவது திட்டத்தின் எஞ்சியிருக்கும் மூன்றாண்டுக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு 30 லட்சம் ஹெக்டேர் என்ற சராசரி விகிதத்தில் மேற்கொண்டு 90 லட்சம் ஹெக்டேருக்குப் பாசன வசதிகளைக் கொண்டு வரவும் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பாசன வசதியின் கீழ் கூடுதல் நிலப்பரப்பைக் கொண்டு வருவோமானால் மனித வரலாற்றில் இதுவே மிகப்பெரிய நிகழ்ச்சியாக இருக்கும்.

ஆறாவது திட்டத்தில் விவசாயிகளுக்கு நாடு முழுவதும் பாசன வசதி அளிப்பதில் கீழ்க்கண்டவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

1. மழை நீரை விவசாயப் பண்ணைக் குட்டைகளில் தேக்கிப் பராமரித்தல். 2. நிலத்தடி நீர் ஆற்றல் திறனைப் பயன்படுத்துதல். 3. தரைமட்ட நீர்வளங்களைக்கண்டறிந்து பயன்படுத்துதல். 4 ஆறுகளில் உள்ள உபரி நீரைப் பயன்படுத்துதல். 5 சூரிய சக்தியைப் பயன்படுத்துவதில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகளைத் தீவிரப்படுத்துதல்.



பருப்புகள் - எண்ணெய் வித்துக்கள்

**அம்சம் 2:** பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை அதிகரிக்கச் சிறப்பு நடவடிக்கைகள்.

*1984-85*ம் ஆண்டிற்குள் *1* கோடியே *45* லட்சம் டன் பருப்புகளையும், *1* கோடியே *30* லட்சம் டன் எண்ணெய் வித்துக்களையும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று ஆறாவது திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த இலக்குகளை அடைவதற்காக விவசாயிகளுக்கு உதவிடப் பல்வேறு திட்டங்கள் துவக்கப்பட்டுள்ளன.



கிராமப்புற வேலைவாயப்பு

**அம்சம் 3:** ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டங்களை வலுப்படுத்தி விரிவாக்குதல்.

**1980 அக்டோபர் 2ம் தேதியிலிருந்து நாட்டிலுள்ள அனைத்து வட்டாரங்களுக்கும் ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.**

இத்திட்டத்தின் கீழ் இதுமாதிரி ஒரு கோடியே 50 இலட்சம் குடும்பத்தினருக்கு ஆறாவது திட்ட காலத்தில் உதவி அளிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு 1500 கோடி ரூபாயும் இதே தொகைக்கு மாநில அரசு 1500 கோடி ரூபாயும் சமமாக அளித்து கிராமப்புற வேலைவாய்ப்புக்கு வழிகாட்டும்.

ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் மலைஜாதியினர் அதிகபட்சம் பலனடையுமாறு பார்த்துக் கொள்ளப்படுவார்கள்.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம்: ஆறாவது திட்டக் காலத்தில் இதற்காக மத்திய அரசும் மாநில அரசுகளும் மொத்தம் 1620 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது.

தேசிய பால்பண்ணை அபிவிருத்தித் திட்டத்தின்மூலம் நாட்டில் கிட்டத்தட்ட ஒரு கோடியே 50 இலட்சம் குடும்பங்கள் பலனடையும்.



நிலச்சீர்திருத்தம்

**அம்சம் 4:** விவசாய நில உச்சவரம்பு நிர்ணயத்தைச் சரிவர அமலாக்கி உபரி நிலத்தை வினியோகித்தல்.

நாடு முழுவதும் இருக்கும் நிலமற்ற நபர்களுக்கு உபரி நிலத்தை வினியோகிப்பதை இதன் நோக்கமாகும்.




குறைந்த பட்ச ஊதியம்

**அம்சம் 5: விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நன்கு அமலாக்குதல்.**

விவசாயத் தொழிலாளர்களுக்கு, குறைந்த பட்சக் கூலிகளை மத்திய, மாநில, யூனியன் பிரதேச அரசுகளும் வரையறுத்துள்ளன. மாநில அரசுகளும் யூனியன் பிரதேச நிர்வாகங்களும் நிர்ணயிக்கும் குறைந்தபட்சக் கூலி விகிதங்கள் ஒன்றுக்கொன்று மாறுபடும்.

*1980*-ம் ஆண்டு துவக்கத்திலிருந்து மத்திய அரசும் சரி மாநில அரசுகளும், யூனியன் பிரதேசங்களும் விவசாயத்தில் தேர்ச்சி இல்லாத தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்சக் கூலிகளைத் திருத்தி அமைத்திருக்கிறது.

தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தைச் சிறப்பாக அமல் நடத்துவதன் மூலம் குறைந்தபட்சக் கூலிகள் பட்டுவாடாவைச் சிறப்பாக அமல் நடத்த முடியும்.



கொத்தடிமைகளுக்கு மறு வாழ்வு

**அம்சம் 6** கொத்தடிமைகளுக்கு மறுவாழ்வு அளித்தல்.

1976-ம் ஆண்டில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் ஒழிப்புக்கான சட்டம் நிறைவேற்றப்பட்டது.

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுவாழ்வுக்காக மத்திய அரசு ஆதரவிலான ஒரு திட்டம் 1978-79ம் ஆண்டில் துவக்கப்பட்டது. இத்திட்டத்தில் செலவிடப்படும் மொத்தத் தொகையின் 50 சதவிகிதம் மத்திய அரசிடமிருந்து கிடைக்கும்.

கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 22 ஆயிரம் கொத்தடிமைத் தொழிலாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டதில் 1 லட்சத்து 9 ஆயிரம் பேருக்கு 1980-81 இறுதிக்குள் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியிருக்கும் 13,000 பேருக்கு மறுவாழ்வுக்கான பணிகள் 1981-82 வருடாந்தரத் திட்டத்தில் நிறைவேற்றப்படும்.




ஷெட்யூல்டு வகுப்பு மலை ஜாதிகள்

**அம்சம் 7:** ஷெட்யூல்டு வகுப்பினர், மலை ஜாதியினர் வளர்ச்சிக்குத் துரிதப் பணிகளை மேற்கொள்ளுதல்.

ஷெட்யூல்டு வகுப்புக் குடும்பங்கள் வறுமைக்கோட்டிலிருந்து விடுபட மாநில திட்டங்களுக்கும் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலங்கள் நிர்வாகப் பொறுப்பிலும் 4,000 கோடி ரூபாய் திட்டப் பணிகளுக்கு மதிப்பிடப்பட்டுள்ளது. நடப்புதிட்டக் காலத்தில்சிறப்புத் திட்டத்துக்காக மேற்கொண்டு 600 கோடி ரூபாயை விசேஷ மத்திய உதவித் தொகையாக வழங்கவும் மத்திய அரசு முடிவு செய்துள்ளது.



குடிதண்ணீர்

**அம்சம் 8:** கிராமங்களுக்குக் குடிநீர் வழங்குதல்

பாதுகாப்பான குடிநீர் அவசியத் தேவை. குடி நீர் இல்லாமல் கடுமையான தட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களுக்கும் பாதுகாப்பான குடி நீர் வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கம். 1971-72ம் ஆண்டில் நாடு தழுவி மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் கிட்டத்தட்ட 1 இலட்சத்து 52 ஆயிரம் கிராமங்கள் பாதுகாப்பான குடிநீர் இல்லாமல் சிரமப்படுவதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

ஆறாவது திட்டக் காலத்தில் பிரச்சினைக்குரிய கிராமங்கள் அனைத்திற்கும் குறைந்தபட்சம் குடிநீர் ஆண்டு முழுவதும் கிடைக்கச் செய்வதற்காகவாவது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதில் கிராமப்பகுதிகளில் ஷெட்யூல்டு வகுப்பு மலைஜாதியினர் தேவைகளுக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படும்.




வீட்டு மனைகள்

**அம்சம் 9:** கிராமப்புற குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்கி அவற்றுக்கு வீடு கட்ட உதவுதல்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைகள் அளிப்பதற்கான திட்டம் 1972-73ல் அறிமுகப்படுத்தப்பட்டது. ஐந்தாவது திட்டத்தில் இந்தத் திட்டம் மாநிலப்பிரிவுக்கு மாற்றப்பட்டு குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. நிலமற்ற கிராமப்புறத் தொழிலாளர்கள் அனைவரும் பலனடையும் விதத்தில் இது விஸ்தரிக்கப்பட்டது.

குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின் கீழ் இத்திட்டத்திற்காக ஐந்தாவது திட்டத்தில் 55 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1974 முதல் 79 வரையில் மொத்தம் செலவான தொகையோ 72 கோடி ரூபாய் 1979-லிருந்து 81ம் ஆண்டு வரை செலவுத் தொகை 110 கோடி ரூபாய்க்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வீட்டுமனைகள் தேவைப்படும் தகுதி வாய்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை 1கோடி 45 இலட்சமாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 77 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டுள்ளன. 1980 மார்ச் மாதத்துக்குள் 5 இலட்சத்து 60 ஆயிரம் குடும்பங்கள் மனைகளில் வீடுகளைக் கட்டிக் கொண்டுள்ளனர். 68 இலட்சம் குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டும். ஒரு கோடியே 39 இலட்சம் குடும்பங்களுக்குக் கட்டட நிர்மாண உதவிகள் அளிக்கப்பட வேண்டும். 1985 மார்ச் மாதத்துக்குள் நிலமற்ற குடும்பங்கள் அனைத்துக்கும் வீட்டு மனைகள் வழங்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## நகர்ப்புற மேம்பாடு

**அம்சம் 10:** குடிசைப் பகுதிகளை அபிவிருத்தி செய்து பொருளாதாரத்தில் பலவீனமான பகுதியினருக்கு வீடு கட்டும் திட்டங்களை மேற்கொண்டு அகாரணமாக நிலங்கள் விலை உயர்வைத் தடுத்தல்.

1972ம் ஆண்டில் விசேஷ சேமநலத் திட்டங்களில் மத்திய திட்டத்தின் கீழ் சுற்றுப்புறக் குடிசைகள் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் துவங்கியதிலிருந்து இந்தத் திட்டம் குறைந்தபட்சத் தேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாக மாறியது. மாநிலப் பிரிவுக்கு மாற்றப்பட்டது. 1978 மார்ச் மாதம் வரை இத்திட்டத்தின்கீழ் சுமார் 50 இலட்சம் குடிசை வாசிகள் பலனடைந்திருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1978 ஏப்ரல் மாதத்திலிருந்து 1980 மார்ச் மாதம் வரை இத்திட்டத்தின் கீழ் சுமார் 18 இலட்சம் குடிசைவாசிகள் பலனடைந்திருப்பார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1990க்குள் குடிசைவாசிகள் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 78 லட்சத்து 70 ஆயிரமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 68 லட்சம் பேர் 1980மார்ச் வரை இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டனர். 1890ம் ஆண்டிற்குள் மேற்கொண்டு 3 கோடியே 10 லட்சத்து 70 ஆயிரம் குடிசைவாசிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படுவார்கள் என்று கணக்கிட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு வீடுகள் கட்டுவதற்காக 3,000 ரூபாய் வரை கடன் உதவி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. சலுகை வட்டி விகிதங்களில் 20 முதல் 25 ஆண்டுக்காலத்தில் இந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தலாம். ஆறாவது திட்டத்தில் இதற்காகச் சுமார் 485 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16 இலட்சத்து 20 ஆயிரம் குடும்பங்கள் இதன் மூலம் பலனடைவார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

வீட்டு வசதி, நகர்ப்புற அபிவிருத்தி கார்ப்பொரேஷனும் சுமார் 180 கோடி ரூபாய் முதலீடு செய்யும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு சராசரி தலா 6,000 ரூபாய் வீட்டு வசதி,நகர்ப்புற அபிவிருத்திகார்ப்பொரேஷன் வழங்கும். 3 லட்சம் குடியிருப்புக்களை நிர்மாணிப்பதற்கு மொத்தச் செலவுத்தொகை பயன்படும்.

## மின்சாரம்

**அம்சம் 11:** விசை உற்பத்தியை அதிகபட்சமாக்கி எல்லா கிராமங்களுக்கும் மின்வசதி அளித்தல்.

ஆறாவது திட்ட காலத்திற்குள் 191 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

1980-81ல் 118.5 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தி காணப்பட்டது. 1981-82ல் 130 மில்லியன் யூனிட்டுகள் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது முழு உற்பத்தித் திறனை பூரணமாகப் பயன்படுத்துவதன் மூலமும் திட்டமிடப்பட்டுள்ள கூடுதல் ஆற்றல்திறன் நிலையங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றுவதன் மூலமும் திட்ட இலக்கை எட்டிப் பிடித்து மின்சார உற்பத்தியை அதிகரிக்க முடியும்.





## காடு வளர்ப்பும் மாற்று எரிசக்தி அபி விருத்தியும்

**அம்சம் 12:** தீவிரமாகக் காடு வளர்க்கும் பணிகளை, அமலாக்கி சாணஎரிவாயு மற்றும் எரிசக்தி அபிவிருத்திசெய்தல்:

நாட்டின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 22.8 சதவிகிதம், காடுகள் வளர்ந்திருக்கும் பகுதியாகும். தேசிய காடு வளர்ப்புக் கொள்கையில் அதிகபட்ச வரையறுக்கப்பட்டுள்ள 33 சதவிகிதத்தில் 22.8 சதவிகிதம் அளவுக்கே காடுகள் பகுதி உள்ளது. நாட்டின் தேவைகள் அனைத்தையும் கணிசமான அளவுக்குக் காடுகள் பகுதி இல்லாததால் சமாளிக்க முடியாமல் உள்ளது.

விசேஷ காடுகள் வளர்ப்புத் திட்டத்தை மாநில அரசுகள் வலியுறுத்துவதற்கு ஏதுவாக மத்திய அரசு ஆதரவிலான இரண்டு திட்டங்கள் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

1979-80ம் ஆண்டிலிருந்து மத்திய அரசு ஆதரவிலான சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்கள் மாநிலப் பிரிவுக்கு மாற்றப்பட்டன. இருந்தாலும் ஆறாவது திட்ட காலத்தில் 100 கோடி ரூபாய் செலவுத் தொகையில் 100 மாவட்டங்களில் சமூகக் காடுகள் வளர்ப்பு'' என்னும் புதிய, மத்திய அரசு ஆதரவிலான திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### எரிவாயு

பாரதத்தின் சுமார் 30 முதல் 40 கோடி டன் திட்ட அளவுக்கு கால்நடை சாணம் எரிவாயு உற்பத்திக்கு அடிப்படையாகக் கிடைக்கிறது. இதுதவிர தாவரக் கழிவுகளும் இதர ரசாயனக் கழிவுகளும் எரிவாயு உற்பத்திக்குப் பெருமளவு கிடைக்கிறது. இந்தப் பொருட்களை முழுமையாகப் பயன்படுத்தினால் 7,000 கோடி க்யுபிக் மீட்டர் எரிவாயு கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

எரிசக்தியைப் பராமரிப்பதன் அவசர அவசியத்தை உணர்ந்து, ஆறாவது திட்டக் காலத்தில் தேசிய இயற்கைவாயு அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தேசிய அரசு செயல்படுத்தியிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் 10 இலட்சம் குடும்ப அளவிலான எரிவாயு ஆலைகளுக்கும் நூறு சமுதாய எரிவாயு ஆலைகளுக்கும் திட்டமிடப்பட்டுள்ளது. திட்ட ஒதுக்கீடான 50 கோடி ரூபாய் செலவுத்தொகையில் 4 லட்சம் குடும்ப அளவிலான எரிவாயு ஆலைகளுக்கு ஒரு திட்டத்தையும் விவசாயம் மற்றும் கூட்டுறவுத் துறை துவக்கியிருக்கிறது.



### குடும்ப நலம்

**அம்சம் 13:** மக்கள் இயக்கமாகக் குடும்பநலத் திட்டத்தை நிறைவேற்றுதல்.

குடும்பநலத் திட்டம் உள்ளபடியே மக்கள் இயக்கமாகும். இப்போது மக்கள் சிறு குடும்பத்தின் பலன்களை உணர்கிறார்கள். மக்களுக்குக் குடும்பநலம் பற்றி போதித்து அவர்களைச் சொந்த விருப்பத்தில் குடும்ப நலத் திட்டத்தைக் கடைப்பிடிக்க வைப்பதே அரசின் பொறுப்பாகும். மக்களை இந்த இயக்கத்தில் பெருமளவுக்குச் சுயமாக முன்வந்து ஈடுபடுத்த பயிற்சி பெற்ற அரசு ஊழியர்கள் கிராமப்புற மற்றும் நகர்ப்புற மருத்துவ நிலையங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். மக்கள் எந்த முறையில் அதாவது கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் மூலமோ, மாத்திரைகள் மூலமோ குடும்ப நலத்தைக் கட்டுப்படுத்த விரும்புகிறார்களோ அதை மேற்கொள்ளச் செய்யவேண்டியது இவர்களின் பொறுப்பாகும்.

கிராம மட்டத்திலிருந்து தேச மட்டம் வரையிலும் மக்கள் தாமே முன்வந்து குடும்ப நலத் திட்டத்தை ஏற்கச் செய்வது மிகவும் அவசியம். குடும்பநலத் திட்டத்தை மக்கள் ஏற்கச் செய்வதில் அவர்களுக்குக் கல்வி அறிவு ஊட்டுவதில் சமூக, அரசியல், மத, கலாச்சார ஸ்தாபனங்களுக்குப் பொறுப்பிருக்கிறது.



## மக்கள் நல்வாழ்வு

**அம்சம் 14:** அனைவருக்கும் ஆரம்ப சுகாதார வசதியைக் கணிசமாக அதிகரித்து தொழுநோய் ,காசநோய், கண் பார்வை இழத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தல்.

கி.பி. 2000-ம் ஆண்டுக்குள் ''அனைவருக்கும் சுகாதாரம்'' என்ற இலக்கை அடைய வேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டின் ஒவ்வொரு மனிதனும் தன்னை நல்ல ஆரோக்கியத்தில் வைத்திருக்க நியாயமான வாய்ப்புக்கள் வழங்கப்படவேண்டும் என்பதே இத்திட்டத்தின் குறிக்கோள்.



கிராமப்புறச் சுகாதார கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டும் திருத்தியமைக்கப்பட்டும் வருகிறது. கிராமங்களில் ஆயிரம் பேருக்கு சுகாதாரக் கல்வி பற்றி போதிப்பதற்காகப் பயிற்சி பெற்ற சுகாதாரப் பாதுகாவலர் நியமனம் செய்யப்பட்டு வருகிறார். 5,000 பேர் உள்ள கிராமங்களுக்கு ஒரு துணை நிலையம் செயல்படும். (மலைப்பகுதி மற்றும் கடினமான தொலைதூரப் பகுதிகளில் 3,000 பேராக இருந்தால் அங்கும் ஒரு துணைநிலையம் செயல்படும்) நமதுநாட்டில் 30,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படும். (மலைப் பகுதி மற்றும் சிரமமான தொலைதூரப் பகுதியாக இருந்தால் அங்கு 20,000 பேருக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படும்) 1979-80ம் ஆண்டில் நாட்டில் 1 லட்சத்து 40 ஆயிரம் சுகாதாரப் பாதுகாவலர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். 50 ஆயிரம் துணை நிலையங்களும் 5400 சுகாதார நிலையங்களும், 340 கிராமப்புற மருத்துவ மனைகளும் செயல்பட்டன. ஆறாவது திட்டத்தில் மேற்கொண்டு நான்கு லட்சம் சுகாதாரப் பாதுகாவலர்களையும், 174 கிராமப்புற மருத்துவ மனைகளையும், 40 ஆயிரம் துணை நிலையங்களையும், 1,600 ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறைந்த பட்சத் தேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாகும் இது. இதற்காக மத்திய, மாநில திட்டங்களில் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒரு திட்டம் நூறு சதவிகிதம் அடிப்படையில் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறைந்தபட்சம் 90 சதவிகிதம் தொழுநோய் பாதிப்பைக் கண்டுபிடித்து அதில் குறைந்தபட்சம் 40 சதவிகிதம் அடியோடு ஒழிப்பதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த நூற்றாண்டின் இறுதிக்குள்ளாக இந்த நோயை அடியோடு விரட்டுவதற்காக, தீவிரத் திட்டத்தை வகுத்துச் செயல்படுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

## மகளிர், குழந்தைகள் நலன்

**அம்சம் 15:** பெண்கள், குழந்தைகளுக்கு நல்ல திட்டங்களைத் துரிதப்படுத்தி கர்ப்பிணிகளுக்கும், குழந்தை பெற்ற பெண்களுக்கும் குறிப்பாகப் பிற்பட்ட மலைப்பகுதிகளில் சத்துணவு அளித்தல்.

மகளிரின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு அதிக கவனம் செலுத்தப்படும். வரதட்சிணை போன்ற சமூகக் கேட்டுப் பழக்கவழக்கங்களுக்குஎதிராக பொதுமக்கள் கருத்தும் சட்ட அனுமதியும் துரிதப்படுத்தப்படும். கல்வி, சுகாதாரம், சத்துணவு, மகளிருக்கும், குழந்தைகளுக்கும் கிடைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் விசேஷ கவனம் செலுத்தப்படும். 1975-76ம் ஆண்டு காலத்தில் பரீட்சார்த்த அடிப்படையில் 33 கிராமப்புற மலைஜாதி வட்டாரங்களிலும் நகர்ப்புற, குடிசைவாசிப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குழந்தைகள் அபிவிருத்தி சேவைகள் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஷெட்யூல்டு வகுப்பு, மலைசாதியினர் மற்றும் சமூகத்தின் இதர நலிவுற்ற பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகளில் கணிசமான அளவு ஒருங்கிணைந்த குழந்தைகள் அபிவிருத்தித்திட்ட நிகழ்ச்சிகள் மூலம் நல்லபலன் அடைந்திருக்கின்றனர். இத்திட்டத்தின் செயல்திறனை மேம்படுத்த, பல சீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திட்டங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட்டால் நோய்த்தடுப்பு ஊசி மற்றும் சுகாதார சேவைகள் மூலம் 1 கோடியே 40 இலட்சம் குழந்தைகள் பலனடைவார்கள். சத்துணவுத் திட்டத்தின் மூலம் 60 இலட்சம் குழந்தைகள் பலனடைவார்கள். முறைசாராக் கல்வித் திட்டத்தின் மூலம் 30 லட்சம் குழந்தைகள் பலனடைவார்கள். மிகவும் பின்தங்கிய கிராமப்புற மலைப்பகுதி மற்றும் நகர்ப்புற குடிசைவாசிப் பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு இந்தப் பலன்கள் கிட்டும்.



## கல்வி

**அம்சம் 16:** ஆறு முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவருக்கும் குறிப்பாக சிறுமிகளுக்கு ஆரம்பக் கல்வியைப் பரப்புதல், வயது வந்தோரிடையே அறியாமையைப் போக்க மாணவர்களையும் தொண்டு நிறுவனங்களையும் பயன்படுத்துதல்.

1990ம் ஆண்டிற்குள் நாடு முழுவதும் இருக்கும் 16 கோடியே 30 இலட்சம் குழந்தைகள் (6 வயது முதல் 14 வயது வரை) முறைசாராக் கல்வியிலோ அல்லது முறைசார்ந்த கல்வியிலோ ஆரம்பப் பள்ளிகளில் பெயரைப் பதிவு செய்து கல்வி கற்க வேண்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது 9 கோடியே 30 இலட்சம் குழந்தைகள் மட்டுமே பள்ளிகளுக்குப் போய் வருகிறார்கள். அடுத்த பத்தாண்டுகளில் மேலும் 7 கோடிக் குழந்தைகள் பள்ளிக்கூடங்களில் கல்வி பயில அனுப்பப்பட வேண்டும். இதன் மூலம் பின்தங்கிய வகுப்பினர் மற்றும் பெண்கள் சமூக, பொருளாதார அனுகூலம் பெறுவார்கள்.

அடுத்த பத்தாண்டுகளில் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து கல்வி கற்க வேண்டிய குழந்தைகளில் ஆண்கள் 2 கோடியே 50 லட்சம் பேர், பெண்கள் 4 கோடியே 50 லட்சம் பேர். ஷெட்யூல்டு வகுப்பு மலைஜாதியினர், நில மற்ற தொழிலாளர்கள் ஆகியவர்களின் குழந்தைகளையும் குறிப்பாகப் பெண் குழந்தைகளையும் பள்ளிகளில் சேர்ப்பதில் முக்கியத்துவம் அளிக்கப்படும். நலிவுற்ற பிரிவினரின் குழந்தைகளுக்கும் குறிப்பாக பெண் குழந்தைகளுக்கும் இலவச புத்தகங்கள், எழுதுபொருட்கள், சீருடைகள், உபகாரச் சம்பளங்கள் போன்ற தகுந்த ஊக்கச் சலுகைகள் அளிக்கப்படும். ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை தற்போது பள்ளிகளில் கல்வி பயின்று வரும் ஷெட்யூல்டு வகுப்பாரின் குழந்தைகளின் எண்ணிக்கை ஒரு கோடியே 25 இலட்சம். இனிவரும் ஆண்டில் மேலும் ஒரு கோடியே 12 இலட்சம் ஷெட்யூல்டு வகுப்புக் குழந்தைகள் பள்ளிகளில் சேரும்படி செய்யப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தற்போது பள்ளிகளில் படித்து வரும் மலைஜாதிக் குழந்தைகளின் எண்ணிக்கை சுமார் 50 லட்சம். 1990 க்குள் மேற்கொண்டு 1 கோடியே 10 இலட்சம் மலைஜாதி வகுப்பு குழந்தைகள் கல்விக்கூடங்களில் சேர்க்கப்படுவார்கள். நலிவுற்ற பிரிவைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளின் முழுநேர முறைசார்ந்த பள்ளிகளுக்குப்போய் கல்வி பயில முடியாத நிலை இருப்பதால் முறைசாராக் கல்வி நிலையங்களைத் துவக்குவதில் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

ஆரம்பப் பள்ளிகளில் கல்வியின் தரம் உயர்த்தப்படும். பள்ளிகளுக்குத் தகுந்த கட்டடங்களும், போதுமான சாதனங்களும் வழங்கப்படும். உள்ளூர், சுற்றுப்புற சூழ்நிலைக்குப் பொருத்தமாக கல்விச் சாலைகள் திருத்தி அமைக்கப்படும்.

பள்ளிகளில் அதிகப்படியான அளவுக்கு குழந்தைகள் சேராமல் இருக்கும் மாவட்டங்களில் இத்திட்டம் துரிதப்படுத்தப்படும்.

### வயது வந்தோரிடையே கல்வி அறியாமை

இந்த வயதுப் பிரிவினரிடையே முறைசாராக் கல்வித் திட்டம் ஆறாவது திட்டத்தின் குறைந்த பட்சத் தேவைகள் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. 1990ம் ஆண்டிற்குள் கல்வி அறிவூட்டும் திட்டங்களின் கீழ் 15 வயது முதல் 35 வரையிலான மொத்த மக்கள் அனைவரும், கல்வி அறிவு வாசனை இல்லாத அனைவரும் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஆறாவது திட்ட ஆவணம் கூறுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு முதியோர் கல்வித் திட்டம் முந்தைய திட்டங்களில் துவக்கப்பட்டன. கல்வி அறிவு இல்லாத ஷெட்யூல்டு வகுப்பு, மலைஜாதியினர், மகளிருக்கு விசேஷ முக்கியத்துவம் அளிக்கப்படும்.



### அவசிய வினியோகங்கள்

**அம்சம் 17:** பொது வினியோக முறையை விரிவாக்குதல், மாணவர்களுக்கு முன்னுரிமையுடன் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல், வலுவான நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தை வளர்த்தல்.

நலிவுற்ற பிரிவினருக்கும் மற்ற அனைவருக்கும் அவசிய நுகர் பொருட்கள் நியாயமான விலையில் தாராளமாகக் கிடைக்கச் செய்யப் பொது வினியோக முறையைப் பரவலாக்குவதில் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்துள்ளது.

நம்முடைய தேசிய பொருளாதாரத்தின் நிரந்தர, நீடித்த சிறப்பு அம்சமாக விளங்கும் விதத்தில் பொது வினியோக முறை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். குறிப்பாக கிராமப்புறப் பகுதிகள், பின்தங்கிய பகுதிகள், தொலைதூரப் பகுதிகள் எளிதில் போய்ச்சேர முடியாத பகுதிகள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பயன் தரும் விதத்தில் இம்முறை துரிதமாக விரிவுபடுத்தப்பட்டு வலுப்படுத்தப்பட வேண்டும்.

பொது வினியோக முறை நேர்த்தியாகச் செயல்படுவதற்கு தொண்டு சேவை நுகர்வோர் அமைப்புகள் பெரிதும் உதவலாம். அதோடு நுகருவோருக்குப் பாதுகாப்பும் அளிக்க முடியும். இதுமாதிரி தொண்டு சேவை அமைப்புகளில் மகளிர் தீவிரமாகப் பங்கேற்க முடியும். நுகர்வோர் மத்தியில் தேவையான விழிப்பு

**(தொடர்ச்சி 33 ஆம் பக்கம் பார்க்க)**



இந்திய விமானப் படைக்கு இது பொன் விழா ஆண்டு. பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கும் மகத்தான பணியிலே பெரும் பொறுப்பு நமது விமானப் படைக்கு உண்டு. இந்திய விமானப் படை பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது; தென்னகத்திலே தாம்பரத்திலே உள்ள விமானப் படைத் தளத்தை பார்ப்பவர் எவருக்குமே— இந்தக் கூற்றின் உண்மை தெற்றெனப் புலனாகும். தாய்த் திருநாட்டைக் காக்கும் திருப் பணியிலே தலையாய்ப் பணியாற்றிடும் இந்திய விமானப் படை பொன் விழா கொண்டாடுகிறது. இந்திய விமானப் படைக்கு ஒரு மைய கேந்திரமாக விளங்கும் தாம்பரம் விமானப் படை நிலையம் ஆற்றிடும் பணிகளை விளக்குகிறது இக் கட்டுரை.

# விமானப்படைநிலையம் வீரத்தின் விளை நிலம்!

சென்னைக்கு அப்பால் 35கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரத்தில் அமைந்துள்ள விமானப்படை நிலையம் இந்திய விமானப்படை வரலாற்றில் மிகப் பழமைவாய்ந்த பயிற்சி நிலையங்களில் ஒன்று என்னும் பெருமைக்குரியதாகும். 1947-ல் இந்நிலையம், செகந்திராபாத்திலிருந்து இங்கு மாற்றப்பட்டது. 1953 நவம்பரில் அம்பாலாவிலிருந்து விமானப் பயிற்சி ஆசிரியர் பள்ளி இங்கு மாற்றப்பட்ட பின்னர், இதன் முக்கியத்துவம் மேலும் உயர்ந்தது.

இந்திய விமானப் படையின் பல்வேறு பிரிவுகளிலிருந்து வரும் சிறந்த கல்வித் தகுதி பெற்ற விமானிகள் பலமுனை விமானப் பயிற்சிப் படிப்பு மேற்கொள்கின்றனர். இப்பள்ளியில் பட்டம் பெற்ற பின்னர், பீடாரிலுள்ள ஆரம்ப விமானப் பயிற்சிப்பள்ளியிலும் ஹைதராபாத்திலுள்ள விமானப் படைக் கழகத்திலும் பெங்களூர் எலஹங்காவிலுள்ள போக்குவரத்துப் பயிற்சிப் பிரிவிலும் ஹைதராபாத்திலுள்ள ஹெலிகாப்டர் பயிற்சிப் பள்ளியிலும் விமானப் பயிற்சியாளர்களுக்கு ஆரம்பப் பயிற்சியும் தேர்ந்த பயிற்சியும் அளிப்பதற்குப் பதவியளிக்கப்படுகின்றனர். இப்படிப்பை, காமன்வெல்த் நாடுகள் அங்கீகரித்துள்ளன. இங்குள்ள விமானிகள், இங்கு தயாரிக்கப்பட்ட எச். டி. 2 என்னும் புஷ்பக்கிலும் கிரான் ஜெட் பயிற்சி விமானத்திலும் ஆசிரியர்களாகப் பயிற்சியளிக்கப்படுகின்றனர். தாம்பரத்திலுள்ள விமானப் பயிற்சியாளர் படையினர், விமான சாகசங்களில் புகழ் பெற்றவர்கள். பல இடங்களில் இச்செய்கைகளில் ஈடுபட்டனர்; இறுதியாகப் புது டில்லியில் குடியரசுநாள் விழாவில் பங்கு பெற்றனர்.

விமானப் படையின் தளப் பயிற்சிப் பள்ளியென அழைக்கப்பட்ட இயந்திரப் பயிற்சி நிலையம், இந்திய விமானப் படையில் முன்னோடியானதாகும்.

இந்த நிலையத்தில் மூவகைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கடுமையான உழைப்பிற்கு உடலைப் பக்குவப்படுத்துதல், விரைந்த, தெளிந்த சிந்தனைக்கு உள்ளத்தைத்தயார்ப்படுத்துதல், கடமையுணர்வின் அடிப்படையில் பண்பை உருவாக்குதல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது.

நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் தாம்பரத்திற்குப் பயிற்சி பெற வருகின்றனர். விளையாட்டுப் பயிற்சி, துப்பாக்கிப் பயிற்சி, துப்பாக்கிச் சண்டை ஆகியவற்றில் கடுமையான பயிற்சியளிக்கப்படுகிறது. மாறுபட்ட உணவுப் பழக்கங்களும் மொழி வேறுபாடும் கொண்ட புதிய பயிற்சியாளர்களை மிகச் சிறந்த கட்டுப்பாடுடைய விமானப் பயிற்சியாளர்களாக உருவாக்குவது மிகப் பெரும் செயலாகும். ஆறுமாத அடிப்படைப் பயிற்சிக் காலத்தில் தளப்பயிற்சி ஆசிரியர்கள் (ஜி. டி. ஐ.) இச்சாதனையை மெய்ப்பித்துக் காட்டுகின்றனர்.

புதிய பயிற்சியாளர்கள் சேர்ந்து வாழும் கூட்டு வாழ்க்கையை மேற்கொண்டுசிறப்படையும் வழிக்குத் தயார்ப்படுத்தப்படுகின்றனர். அடிப்படைப் பயிற்சியளிக்கப்படும்போது, இயந்திரப் பயிற்சியளிக்கும் முதுநிலைக் கல்வி அதிகாரியின் கீழ் கல்விப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. சிறந்த கல்வித் தகுதி பெற்ற அதிகாரிகளும் ஆசிரியர்களும் ஆங்கிலம், பொது அறிவு, விமானப் படைச் சட்டம், அடிப்படை அறிவியல் ஆகியவற்றைக் கற்பிக்கின்றனர்.

இயந்திரப் பொறியியல் பிரிவில், பயிற்சியாளர்களுக்கு பிஸ்டன், புரொபெல்லர் ஆகியவை பற்றியும் விமானத்தின் ஜெட்டர்

வ. சம்பந்தம்



விமானப்படை இயந்திரப் பயிற்சி நிலையத்தில்

பைன் இயந்திரம் பற்றியும் பயிற்சியளிக்கப்படுகிறது.

ஆயுத முறைகள் பயிற்சிப் பிரிவில், எல்லா விதமான துப்பாக்கிகள், ராக்கெட்டுகள், வெடிகுண்டுகள் பற்றிக் கற்பிக்கப்படுகிறது. இந்திய விமானப் படையிலுள்ள ஆயுத முறைகள் அனைத்தையும் அறிந்து கொள்வதுடன் பழுதுபார்க்கவும் நிர்வகிப்பதற்கும் உரிய எல்லாத் தொழில் நுட்பங்களையும்பயிற்சியாளர்கள் அறிந்து கொள்கின்றனர்.

தாம்பரம் விமானப்படை இயந்திரப் பயிற்சி நிலையத்தில், கருமான், ஷீட்மெட்டல் பணியாளர், தச்சர்கள், வெல்டர்கள், விமானதளப் பாதுகாப்புப் பணியாளர்கள், மெட்டியோராஜிக்கல் பணியாளர்கள் ஆகிய தொழில்முறைகளிலும் பயிற்சியளிக்கப்படுகிறது.

இப்பயிற்சியை முடித்தபின் இந்நிலையததிலிருந்து வெளி வந்து விமானம் இயக்குதல், நிர்வகித்தல் பிரிவுகள் பலவற்றில் பதவியில் அமர்த்தப்படுகின்றனர்.

இரண்டு, மூன்றாண்டு பணிக்குப் பின்னர், விமான வடிவமைப்புத் தொழில் நுட்பப் பணியாளர்கள், இயந்திரத் தொழில் நுட்பப் பணியாளர்கள், ஆயுதத் தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகிய பலதொழில்கள் அறிந்த விமானப் பணியாளர்கள் மீண்டும் தாம்பரம், இயந்திரப் பயிற்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டுப் பயிற்சிபெறுகின்றனர்.

தாம்பரத்திலுள்ள விமானப் படை நிலையத்தில் அமைந்துள்ள விமானப் பணியாளர் தேர்வுப் பிரிவு, தமிழ்நாட்டிலுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணிக்காக உள்ளதாகும். புதுடில்லியிலுள்ள விமானத் தலைமையிடத்தின் மத்திய விமானப் பணியாளர் தேர்வுக் கழகத்திலிருந்து வரும் அதிகாரிகளின் மேற்பார்வையில் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. நல்ல உடல் திடமும்அடிப்படைக் கல்வித் தகுதியான மெட்ரிக் படிப்பும் இதற்குத் தேவையாகும் ஒவ்வோர் ஆண்டும் இந்நிலையத்தில் 650 புதிய பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். இவர்கள் பல்வேறு பயிற்சி நிலையங்களில் சேர்ந்து கொள்கின்றனர். இவர்கள் விமானப் படையில் சேர்ந்த தேதியிலிருந்து சம்பளமும் படிகளும் பெறத் தொடங்குகின்றனர். பயிற்சியாளர் வீட்டுக்கு எடுத்துச் செல்லும் சம்பளம் ரூ. 400 ஆகும்; இலவசமாகத் தங்கும் வசதியும் உணவும் உடையும் மருத்துவ வசதியும் அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது ஒரு மாத படிப்பு விடுமுறை அளிக்கப்படுகிறது; அரசுச் செலவில் சொந்த ஊருக்குச் சென்று வரலாம். விளையாட்டு வசதிகளும் பல உள்ளன.

விமானப் பணியாளராக அமர்த்தப்பட்டால், மாதத்திற்கு ரூ. 290 அடிப்படைச் சம்பளமும் மற்றும் அகவிலைப் படியும் பிறவும் பெற முடியும். இத்துடன் பதவி உயர்வுக்கு நல்ல வாய்ப்புகளும் உள்ளன. மாஸ்டர் வாரண்ட் அதிகாரியாகப் பதவி உயர்வு பெற முடியும்; மாதம் ரூ. 1,400 பெறும் வாய்ப்பும் உள்ளது. விமானப் பணியாளர் 55 வயது வரையில் பணியாற்றலாம். விமானப் பணியாளர்களுக்கு விமான நிலையத்தில் எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

தாம்பரத்திலுள்ள விமானப் படை நிலையம், இவ்வாறு மூன்று வகைப் பணிகளைஇந்திய விமானப் படைக்கு அளித்து வருகிறது. தேர்வு நிலையத்தின் மூலம் மனித சக்தியையும் இயந்திரப் பயிற்சி நிலையத்தின் மூலம் பராமரிப்புப் பணியாளர்களையும் விமானப் பயிற்சி ஆசிரியர் பள்ளி மூலம் திறன் மிக்க விமான பயிற்சி ஆசிரியர்களையும் அளித்துப் பெருமை கொள்கிறது.

## வாழ வழிகாட்டும் வங்கி



# ஏழை எளியோர் ஏற்றம் பெற ஓர் ஏணி!

**ஏழை எளியோர்க்கு ஏணியாக இருப்பவை வங்கிகள். வாழ வழியற்ற அடித்தளத்துமக்கள் மேம்படுவதற்குக் குறைந்த வட்டியில கடன்கள் தந்து உதவுகின்றன வங்கிகள். அந்த வகையில் 'வாழ வழி காட்டும் வங்கி' என்ற வரிசையில் 'சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி' இங்கே இடம் பெறுகிறது. அது ஆற்றும் பணிகள் குறித்து இந்தக் கட்டுரை கோடிட்டுக்காட்டுகிறது.**

அந்த இளைஞருக்குப் பறவைகள், விலங்குகள் என்றால் கொள்ளை ஆசை!

வ்ண்ணப் பறவைகள் பறந்து செல்வதையும், வாயில்லா ஜீவன்களான ஆடுமாடுகள் அன்புடன் இருப்பதையும்பார்த்துப்பார்த்து மகிழ்வார் அவர்.

அவர் படிக்கும்போதும் சரி, படித்துப் பட்டம் பெற்ற பிறகும் சரி அந்த எண்ணம் நிலையாக நின்று விட்டது அவர் மனத்தில்!

அதன் விளைவு?

பி.எஸ்சி. பட்டம் பெற்றிருந்தும்கூட அவர் அலுவலகத்திலோ, அரசாங்க வேலையிலோ பணிபுரியவில்லை. அதற்கு அவர் முயற்சிக்கவும் இல்லை. சொந்தக் காலிலேயே நிற்க. உறுதி கொண்டார்.

எப்படி?

சொந்தமாக மாடுகள் வைத்துப் பால் வியாபாரம் செய்ய முன்வந்தார்!

அவர் இந்தத் தொழிலில் ஈடுபடுவது அறிந்த இவரது தந்தை இவரைக் கண்டித்தார். காரணம் இவரது தந்தை ஒரு வழக்கறிஞர்.

மனஉறுதி மிக்க இளைஞரான இவர், தான் முன் வைத்த காலை பின்வைக்கவில்லை. இவரது கொள்கையே வென்றது.

ஆம். அவர்தான் சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்த திரு இ. கோடீஸ்வரன் (வயது 39).

இவருடைய முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து உதவ முன்வந்த வங்கிதான் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட்.

முதலில் வங்கியைப் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்வோம்.

### பொன் விழா ஆண்டில்...

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி லிமிடெட், 1930ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. பொன் விழா ஆண்டு முடிந்து வீறுநடை போட்டுவரும் இந்த வங்கி, பல்வேறு நலப்பணிகளைச் செவ்வனே ஆற்றிவருகின்றது.

கடந்த ஆண்டில், இவ்வங்கியால் வழங்கப்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூ. 3066.42 இலட்சங்களாக இருந்தது. அது 30.6.81ல் ரூ. 3525.60 இலட்சங்களாக உயர்ந்தது. 1979-80 ஆம் ஆண்டுகளில் பலதரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த வங்கி கடன்கள் வழங்கியுள்ளன.

ஊழியர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கி ரூ. 1961.76 இலட்சம் அதன் உறுப்பினர்களுக்குநுகர் பொருள் கடன்களாக வழங்கியுள்ளது. மற்றும் நகர வங்கிகளுக்கும் நாணயச் சங்கங்களுக்கும் இது, கடன் தந்துள்ளது. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 5.81 இலட்சம் வழங்கியுள்ளது. இவையன்றி, நுகர்பொருட்களையும், ரேஷன் பொருட்களையும் அத்தியாவசியமான பொருட்களையும் விநியோகிக்கப்பதற்கு வங்கி பண உதவியைக் காசுக் கடன்கள் மூலமாக, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகிறது. 1979-80ல் காசுக் கடனாக ரூ. 95.21 இலட்சம் இச்சங்கங்களுக்குவழங்கியுள்ளது.

### எல்லோருக்கும் உதவி

இந்த வங்கி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 6 சதவிகித சலுகை வட்டியில், நடை முதல் மூலதனத்திற்காகக் காசுக் கடன் வழங்கி வருகிறது. மற்றும் தொழில் கூட்டுறவுச் சங்கங்களான ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு அச்சகம், சென்னை செங்கல்பட்டு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ஆகியவற்றுக்கு இவ்வங்கி கடன்கள் தந்து உதவி இருக்கின்றன.

உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வுக் கூட்டுறவுச் சங்கத்திற்கு மாநிலக் கூட்டுறவுப் பதிவாளரின் அனுமதி பெற்று சலுகை

**பி. வி. கிரி**

வட்டியில் அதாவது 4 சதவிகித வட்டியில் நடைமுதல் மூலதனத்திற்காக 0.03 இலட்சம் காசுக் கடன் தந்துள்ளது. சென்னை மீனவர் கூட்டுறவுக் கழகத்திற்கு விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின் கீழ், உறுப்பினர்களுக்காக விசைப் படகு வாங்குவதற்காக, வங்கி நீண்ட காலக் கடனாக ரூ. 17.56 இலட்சம் வழங்கியுள்ளது.

**நடமாடும் வங்கி**

வங்கி தனது 18 கிளைகள் மூலமும் பொதுமக்களுக்கு நகைக் கடன்கள் வழங்கி வருகிறது. சிறு தொழில் நிறுவனங்களுக்கு, நகர வங்கிகள் வழங்கும் கடன்களுக்குச் சம்பந்தப்பட்ட கடன் மனுக்களைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு உதவிபுரிய



திரு இ. கோட்டீஸ்வரன்

கைத்தொழில் துறை ஆய்வாளர் கொண்ட ஓர் தொழில் நுட்பப் பிரிவை வங்கி நிறுவியுள்ளது.

வங்கியின் 'நடமாடும் கிளை அலுவலகம், (Mobile Unit) ஒன்று, எல்லா வங்கி அலுவல் நாட்களிலும் சென்னை மாநகராட்சி எல்லைக்குள் வங்கி வசதியற்ற ஐந்து முக்கியமான இடங்களில் 1980 மே முதல் செயல்பட்டு வருகிறது. வங்கி வரலாற்றிலேயே இம்மாதிரியான கிளை முதல்தடவை எனக் கருதப்படுகிறது. நடுத்தர, குறைந்த வருமானம் உள்ளவர்கள் மற்றும் அடித்தளத்திலுள்ள ஏழை எளியவர்கள் இதன் மூலம் பயன்பெறுகிறார்கள்.

**புதிய திட்டங்கள்**

இந்த வங்கி புதிய திட்டங்களையும் அறிமுகப்படுத்தியுள்



திரு ஆர். நடராசன்

ளது. அவற்றுள் ஒன்று 'செல்வக் களஞ்சியம்'. இது குழந்தைகளுக்கும், ஓய்வு பெறுவர்களுக்கும் உதவுகின்ற திட்டமாகும்.

மற்றும் கற்பகம் வைப்புத் தொகை ( (Karpagam Deposit) இரட்டிப்பு ஓய்வு ஊதிய வைப்பு தொகை (Double pension Deposit) முத்தாரம் சிறு வைப்புத்தொகை ( Mutharam Mini Deposit ) சம ரொக்கப்பத்திரம் ( Cash Certificate ) ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

தாங்கள் கொடுக்க வேண்டிய மாதாந்திரக் கடன் வாய்தாக்களைத் தவணைப்படி வங்கிக்குச் செலுத்திவந்த ஷெட்யூல் வகுப்பினர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள், ஆகியவைகளுக்கு ஏற்படும் கடன் வட்டித் தொகையிலிருந்து 1½ சதவிகிதம் 'ரிபேட்' சலுகையை

திரு மதிவாணன்



இந்த வங்கி 1979-80ஆம் ஆண்டிலும் வழங்கியுள்ளது.

1980-81 ஆம் ஆண்டில் வங்கிக்கு ரூ. 10986902.29 நிகர இலாபம் கிடைத்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும்.

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி, ஏழை எளியவர்களுக்கும், பட்டதாரி இளைஞர்களுக்கும் கடன்கள் தந்து அவர்கள் வாழ்க்கையை மேம்படுத்துக் கொள்வதற்குவழிவகைசெய்துவருகிறது.

**சொந்தக் காலில்...**

திருவொற்றியூரைச் சேர்ந்த பட்டதாரி இளைஞர் திரு. இ. கோட்டீஸ்வரன், பால் வியாபாரம் செய்கிறார். அவர் கூறுகிறார்.



திரு ஜி. எம். ஷபீர்

''நான் பி.எஸ்சி. படித்து முடித்ததும், வேலை எதையும் தேடி அலையவில்லை. வேலை வேலை என்று வீணாகக் காலம் கழிக்கவும் இல்லை. சொந்தக் காலிலேயே நிற்க ஆசைப்பட்டேன். அதன் விளைவுதான் பால் வியாபாரம். முதலில் இரண்டு மாடுகளை நானே வாங்கினேன். பிறகுதான் வியாபாரத்தைப் பெருக்கத் திட்டமிட்டேன். அதற்குப் பணம் வேண்டுமே, அப்போது இந்த வங்கியை நாடினேன். அவர்கள் நகைக் கடனாக ரூ. 3000 தந்தார்கள். பிறகு மறுபடியும் ரூ. 3000 தந்தார்கள். இப்போது என்னிடம் 12 மாடுகள் உள்ளன. கடந்த 4 ஆண்டுகளாக இத் தொழிலில் ஈடுபட்டு இறேன். எனக்கு உதவியாக 3 பேர் உள்ளனர். ஆரம்பத்தில் மாதம் ரூ 300 வருமானம் கிடைத்தது. இப்போது ரூ. 800 வருமானம் கிடைக்கிறது''.



திரு பி. கன்னியப்பன் அவர்கள்
தனி அலுவலர்

அயனாவரத்தைச் சேர்ந்த காய்கறி வியாபாரி திரு ஆர். நடராஜன் (வயது30) இந்த வங்கியில் ரூ. 3000 கடன் வாங்கியிருக்கிறார். அவர் என்ன சொல்லுகிறார்?

''நான் முதலில் மளிகைக்கடையில் வேலை பார்த்தேன். குறைந்த சம்பளமே கிடைத்தது. பிறகு சொந்தமாகக் காய்கறிக் கடை வைக்க எண்ணினேன். அந்தச் சமயத்தில் வெளியில் கடன் வாங்கலாமென்றால், அதிக வட்டிக்குத் தருவார்கள். அப்போது எனக்குக் கைகொடுத்து உதவியது இந்த வங்கி. அவர்கள் கொடுத்த ரூ. 3000 வைத்துக்கொண்டு கடை ஆரம்பித்தேன். இப்போது மாதம் ரூ. 300 வருமானம் கிடைக்கிறது.'

இருபத்தெட்டு வயது இளைஞரான திரு மதிவாணன், பார்வையற்றவர். வண்ணாரப்பேட்டையில் சிறிய அளவில் பிளாஸ்டிக் பொருள்கள் தயார் செய்கிறார். பள்ளி இறுதி வகுப்புவரைபடித்த இவர் சிறிது காலம் வேலையின்றித் தவித்தார். பிறகு இந்த வங்கி இவருக்கு ரூ. 3000 கடன் தந்து உதவியது. இத்தொழிலை மேலும் வளர்க்க வேண்டும், அதன் மூலம் ஒரிருவருக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்றும் இவர் எண்ணியுள்ளார்.

**கைகொடுத்தது...**

அயனாவரத்தில் தையல்கடை வைத்திருக்கும் திரு ஜி.எம். ஷபீர் என்ன சொல்கிறார்?

''நான் ஆறு வருஷமா தையல் கடை வச்சிருக்கேன். முதல்லே ஒரு தையல் கடையிலே வேலை பார்த்தேன். மாதம் ரூ. 50தான் கிடைத்தது. சொந்தமா தொழில் ஆரம்பிக்க நெனைச்சேன். பலரைக் கடன் கேட்டுப் பார்த்தேன் எல்லாரும் கைவிரிச்சாங்க. ஆனா, இந்தப் பாங்க் எனக்குக் கைகொடுத்தது. முதல்லே ரூ1000 பிறகு ரூ. 2000 கடன் தந்தார்கள். இப்ப மாசம் ரூ. 500 வருமானம் கிடைக்கிறது. இதை வைச்சி அஞ்சு பேருள்ள குடும்பத்தைக் காப்பாத்தறேன்.''

**சுயவேலை வாய்ப்பில் ஈடுபட...**

சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி, மேலும் என்னென்ன புதிய திட்டங்களைக் கொண்டு வரவிருக்கிறது என்பது பற்றியெல்லாம் இந்த வங்கியின் **தனி அலுவலர் திரு பி. கன்னியப்பன் அவர்களும், செயலாளர் திரு பி. தங்கராஜு அவர்களும்** விவரித்தார்கள்:

''நலிந்தவர்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் குறைந்த வட்டியில்-4 சதவிகித வட்டியில் கடன்கள் தந்து உதவுகிறோம். படித்து வேலையற்ற பட்டதாரிகள் சுய வேலை வாய்ப்புக்கும், வாழவழியற்ற விதவைகளுக்கும், சொந்தமாகத் தொழில் தொடங்குவோருக்கும் நாங்கள் கடன்கள் தருகிறோம்.

''இவையின்றி, நுகர்வோர் கடன்களையும் வழங்கி வருகிறோம். நகைகளின் பேரில் அதிகபட்சம் ரூ. 5000 வரை கடன் தரப்படுகிறது. ஒரு சவரனுக்கு ரூ. 800 வரை தரப்படுகிறது. அது மட்டுமின்றி, நகரத்திலுள்ள 300 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான கடன்களையும் வழங்கி வருகிறோம். இவையன்றி வீடுகளுக்குத் தேவையான



திரு பி. தங்கராஜு அவர்கள்
செயலாளர்

பொருள்கள் — தொலைக்காட்சிப் பெட்டி வாங்குவதற்கும் கடன் தரபபடுகிறது.

**தொழில் தொடங்க...**

''இன்னொரு புதிய திட்டமும் நடைமுறைக்கு வருகிறது. மாதம் ரூ. 250 க்கும் குறைவாக உள்ள பிரிவினருக்கான திட்டம் அது. அவர்கள் தொழில் தொடங்குவதற்கு — தொழில் கருவிகள் வாங்குவதற்குக் கடன் தரப்படும். தச்சுவேலை, மட்பாண்டம் செய்தல், ரொட்டி தயாரித்தல், தோல் தொழில், ரெடிமேட் ஆடைகள் தயாரித்தல், தையல் கடை வைத்தல் போன்றவற்றுக்கு அதிகபட்சமாக ரூ. 7000 வரை கடன் தரப்படும். அதாவது ரூ. 2000 நடைமுறை மூலதனமாகவும், ரூ. 5000 தொழிற்கருவிகளை வாங்கவும் தரப்படுகிறது. இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் அமலுக்கு வருகிறது''.

இவ்வாறு, வாழ வழியற்ற ஏழை எளியவர்களுக்கு உதவிகள் பல புரிந்து, அவர்கள் ஏற்றம் பெற ஏணியாக இருந்து வருகிறது, சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி என்றால் அது முற்றிலும் உண்மை!



# வளம் கொழிக்கும் கனிம வளத்துறை

## கனிமவளத் துறைத் தலைவர்- மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.சரவணன் அளிக்கும் பேட்டி

சென்னைக் காமராசர் சாலையில் எழிலகத்தின் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தில் இடம் பெற்றிருக்கும் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் அலுவலகம் உள்ளே செல்கிறோம். TAMIN என்று பெயர் பொறிக்கப்பெற்ற — மெருகேற்றப் பெற்ற-கருங்கல் தூணும் பல்வேறு துண்டுக் கற்களும் நம்மை வரவேற்கின்றன. நிறுவனத்தின் தலைவரும் மேலாண்மை இயக்குநருமாகிய டாக்டர் எஸ். சரவணன் அவர்களின் அறைக்குள் நுழைகிறோம்.

''வெஸ்ட் ஜெர்மனி கால் முடிந்துவிட்டது; லண்டனுக்கு ஒரு கால் போடுங்கள்'' என்ற குரல் கேட்கிறது.

வாணிப விஷயமாக வெளிநாடுகளில் உள்ள நிறுவனங்களுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறார் தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தலைவர் என்பது தெளிவாகிறது.

டாக்டர் சரவணன் அவர்களது மேஜைக்கெதிரே உள்ள கண்ணாடி அலமாரி ஒன்றின் உள்ளே புவியியல் குறித்தும், கனி வளங்கள் குறித்தும் தெளிவுறுத்தும் ஆங்கில நூல்கள் பல - தடித்த அளவில் நிறைந்திருக்கின்றன. அதன் அருகில் இந்தியாவின் வரைபடம் புடைப்புச் சிற்ப வடிவில் காட்சி தருகிறது. அதில் கனிம வளங்கள் கிடைக்குமிடங்கள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அதனைப் பார்த்துக் கொண்டே பேட்டி அளிக்கிறார்.

**கனிம வளம் என்றால் என்ன?**

நிலத்தில் கிடைக்கும் தாதுப்பொருள்கள் அனைத்தும் கனிமங்கள் என்று சொல்லப்படுகின்றன. இவற்றில் உலோகங்களும் அலோகங்களும் அடங்கும். சுண்ணாம்புக்கல், கந்தகம் போன்றவை அலோகங்கள் ஆகும். இரும்பு, மாங்கனீசு போன்றவை உலோகங்கள் ஆகும்.

**தமிழ்நாடு, கனிம வளம் நிறைந்த பகுதியா?**

'செல்வம் எத்தனை உண்டு புவிமீதே— அவை யாவும் படைத்த தமிழ்நாடு 'என்று பாரதியார் தமிழகத்தின் வளம் குறித்துத் தெரிவித்திருக்கிறார். இதில் கனிம வளமும் அடங்கும்.

'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்

நிலமென்னும் நல்லாள் நகும் என்று வள்ளுவர் குறிப்பிட்டிருப்பது, விவசாய நிலங்களை மட்டுமல்ல-நில உலகத்தில் உள்ள எல்லா வகை மண் பூமியையும் குறிக்கும். கனிமங்களையும் மண் மாதாதானே வழங்குகிறாள்!

**கனிம வளத்தின் பெருமை என்ன?**

வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர...கோன் உயரும்...கோன் உயரக் குடி உயரும்...என்றெல்லாம் ஔவையார் அடுக்கிக் கொண்டே போனதுபோல- கனிம வளத்தின் பெருமையையும் நாம் அடுக்கிக்கொண்டே போகலாம். ஒரு நாட்டுக்குப் பொருளாதாரம் அடிப்படையாக இருக்கிறது. பொருளாதாரத்திற்கு தொழில்வளர்ச்சி அடிப்படையாக இருக்கிறது. தொழில் வளர்ச்சிக்குக் கனிம வளம் அடிப்படையாகத் திகழ்கிறது.

**தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) எப்போது தோற்றுவிக்கப் பட்டது?**

*1978 ஏப்ரல் திங்களில் துவக்கப்பட்டது*

**இந்நிறுவனம் ஏன் அரசுத்துறையாகத் துவக்கப் பட்டது?**

கனிமங்களில் ஒன்றான கரும்பாறை பல்லாண்டுகளாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்த வாணிபத்

பேட்டி: தமிழ்ப்பித்தன்

தால் தனிப்பட்ட பலர் பெரும் பொருள் சட்டி வந்தனர். இதனை அரசு நடத்தினால் அனைத்து இலாபமும் அரசுப் பெட்டகத்திற்கே வந்து சேரும் என்பது ஒரு காரணம்.

தனியார், சட்டத்திற்குப் புறம்பான வழிகளில் உரிமவரி ஏய்ப்புச் செய்து வந்ததனால் அரசு அதிக அளவு வருவாயை இழக்க நேரிட்டது என்பது மற்றொரு காரணம்.

தமிழகத்தில் மண்டிக் கிடக்கும் பல கனிமங்களைத் தோண்டி எடுத்துத் தொழில் வளர்ச்சிக்கு உதவுவதற்காகத் தனிப்பட்ட கனிம நிறுவனம் ஒன்று, தமிழகத்தில் அமைக்கப்படாமல் இருந்ததனால், கனிமச் சுரங்கங்களையும் குவாரிகளையும் விஞ்ஞான முறைப்படி விரிவாக்கி, தரம் வாய்ந்த கனிம உற்பத்தி செய்ய ஒரு நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருந்தது ஒரு காரணம்.

தனியாரின் பிடியில் இருந்த கரும்பாறை வாணிபத்தில் மலிந்திருந்த ஒழுங்கீனம் ஒரு காரணம்.

இவற்றை எல்லாம் உணர்ந்த அரசு, இந்த வாணிபத்தை முறைப்படுத்தவும்- சீர்கேடுகளைக் களையவும் சட்டத்தில் திருத்தங்கள் செய்தது. பின்னர் ஒரு கட்டத்தில் உரிமம் வழங்கும் அதிகாரத்தையும் அரசே ஏற்றுக் கொண்டது. தமிழகத்தில் கரும்பாறை வெட்டி எடுக்கத் தனியாருக்கோ தனியார் நிறுவனங்களுக்கோ புதிய உரிமங்கள் வழங்குவதில்லை என்றும், பழைய உரிமங்களைப் புதுப்பிக்க முடியாது என்றும், இவ்வகை உரிமங்கள் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு அல்லது கூட்டுறவுத் துறை நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என்றும் விதிமுறைகளை அரசு வகுத்தது. இவ்விதிமுறைகள் 7.12.1977 முதல் அமுலுக்கு வந்தன. இதன் விளைவாகத்தான் அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு கனிம நிறுவனம் துவக்கப் பெற்றது. கரும்பாறை வாணிபத்தை அரசு ஏற்றது.

**தனியார் வாணிபத்தில் ஒழுங்கீனம் மலிந்திருந்ததென்று எதனைக் குறிப்பிடுகிறீர்கள்?**

கரும்பாறைகள் வெட்டி எடுக்குமிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான ஊக்கமோ பாதுகாப்போ அளிக்கப்படவில்லை. தொழிலாளர்களுக்கு எந்த நேரத்திலும் எந்தவிதத்திலும் விபத்துகள் நேரலாம் என்ற சூழ்நிலை இருந்தது.

இதுதவிர கரும்பாறைகள் வெட்டி எடுக்கும் பகுதிகளிலிருந்து துறைமுகத்திற்குக் கொண்டு செல்லும் வகைகளில் தவறான முறைகள் கையாளப்பட்டு வந்தன. ஒரு லாரியில் ஏறக்குறைய 7 அல்லது 8 டன் எடையுள்ள கற்களை அகற்றுவதற்குரிய உரிமம் பெற்றுக் கொண்டு, 10 அல்லது 15 முறை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி - கள்ளத்தனமாகக்கரும்பாறைகள் கடத்தப்பட்டு வந்தன. இதனால் அரசின் வருவாய் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது.

மேலும் இரவு பகல் என 5 அல்லது 6 ஷிப்டு முறைகளை வைத்து எவ்வளவு பாறைகளை வெட்டி எடுக்க முடியுமோ அவ்வளவு பாறைகளை வெட்டி எடுத்து, எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்றுப் பெரும் இலாபம் பெற்றனர்.

வெட்டி எடுக்கும்போது விழும் வேண்டாத கற்களையும் மணல்களையும் - எதிர்காலத்தில் வெட்டி எடுக்கப்பட வேண்டிய பாறைகளின் மீது குவித்து இன்னல்களை ஏற்படுத்தினர்.

**கரும்பாறைகள் தமிழ்நாட்டில் எங்கெல்லாம் கிடைக்கின்றன?**

தமிழகத்தில் ஏறக்குறைய 140 இடங்களில் கரும்பாறைகள் மண்டிக் கிடக்கின்றன. இவை வெட்டி எடுத்து ஏற்றுமதி செய்யப்படுவது 70 இடங்களில்தான்! அதாவது 50 விழுக்காடுதான் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

---

தமிழ்நாடு கனிமத் துறையின் தலைவரும் மேலாண்மை இயக்குநருமாகிய டாக்டர் எஸ். சரவணன், எம்.எஸ்ஸி, பி.எச்டி., அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களால் பாராட்டி வெளியிடப்பட்ட 'சேலத்து இரும்பு' என்னும் நூலை இயற்றி, தமிழ்வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தின் பரிசினைப் பெற்றவர் ஆவார்.

சென்னை மாநிலக் கல்லூரியின் நிலப்பொதியியல் துறை (GEOLOGY) யின் முதன்மைப் பேராசிரியராகவும், சென்னைப் பல்கலைக் கழகத்தின் நிலப் பொதியியல் மற்றும் நில இயல் பியல் துறையின் முதுநிலை விரிவுரையாளராகவும் மாநிலத் திட்டக் குழுவைச் சேர்ந்த (Task Force), செயற்படையின் செயலாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

கனிம வளங்கள் குறித்துப் பல்வேறு இதழ்களில் கட்டுரைகளையும், கருத்தரங்கக் கட்டுரைகளையும், ஏழு நூல்களையும் எழுதியுள்ள இவர், மேற்கு ஐரோப்பாவில் பல நாடுகளுக்கும், இங்கிலாந்துக்கும் சென்று வந்திருக்கிறார்.

மத்திய அரசு பல துறைகளில் தொழில் நிபுணர்களைத் தலைவர்களாக்கியுள்ளது. அதே முறையில், முதன் முதலாக தமிழக அரசால் கனிமத் துறையின் தலைவராக நியமனம் செய்யப் பெற்றுள்ள இவர், கல்வித்துறையில் பணியாற்றிய



ஒருவர் நிருவாகத் துறையிலும் வெற்றிகரமாகப் பணியாற்ற முடியும் என்பதற்குச் சான்றாகத் திகழ்கிறார்.



கரும்பாறைகள் வெட்டி எடுக்கப்படுவதற்கு அழுத்தக் காற்று மூலம் துளையிடப்படுகிறது.



பாறைகள் சம அளவில் வெட்டப்படுகின்றன.



கிரேனின் மூலம் தூக்கப்படுகின்றன.

தரம்வாய்ந்த டோலரைட் என்னும் கரும் பாறைகள், தென்ஆர்க்காடு, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், வட ஆர்க்காடு, செங்கற் பட்டு ஆகிய மாவட்டங்களில் கிடைக்கின்றன. இவற்றில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனம் வட்டத்திலுள்ள குன்னம் கிராமத்திலும், தருமபுரி மாவட்டத்தில் பெண்ணகரம் சார்புக் கோட்டத்திலும், சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், மேட்டூர் கோட்டங்களிலும் கிடைக்கும் படிவங்கள் உலகச் சிறப்புப் பெற்ற சுவீடன் நாட்டுப் பாறைகளுக்கு நிகரானவையாகும்.

**கரும்பாறைகளின் சிறப்பம்சங்கள் எவை?**

அவை மிகவும் கடினம் வாய்ந்தவை. காற்று, மழை, வெயில் போன்ற இயற்கைச் சூழ்நிலைகளால் அவை பாதிக்கப்படுவதில்லை. அவை மெருகேற்றப்படக் கூடியவை. இதன் காரணமாகவே இவற்றிற்கு வெளி நாடுகளில் பெரும் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. வெளி நாடுகளில் இவற்றைத் தகடுபோல் அறுத்துப் பளிங்குபோல் மெருகேற்றுகிறார்கள். பின் னர் கட்டடங்களின் மேல் விமானங்களிலும், தரைகளிலும், சுவர்களிலும் பதிக்கிறார்கள். அலங்காரப் பொருள்கள்-நினைவுச் சின்னங் கள் ஆகியவற்றில் இவற்றைப் பெரிதும் பதிக்கிறார்கள். வெளிநாடுகளில் இப்பாறை கள் மிகப் பெரும் அளவில் பயன்படுத்தப் படுகின்றன. உலகச் சந்தையில் தென் ஆப் பிரிக்கா, சுவீடன் ஆகிய நாடுகள்தான் கரும் பாறைகளை ஏற்றுமதி செய்து வந்தன. இன்று அவற்றுடன் போட்டியிடும் அளவுக்கு நமது தமிழகக்கனிம நிறுவனம் ஆற்றல் பெற்றி ருக்கிறது-அதற்கு, நமது கரும்பாறைகளின் தரம் தான் காரணம்.

**தற்போது எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன?**

ஜப்பான் ,மேற்கு ஜெர்மனி, ஆஸ்தி ரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

**இந்நிறுவனத்தின் நோக்கங்கள் யாவை?**

இதன் முதல் நோக்கம் கரும்பாறை வாணிபமாக இருந்தாலும், பின்னர் இதர உயர்வகைக் கனிம உற்பத்தியிலும் விற்பனை யிலும் ஈடுபட்டு, தமிழ்நாட்டின் கனிம வளர்ச் சியில் முக்கியப் பங்கு ஆற்றவேண்டும் என்ற உணர்வுடன் வணிகச் சிறப்புப் பெற்றுள்ள வெவ்வேறு கனிமங்களை முறையாகவும் விஞ் ஞானப் பூர்வமாகவும் வெட்டி எடுத்தல்.

கனிம உற்பத்தியில் ஈடுபட்டுள்ள பல் வேறு நிறுவனங்களுக்குத் தொழில் நுணுக்க ஆலோசனைகள் வழங்குதல்.

கனிம வளத்தைப் பாதுகாத்து அவற்றை முறையாகப் பயன்படுத்தும் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டு வருதல்.

குறைந்த தரமுடைய கனிமங்களையும் பயன்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்தறிய நவீன தொழில் நுணுக்கங் களுடன் கூடிய ஆய்வுக்கூடம் ஒன்றை அமைத் தல்.

வேற்று மாநிலங்கள், மைய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் ஆகியவற்றுடன்




**முதல் முறையாக வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப் பெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் கலந்து கொண்டு உரையாற்றுதல்.**

கூட்டுச் சேர்ந்து திட்டங்களை அமைத்துச் செயல்படுத்துதல்.

பல்வேறு திட்டங்களை நடைமுறைப் படுத்துவதன் வாயிலாகக்கிராமப்புற மக்க ளுக்கு வேலைவாய்ப்புகளை அளித்தல்.

**கனிம வளம் குறித்து வேறு எந்த மாநிலங்கள் ஆலோசனை கேட்டுள்ளன?**

மேற்கு வங்கம், ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் நம்மிடம் ஆலோசனை கேட்டுள்ளன. மத்தியப் பிரதேசத்தின் கனிம வாரியத்தின் தலைவர் நமது கரும்பாறை யின் சிறப்பையும் நமது பணியையும் கண்டு வியந்து பாராட்டியிருக்கிறார் என்பது குறிப் பிடத்தக்க செய்தி ஆகும்.

**கரும்பாறை உற்பத்தியை இந்நிறுவனம் மேற் கொண்ட பின்னர் இலாபம் கிடைத்துள்ளதா?**

இந்நிறுவனம் துவக்கப்பட்டு நான்காண் டுகள் ஆகின்றன. முதல் இரண்டாண்டுகளில் பல்வேறு சுரங்கப் பணிகளையும் உற்பத்தி, விற்பனை வழிவகைகளை முறைப்படுத்தியும் வளர்ச்சிப் பாதையை நோக்கி நடைபோட் டது. தொடக்கக் காலத்தில் பல இடர்ப் பாடுகள் ஏற்பட்டன. வாணிப வாய்ப்பை இழந்த பல தனியார், வழக்குத் தொடுத்ததன் காரணமாகச்சில தாற்காலிகத் தடங்கல்கள் ஏற்பட்டன. அவற்றால் நிலையான-சீரான உற்பத்தியும் விற்பனையும் பாதிக்கப்பட்டன. என்றாலும், அனைத்தையும் கடந்து இரண் டாவது ஆண்டு முடிவில் செயன்முறை ஆதாய மாக(Operation profit)ஏறக்குறைய 11 இலட்ச ரூபாய் இலாபம் கிடைத்தது. மூன்றாவது ஆண்டு முடிவில் இச் செயல்முறை இலாபம் ஏறக்குறைய 24 இலட்ச ரூபாயாக உயர்ந்தது. ஆண்டுதோறும் இலாபம் அதிகரித்து வரு கிறது. அரசுத்துறை நிறுவனங்களில் மிகுந்த இலாபத்தினைத்தேடித்தரும் பெருமைபெற்ற நிறுவனங்களில் தமிழ்நாடு கனிம நிறுவன மும் ஒன்று, அதுமட்டுமல்ல அந்நியச் செலா வணியை அதிக அளவில் ஈட்டித் தரும் நிறு வனமும் ஆகும். இதுவரை ஏறக்குறைய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அந்நியச் செலா வணியை ஈட்டித் தந்துள்ளது.

**முதன் முதலில் எப்போது கரும்பாறையை இந் நிறுவனம் வெளிநாட்டுக்கு அனுப்பியது?**

தமிழ்நாடு கனிம நிறுவனம் 1979-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ஆம் நாளில் கரும் பாறைகளை முதன் முறையாக ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்தது. சென்னைத் துறைமுகத்தில் அன்று நடைபெற்ற சிறப்பு விழாவில் இவ்வாணிபத்தில் புகழ்பெற்று விளங்கும் ஜப்பான் நாட்டு ராட்சத நிறு வனங்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முதல் ஏற்றுமதியைத் துவக்கி வைத்தார்கள்.

**கரும்பாறைகளைத் தவிர வேறு எந்த வகைப் பாறையை இந்நிறுவனம் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கிறது?**

சாம்பல் நிறப் பாறைகளையும் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து வருகிறது. தருமபுரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி வட்டத் தில் செந்தாரப் பள்ளி என்னும் கிராமத்தில் 80 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் சாம்பல் நிறப் பாறைகளை உற்பத்தி செய்கிறது. ஜெர்மனியில் உள்ள ஒரு நிறுவனத்திற்கு 1200 கன மீட்டர் பாறைகளை ஏற்றுமதி செய் துள்ளது. மொத்தம் 1800 கனமீட்டர் பாறை ஏற்றுமதி செய்யப்படுவதற்கு ஒப்பந்தம் ஆகி யுள்ளது. நமது இந்தியத் திருநாட்டில் சாம்பல் நிறப் பாறைகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் முதல் நிறுவனம் என்னும் பெருமை தமிழ்நாடு கனிம நிறுவனத்தையே சாரும்.

**வேறு எந்தக் கனிமங்களை இந்நிறுவனம் உற் பத்தி செய்து விற்பனை செய்கிறது?**

வெர்மிகுலைட் (Vermiculite), சுண் ணாம்புக்கல் (Lime Stone), குவார்ட்ஸ் மற் றும் பெல்ட்ஸ்பார் (Quarts and Feldspar) ஆகிய கனிமங்களையும் உற்பத்தி செய்து விற் பனை செய்து வருகிறது

இதைத் தவிர, கிராபைட் என்னும் கனி மத்தையும் இந்நிறுவனம் விரைவில் வெட்டி எடுக்க இருக்கிறது.

**கிராபைட் குறித்துச் சில விவரங்களைத் தர இயலுமா?**

தமிழகத்தில் இராமநாதபுர மாவட்டத்தில் சிவகங்கை வட்டத்தில் புதுப்பட்டி, சேந்தியுடையநாதபுரம், குமரிப்பட்டி ஆகிய கிராமப்பகுதிகளில்ஏறக்குறைய 602 ஏக்கர் பரப்பளவு இடத்தில் கிராபைட் (மைக்கல்) பரவிக் கிடக்கிறது என்பதை நிலப் பொதியியல் ஆய்வு தெளிவுபடுத்தியது. ஏறக்குறைய ஒருகோடி டன் கிராபைட் படிவங்கள் கிடைக்கும் என்றும்,அவற்றைச் சுத்திகரிக்கும் போது 2½ லட்சம் டன் எடையுள்ள சுத்தமான கிராபைட் கிடைக்கும் என்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இங்கே கிடைக்கும் கிராபைட் பெரும்பாலும் செதில்களாக உள்ளன. இது இந்நாட்டில் கிடைக்கின்ற மிகச்சிறந்த கிராபைட் வகைகளில் ஒன்று எனக் கருதப்படுகிறது.

கனிமத்தை வெட்டி எடுத்தல்-சுத்திகரித்தல்-கிராபைட்டைப் பயன்படுத்திப் பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிறுவுதல் என மூன்று கட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திட்டம் விரைவாகச் செயல்படுவதற்குரிய முயற்சிகளில் இந்நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இத்திட்டம் நிறைவேறும் போது கிராமப்புற மக்களில் ஏறக்குறைய 600 பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

**கிராபைட்டின் பயன் யாது?**

வெப்பக் கலங்கள் (Crucible) தயாரிக்கவும், உராய்தல் குறைப்புப் பொருட்கள் (Lubricant), மின்கரி பிரஷ்கள் (Carbun Brushes), மின்முனைகள் (Electrodes) கிரீஸ், சாயம் ஆகியவையும் தயாரிக்கப் பயன்படுகின்றன.

**தமிழ்நாடு கனிம நிறுவனம், வேலை வாய்ப்பு அளிக்கும் பணியில் தன்னை எந்த அளவுக்கு ஈடுபடுத்தி வருகிறது?**

கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பது இந்நிறுவனத்தின் குறிக்கோள்களில் முக்கியமானதாகும். இந்நிறுவனத்திற்குச் சொந்தமான குவாரிகளும், சுரங்கங்களும் காட்டுப் பகுதிகளிலும் கிராமப்புறப் பகுதிகளிலும் அமைந்திருப்பதால் பெரும்பாலும் பின்தங்கிய - கிராமப்புற மக்களுக்கே இந்நிறுவனம் வேலைவாய்ப்புகளை அளித்து வருகிறது.

1978-79ல் 500 பேர்களுக்கும் 1979-80ல் 850 பேர்களுக்கும், 1980-81ல் 1400 பேர்களுக்கும் இந்நிறுவனம் வேலைவாய்ப்பை நல்கியிருக்கிறது. வரும் ஆண்டுகளில் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதன் வாயிலாக வேலை வாய்ப்புகளை அதிக அளவில் இந்நிறுவனம் ஏற்படுத்துவது உறுதி.

**தமிழ்நாடு கனிம நிறுவனம் வேறு புதிய திட்டங்கள் வைத்துள்ளதா?**

கரும்பாறைகள் மற்றும் சாம்பல் நிறப் பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் கைவசம் உள்ளது. இத்திட்டத்தின் மொத்த குறியீட்டளவு ரூ. 152 இலட்சமாகும். சென்னைக்கு அருகில்



இத்தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது. வெட்டியெடுக்கப்படும் பாறைகளை அப்படியே ஏற்றுமதி செய்வதைவிட அவற்றை அறுத்து மெருகேற்றி ஏற்றுமதி செய்தால், 4 முதல் 5 மடங்கு கூடுதலாக இலாபம்கிடைக்கும். இத்திட்டத்தினால் சுமார் 120 பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இத்தொழிற்சாலை 1982-83 இறுதிக்குள் இயங்கத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்நிறுவனத்தின் இதர சாதனைகளைக் குறிப்பிட இயலுமா?**

தமிழ்நாடு கனிம நிறுவனம் மூன்றாவது ஆண்டிலேயே முந்தைய ஆண்டுகளின் இழப்பையெல்லாம் சரிக்கட்டி ஆதாயம் ஈட்டி தொழிலாளர்கள் அனைவருக்கும் போனஸ் வழங்கியுள்ளது. பங்குதாரர்களுக்கு ஆதாயப் பங்கீட்டுத் தொகை (dividend) அளித்துள்ளது. சமுதாய நலப் பணிகளுக்குச் செலவிடப்படும் தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்கு உண்டு என்று மத்திய அரசு மனமுவந்து அளித்துள்ள சலுகையினை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழ்நாடு ஊரக புணரமைப்புத் திட்டத்திற்கு ரூ. 1.53 இலட்சம் அளித்துள்ளது. இதுமட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் வறட்சியால் அல்லல்படுவோரின் துயர்துடைக்கத் தமிழக முதல்வர் அவர்களின் வறட்சி நிவாரண நிதிக்கு ரூ. 1 லட்மும் கொடுத்து உதவியுள்ளது.

**இந்நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தமிழக அரசு செய்து வரும் உதவிகள் யாவை?**

தமிழக அரசின் உதவியாலும் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களின் ஆதரவினாலும் தான் இந்நிறுவனம் தோன்றியுள்ளது.

''இருளடைந்த நாடு என்று எவரோ சொன்னார். அந்த நாட்டின் இருள் நீக்க காந்தியடிகள் வந்தார்' என்று ஒரு பாடல் உள்ளது. அது நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் பொருந்தும்.

நமது தமிழகத்துக் கனிம வளம் இருட்டில் அடைந்து கவனிப்பாரற்று இருந்தது. அதனை வெளியுலகுக்குக் கொண்டு வந்து ஏற்றுமதி செய்து இருளகற்றி ஒளிகாட்டிய பெருமை நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கே உரியதாகும்.

இவ்வாறு அரசும், முதல்வர் அவர்களும் காண்பித்து வரும் ஆதரவின் காரணமாக இந்த நிறுவனம் பீடு நடைபோட்டு, பெரும் பொருள் ஈட்டி வருகிறது. இது அரசுத்துறையைச் சேர்ந்த சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக ஒளிவீசித் திகழ்கிறது. தமிழகத்துக்குப் பெரும் அளவில் அந்நியச் செலாவணியைத் தேடித் தருவதில் முதன்மையான நிறுவனமாக எதிர்காலத்தில் இது விளங்கப்போவது உறுதி.

# எக்கடையான் அல்லது நாவல் என்றால் என்ன?

டாக்டர் மு. மோகனசுந்தரம்,
கோ. நல்லதம்பி,
மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,
விருத்தாசலம்.

தென்னார்க்காடு மாவட்டத்தின் தென்பகுதிகளில், எக்கடையான் என்றும், வடபகுதியில் நாவல் என்றும் கூறப்படும் ஒருவகை நாவாய் பூச்சியைப்பற்றி வேளாண் குடிமக்கள் பொதுவாக அறிவார்கள். எள்ளைக்குடைந்து சாற்றை உறிஞ்சுவதால் எள் குடையான் என்று கூறப்படும் இப்பூச்சி, பேச்சு வழக்கில் எக்கடையான் என்று மருவி வழங்குகிறது. அதுபோலவே நாவாய்ப் பூச்சி என்ற பெயர் நாவல் என மருவி வழங்கப்படுகிறது. ஆனால் அப்பூச்சி எங்கிருந்து வருகிறது எப்போது வருகிறது எப்பயிர்களை எல்லாம் தாக்குகிறது என்பதைப் பலரும் அறிந்திருக்க முடியாது.

இப்பூச்சியானது எலாஸ்மோலோமஸ் சார்டிடஸ் என்ற கருத்த பழுப்பு நிறமுடைய உடலும், சுமார் 1 செ. மீ. நீளமும், உறிஞ்சும் வாய் உறுப்புகளையும் உடைய ஒருவகை நாவாய் பூச்சியாகும். இப்பூச்சிகள் பொதுவாக பல பயிர்களையும், அறுவடை செய்த தானியங்களையும் தாக்கினாலும், சிறப்பாக, இவை எள்ளிலும், அறுவடை செய்து போர் வைத்திருக்கும் மணிலாவிலும் மிகுந்த சேதத்தை உண்டுபண்ணுகின்றன.

இப்பூச்சிகளை எப்போது காணலாம்? பொதுவாக மழைக் காலங்களிலும், மேக மூட்டம் சூழ்ந்த பகல் மற்றும் இரவு நேரங்களிலும் இப்பூச்சியின் நடமாட்டம் மிகுதியாக இருக்கும். இப்பூச்சிகள் இரவில் வெளிப்பட்டு, பயிர்களையும், போர் வைத்த தானியங்கள், எள் மற்றும் மணிலாவையும் தாக்குவதால் இதனால் ஏற்படும் சேதம் வெளியில் தெரிவதில்லை. இப்பூச்சிகள் வெளிச்சத்தைக் கண்டு ஓடி ஒளிவதால் இவை இரவில் வைக்கப்படும் விளக்குப் பொறிகளில் காணப்படமாட்டாது.

இப்பூச்சிகளை எங்கு காணலாம் ? இப்பூச்சிகள் பகலில் எருக்குழிகளிலும், போர் வைத்திருக்கும் மணிலாக்கொடிகளிடையேயும், போர் வைத்திருக்கும் எள் மற்றும் தானியப் பயிர்களிலும், மிகுதியாகக் காணலாம். பகலில் பயிர்களிடையே விழுந்திருக்கும் காய்ந்த இலைச் சருகுகளிலடியிலும் காணலாம். இப் போர்களை அகற்றி இப்பூச்சிகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தால், அவை மிகுந்த வேகத்துடன் ஓடியும், பறந்தும் சென்று வெளிச்ச மற்ற இடங்களிலும், புதர்கள் மற்றும் செடிகளிடையேயும் பதுங்குவதைக் காணலாம்.

**இப்பூச்சிகளின் வாழ்க்கை:**

இவற்றின் பெண் பூச்சிகள் எள், மணிலா மற்றும் பலவகையான புல், பூண்டுகளில் தம் முட்டைகளை இடுகின்றன. இம் முட்டைகள் பொரித்து இறக்கையில்லா சிறு குஞ்சுகளாக வெளிவருகின்றன. நான்கு இளம் பருவங்கள் கடந்த பின் இவை இறக்கை முளைத்த வளர்ந்த பூச்சிகளாக மாறுகின்றன. இளம் பூச்சிகளும், மற்றும் வளர்ந்த பூச்சிகளும், முன் கூறியபடி எள், மணிலா, மற்றும் களைச் செடிகளின் சாற்றை உறிஞ்சிக் குடித்து வளர்கின்றன.



இப்பூச்சிகளால் ஏற்படும் சேதம் : எள் பயிர் முதிர்ந்து வருங்காலத்தில் இப்பூச்சிகள் இரவில் மிகுதியாக எள் காய்களின் மீது அமர்ந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதாலும், எள் அறுவடைக்குப்பின் போரிலும் காய்களை உறிஞ்சி சாற்றைக் குடிப்பதாலும், எள் விதைகள் சுருங்கி பதர் போன்று ஆகிவிடுகிறது. இவற்றில் எண்ணெய்ச்சத்தும் வெகுவாகக் குறைந்து விடுகிறது. எள் மகசூலில் எடை மிகவும் குறைகிறது. இது போலவே அறுவடை செய்து போரில் இருக்கும் மணிலா கொட்டையையும் இப்பூச்சிகள் உறிஞ்சுவதால், அவற்றில் உள்ள எண்ணையின் அளவும், எடையும் குறைகிறது. மேலும் மணிலாப் பயிரை இப்பூச்சிகள் தம் கூறிய ஊசி போன்ற வாய்ப் பகுதியால் துளைக்கும்போது இதன் வழியாகப் பயிரைத்தாக்கி சேதப்படுத்தும், ஆஸ்பர்ஜில்லஸ் என்ற ஒருவகை பூசணம் புகவும், அதனால் அப்பயிரில் அஃப்ளாடாக்சின் என்ற விஷப்பொருள் உற்பத்தியாகவும் ஏதுவாகிறது.

**இப்பூச்சிகளைக் கட்டுப்படுத்துவது எவ்வாறு?**

(1) இப்பூச்சிகள் பொதுவாகப் பயிர்க்களைகளிடையே மறைந்து உறைவதால் களைகளை அகற்றுவது நன்மை பயக்கும். (2) எருக்குழிகளில் பி. எச். சி. 10 சதம் தூளை தூவி வைத்தல். (3) எள் பயிர் முதிர்ந்து வருங்காலத்தில் அறுவடைக்கு 10 நாட்களுக்கு முன் பி. எச். சி. 50 சதம் நனையும் தூளை லிட்டருக்கு 2 கிராம் வீதம் தண்ணீரில் கரைத்து காய்களின் மீது படும்படி தெளித்தல். (4) எள் அறுவடைக்குப் பின் போர் வைக்கும் போது தரையில் பி. எச். சி. 10 சதம் தூளைத் தூவி, பின் நடுவில் செல்பாஸ் மாத்திரை ஒன்றை 5 அல்லது 6 அடுக்குச் செய்தித் தாளில் சுற்றி வைத்து அதன் மீது போர் வைத்தல். இதனால் தரையில் ஊர்ந்துவரும் இறக்கை முளைக்காத பூச்சிகளை பி.எச்.சி தூளும், பறந்து வந்து போரிலும் புகும் வளர்ந்த பூச்சிகளை செல்பாஸ் மாத்திரையிலிருந்துவெளிப்படும் பாஸ்பீஸ் என்ற விஷவாயுவும் கொல்ல ஏதுவாகும். பல்கலைகழகத் தகவல் தொடர்பு நிலையம் இத்தகவலைத் தெரிவிக்கின்றது.



# கோவையிலே தப்பாது வளரும் சிப்பிக் காளான்!

டாக்டர் எஸ். சண்முகம்,
பேராசிரியர் & தலைவர்,
தாவர நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.

உணவுக் காளான் உற்பத்தி முன்னேற்றமடைந்த நாடுகளில் ஒரு பெரிய உபதொழிலாக வளர்ந்து வருகிறது. உலகில் உற்பத்தியாகும் ஏழரை லட்சம் டன் உணவுக் காளான் பெரும்பாலும் அமெரிக்கா, பிரான்ஸ்; இங்கிலாந்து, தைவான் ஆகிய நாடுகளில் விளைவிக்கப்படுகிறது. ஆனால் இந்தியாவில் கடந்த ஏழெட்டு ஆண்டுகளாகத்தான் உணவுக்காளான் வளர்ப்பு பிரபலமடைந்து வருகிறது. நமது நாட்டின் உணவுக்காளான் உற்பத்தி ஆண்டிற்குச் சுமார் 400 டன்களுக்கும் குறைவுதான். காளானை, அதிலுள்ள தனி மணத்திற்கும், பிரத்தியேக ருசிக்கும் உலகெங்கிலுமுள்ள உணவு ரசனையாளர்கள் மிகவும் விரும்புகிறார்கள். இதுதவிர மனித தேவைக்கேற்ப புரதங்கள் அதிகமாகவும் (மூன்றரை சதம்) சர்க்கரைச் சத்துக்களும் (அரைசதம்) கொழுப்புச்சத்து (0.1 சதம்) மிகக் குறைவாகவுமுள்ளது. அதனால் அது கொழுப்பும் மாவுச் சத்தும் தவிர்க்கப்படவேண்டிய கட்டாய நிலையிலுள்ள நோயாளிகள் உட்கொள்ள ஏற்றது. உணவுக்காளானில் உள்ள புரதம் காபேஜ் போன்ற காய்கறிகளில் பழத்தில் உள்ளதைவிட இரண்டு மடங்கும், ஆரஞ்சுப் பழத்தைவிட நான்கு மடங்கும் ஆப்பிள் பழத்தைவிட பன்னிரண்டு மடங்கும் உள்ளது. அரிசி கோதுமையில் கிடைக்காத லைசின் அமினோ அமிலங்கள் உணவுக்காளானில் அதிகம் உள்ளன. ஒரு மனிதனுக்கு ஒரு நாளைக்கு எழுபது கிராம் புரதம் தேவை. ஆனால் நாம் உண்பதோ மூன்றில் ஒரு பங்கு கூட இல்லை. இதனால் பாரத நாட்டில் சுமார் 66 சதவீத மக்கள் புரதக் குறைபாடுகளினால் பாதிக்கப்படுகின்றனர். எனவே நாட்டில் உள்ள புரதக் குறைபாடு நீங்கவும் உணவுக் காளான் வளர்ப்பு ஒரு விதத்தில் உதவுகிறது. கழிவுப் பொருள்களை உபயோகப்படுத்திகாளான் வளர்ப்பது இதிலடங்கிய மற்றொரு அம்சம். இதற்குப் பெரும்பாலும் நெல்வைக்கோலை உபயோகப் படுத்துகிறோம். ஐக்கிய நாட்டு சபையின் உணவு விவசாய நிறுவனம் 1977ல் வெளியிட்ட ஒரு கணக்கின்படி உலகில் விளையும் வைக்கோலின் கால் பகுதி (சுமார் 233 கோடி டன்) காளான் வளர்ப்பிற்குப் பயன்படுத்தினால் 38 கோடி டன் உணவுக் காளான் கிடைக்குமென்றும், அதை ஒரு நாளைக்கு கால் கிலோ காளான் என்ற அளவில் 410 கோடி மக்கள் புசிக்கலாம் என்றும் கூறுகிறது. எனவே கழிவுப் பொருட்களிலிருந்து ஒரு வகை உணவு உற்பத்தி செய்யவும், விவசாயிகளுக்கு ஒரு உபதொழிலாக விளங்கவும், நாட்டின் புரதக்குறைபாட்டை ஓரளவு ஈடு செய்யவும் காளான் வளர்ப்பு ஒரு பயன் தரும் சேவையாக விளங்குகிறது. உணவுக்காளான் வளர்ப்பில் இந்தியாவின் ஏனைய மாநிலங்களுக்குத் தமிழ்நாடுதான் முன்னோடி என்று சொன்னால் மிகையாகா. 1940ஆம் ஆண்டில் விவசாயக் கல்லூரி, கோவையில் தான் நெல் வைக்கோல் காளான் வளர்ப்பு நுட்பங்கள் முதன் முதலில் கண்டறியப்பட்டன. 1976ம் ஆண்டில் சிப்பிக்காளான் வளர்ப்பு இந்தப் பல்கலைக் கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

''பிளிரோட்டஸ் சஜோர் காஜூ'' என்னும் பூசணத்தைத் தான் சிப்பிக்காளான் என்கிறோம் .சிப்கிக்காளானை வளர்ப்பது எளிது. இந்தக் காளான் 22 முதல் 30 சென்டிகிரேட் வரை உள்ள உஷ்ணமும் எண்பது சதவிகிதத்திற்கு மேலுள்ள ஈரநிலையும் உள்ள சூழ்நிலையில் நன்கு வளருகிறது. கோவையில் ஐப்பசி மாதம் (அக்டோபர் முதல் பிப்ரவரி வரை) துவங்கித் தை முடியும் வரை உள்ள காலத்தில் குறைந்த உஷ்ணம் 21 டிகிரி சென்டிகிரேட்டிற்கும் அதிகபட்ச உஷ்ணம் 30-31க்கும் அடங்கியும் ஈரநிலை 85 முதல் 90 சதவீதம் வரை இருப்பதால் சிப்பிக்காளான் வளர்ப்பதற்கு ஏற்றதாகும். மேலும் காளான் வளர்க்கும் இடத்தில் தரையில் தண்ணீர் தேங்க வைத்தல் அடுக்குகளைச் சுற்றி ஈரச்சாக்கு படுதாக்களைத் தொங்க விடுவது, வித்திடும் பருவத்தில் வெளிச்சத்தைக் குறைப்பது போன்ற முறைகளால் வளரும் சூழ்நிலையை மேலும் மேன்மையடையச் செய்யலாம்.

சிப்பிக்காளானைச் சதுரப் படுக்கை முறையிலோ உருளைப் படுக்கை முறையிலோ வளர்க்கலாம். வளர்க்க உபயோகப் படுத்தப்படும் வைக்கோலை ஊரவைத்த பின்கொதிக்கும்வெந்நீரில் பதினைந்து நிமிடங்கள் வரை முகிழ்த்து எடுத்தபின் காளான் வித்திட உபயோகப் படுத்த வேண்டும். ஒரு கிலோ வைக்கோலிற்கு பத்து சதம்முதல் 30 சதம் வரை காளான் வித்துக்கள் உபயோகிக்கலாம். கவனிக்கப்படவேண்டிய ஒரு மிகவும் முக்கியமான அம்சம் என்னவெனில் காளான் வளர்ச்சியைப் பாதிக்கும் வேறு பூசணங்கள் தாக்காத வகையில், வைக்கோல் காளான் வித்துக்கள் ஆகியவற்றைப் சுத்தமாகக் கையாளவேண்டும். காளான் வித்துச் சீசாக்களை வித்திடும் வேளை தவிர மற்ற சமயங்களில் திறந்து வைக்கக்கூடாது. காளான் வித்துட்டு பதினாறு பதினெட்டு நாட்களுக்குப் பிறகுப் படுக்கையைச் சுற்றியுள்ள பாலித்தின் தாளை அப்புறப்படுத்திவிட்டு வளர்ப்புப் பருவத்திற்கு வைக்க வேண்டும். வித்திட்டு 20 அல்லது 25 நாட்களுக்குப் பிறகு காளான் தோன்றும் காளான் குடை நன்கு விரிந்தபின் அறுவடை செய்யலாம்.

காளான் வளர்ப்பில் ஏற்படும் ஐயங்களுக்குத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத் தாவர நோயியல் துறையை அணுகி தீர்த்துக் கொள்ளலாம். இப்பொழுது விநியோகிக்கஏராளமான எண்ணிக்கையில் காளான் விதைச்சீசாக்கள் தயாராக உள்ளன. ஒரு விதைச் சீசாவின் விலை ரூ. 2.50 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. குறைந்தது இரண்டு சீசாக்கள் தான் அனுப்ப இயலும் வெளியூரில் வேண்டுபவர்கள் இரண்டு சீசாவின் விலையாக ரூபாய் ஐந்துடன் கட்டுமானம் மற்றும் அனுப்பச் செலவு ஒரு சீசாவிற்கு ரூபாய் ஒன்றரை என ரூபாய் மூன்றும் தபால் செலவு ரூபாய் எட்டும் ஆக மொத்தம் ரூபாய் பதினாறு முன் பணமாக அனுப்ப வேண்டும்.

உணவுக்காளான் வளர்ப்பு தமிழ் நாட்டிலும் ஒரு வேளாண் துணைத் தொழிலாக வளர வாய்ப்புள்ளது. அதற்கான முன்னோடித் திட்டம் ஒன்று இங்கு செயல்பட்டு வருகிறது. எனவே தற்காலத்தில் நிலவும் குளுமையூட்டும் குளிர்காலப் பருவத்தில் கோவை விவசாயிகள் உணவுக் காளான் வளர்ப்பிலும் முனைப்பாகச் செயல்பட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

# எள்ளில் ஏற்படும் பச்சைப் பூ நோயைக் கட்டுப்படுத்துவது எப்படி?

**டாக்டர் மு. மோகனசுந்தரம்**
**கோ. நல்லதம்பி**
**மண்டல வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், விருத்தாசலம்.**

எள் ஒரு முக்கியமான எண்ணைவித்துப் பயிராகத் தென்னாட்டில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 1,13,000 ஹெக்டேர் பரப்பில் எள் பயிரிடப்படுகிறது. தமிழ்நாட்டில் பொதுவாக எள் ஒரு மானாவாரிப்பயிராக ஜூன்-அக்டோபர் மாதங்களில் பயிரிடப்படுகிறது. இறவையில் எள், பிப்ரவரி-மே மாதங்களில் ஒருசில இடங்களில் பயிரிடப்படுகிறது. மேலும் எள் தனிப்பயிராகவும், கலப்புப் பயிராகவும் பல இடங்களில் பயிரிடப்படுகிறது. எள் பயிரிடுவதற்கு விதை மற்றும் சாகுபடி செலவுகள் மிகவும் குறைந்ததாக, ஹெக்டேருக்கு சுமார் ரூபாய் 250-300 ஆக இருப்பதாலும், பின்செய் நேர்த்தி முறைகள் குறைவானதாகவும், அறுவடை சுலபமாக, சிக்கனமாக இருப்பதாலும், மகசூலும், நிகரலாபமும் அதிகம் இருப்பதாலும், தமிழ் நாட்டில் வேளாண்குடி மக்களால் எள் விரும்பிச் சாகுபடி செய்யப்படுகிறது. இத்துணை சிறப்புவாய்ந்த எள் பயிரைப் பலவித நோய்கள் தாக்கி மிகுந்த சேதத்தை உண்டு பண்ணுகின்றன. இவற்றுள் மிகவும் முக்கியம் வாய்ந்தது எள் பச்சைப்பூ நோய் ஆகும்.

**நோய் பரவும் முறை:** எள் பச்சைப்பூ நோய் மைக்கோப்ளாஸ்ம என்ற ஒருவித நச்சுயிரியால் ஏற்படுகிறது. இந்நச்சுரிகளைச்சாதாரண உருபெருக்கிகளின் மூலம் காண முடியாது. இந்நோய் வாய்ப்பட்ட எள் செடிகளில் இருந்தும், மற்றும் இந்நோய் நச்சுயிரிகளைத்தாங்கி நிற்கும் களைகள் மற்றும் சணப்பு போன்ற பயிர்களில் இருந்தும் சாற்றை உறிஞ்சி குடிக்கும் பூச்சிகளால் பரப்பப்படுகிறது. நோய் உற்ற ஒரு செடியில் இலை தத்துப்பூச்சிகள் சாற்றை உறிஞ்சும் போது, சாற்றுடன் இந் நச்சுயிரிகளும் அவற்றின் உடலினுள் புகுந்து, பரவி, உமிழ்நீர் சுரப்பிகளை அடைகின்றன. பின்பு, இத் தத்துப்பூச்சிகள் நோயற்ற எள் செடியின் மீது அமர்ந்து சாற்றை உறிஞ்சும் போது, அவை தம் உமிழ்நீரைச் செடியினுள் செலுத்துகின்றன. இவ்வுமிழ்நீரில் கலந்துள்ள நச்சுயிரிகளும் செடியினுள் செலுத்தப்படுகிறது. இப்படி பரப்பப்பட்ட நச்சுயிரி பல்கிப் பெருகி, செடியின் வளர்ச்சித் தன்மையை மாற்றி விடுகிறது. இந்நச்சுயிரியால் தாக்கப்பட்ட செடியின் இலைகள் சிறுத்து, கடினத் தன்மை எய்துகின்றன. பூவும், பூவின் மொட்டுகளும், பச்சையாக மாறுகின்றன. பூவின், அல்லிவட்டம், புல்லிவட்டம், சூல் மகரந்தப்பைகள் போன்ற பாகங்கள் தத்தம் தனித்தன்மைகளை இழந்து, இலைகள் போல் பச்சையாக மாறிவிடுகின்றன. இதனால் இப்பூக்கள் காய்பிடிப்பதில்லை. மேலும் தாக்குதலுக்கு முன்பே உண்டான காய்களிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன. இக்காய்கள் வெடித்து, இதனுள் வளர்ந்து வரும் விதைகளும் பச்சையாக மாறி, இலைகள் போல் முளைக்க ஆரம்பிக்கின்றன. பொதுவாகத் தாக்கபட்ட செடிகள் பச்சையாகப் பூங்கொத்துக்கள் போல் மாறி, காய்கள் இன்றி இருக்கும். மோசமான தாக்குதல்களில் 90 முதல் 98 சதம் வரை செடிகள் தாக்கப்பட்டு மகசூல் முழுமையாக பாதிக்கப்படலாம். ஆகவே எள்ளைத் தாக்கும் நோய்களுள் இப்பச்சைப்பூநோயே மிகவும் முக்கியமானதாகும்.

**தடுக்கும் மற்றும் அழிக்கும் முறைகள்:**

1. நோய் தாக்காத அல்லது நோய் எதிர்க்கும் அல்லது நோய் தாங்கும்சக்தியுடையரகங்களைப் பயிரிடலாம். தற்போது அத்தகைய ரகங்கள் பற்றிய ஆராய்ச்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப் பட்டு வருகிறது. விவசாயிகள் தற்போது பயிரிடும் எல்லா ரகங்களும் இந்நோய்க்கு இலக்காகும் குணமுடையவை.

2. வயலைச் சுற்றியும், களைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளல். இந்நோயை உண்டு பண்ணும் நச்சுயிரிகள் களைகளிலிருந்து பயிருக்குப் பூச்சிகள் மூலம் பரவுவதால், களைகளைக்கட்டுப் படுத்துவதால், நோய் பரவுதல் குறையும்.

3. எள் பயிரிடப்படும் வயல்களிலும், அதன் அருகிலும்சணப்புப்பயிரிடுதலைத்தவிர்த்தல். இந் நச்சுயிரிகள் சணப்புப் பயிரைத் தாக்கி பெருகுவதால் பக்கத்தில் பயிரிடப்படும் எள்ளுக்குப் பூச்சிகள் மூலம் பரவ மிகுந்த வாய்ப்பு உண்டு.

4. இரவில் விளக்குப்பொறி வைத்து, இலைத் தத்துப்புச்சிகளைக் கவர்ந்து அழித்தல். நோயைப் பரப்பும் இலைத்தத்துப்பூச்சிகள் மிகுந்த அளவு இரவில் விளக்கு வெளிச்சத்துக்குக் கவரப்பட்டு அழிவதால், விளக்கு பொறி ஒரளவு நன்மைபயக்கும்.

5. விதைத்த 20வது, 40வது மற்றும் 60வது நாட்களில் ரோகார் அல்லது மெட்டா சிஸ்டாக்ஸ் அல்லது டைமிக்ரான் போன்ற மருந்துகளில் ஏதாவது ஒன்றை ஏக்கருக்கு 300 மில்லி வீதம் தெளிப்பானுக்கு ஏற்றவாறு தண்ணீரில் கலந்து தெளித்து நோய் பரப்பும் தத்துப்பூச்சிகளை அழித்தல்.

6. பயிரிடும் பருவம் - தமிழ் நாட்டில் செப்டம்பர் மாதத்தில் விதைத்து பயிரிடப்படும் எள் பயிர் மிகக் குறைந்த அளவில் இந்நோயால் தாக்கப்படுகிறது. ஆகவே இந்நோய் தீவிரமாகக் காணும் இடங்களில் மேற்கண்ட பருவத்தில் எள் பயிரிடலாம்.

7. பயிர் ஆரம்ப முதல், நோய் காணப்படும் செடிகளை உடனுக்குடன் வேருடன் களைந்து எரித்துவிடுவதால், பயிரில் நோய் பரவும் வாய்ப்பு குறைக்கப்படும்.

## மாணவர் பக்கம்



# தமிழ்நாட்டுப் பள்ளிகளுக்குப் பரிசு

பள்ளி மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை அதிகரிக்க ஆண்டு தோறும் தென்மாநிலப் பள்ளி மாணவர்களுக்கான அறிவியல் கண்காட்சி நடத்தப்படுகிறது. இவ்வாண்டு ஜனவரி மாதம் ஐதராபாத்தில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த தமிழகப் பள்ளிகள் மற்றும் தமிழக மாணவர்கள் விஞ்ஞானக் காட்சிப் பொருட்கள் பல பரிசுகளைப் பெற்றுள்ளன.

பெங்களூர் விஸ்வேஸ்வரய்யா தொழில்நுட்ப அருங்காட்சியகத்தின் ஆதரவோடு இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

மன்னார்குடி பின்லே மேல்நிலைப் பள்ளி ஆயிரம் ரூபாய் பெறுமான புத்தகங்களைப் பரிசாகப் பெற்றது.

நெய்வேலி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவி ஈ.ராதாதேவி பரிசு பெற்றார். இவ்விரு பரிசுகளையும் விஸ்வேசுவரய்யா தொழில்நுட்ப அருங்காட்சியகம் வழங்கியுள்ளது. இது அல்லாமல், ராயக்கோட்டை (தர்மபுரி மாவட்டம்) திருச்சி, களத்தூர் ஆகிய இடங்களிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளும், சென்னைப் புரசவாக்கம் எம்.சி.டி. முத்தய்யா செட்டியார் மேல்நிலைப்பள்ளியும் தமிழக அரசு வழங்கிய நிதியிலிருந்து பரிசுகள் பெற்றுள்ளன.

இதே நிதியிலிருந்து ராயபுரம் செயிண்ட் அண்ட்ஸ் மேல்நிலைப் பள்ளி மாணவர் எலிசபெத், வர்கீஸ், நெய்வேலி மேல்நிலைப் பள்ளி மாணவர் பி.ராமபிரசாத் சுப்பிரமணியன் மேல்நிலைப் பள்ளி மாணவி சி.எல். சுஜாதா ஆகியோர் படிப்புக்கான உபகாரச் சம்பளங்களைப் பரிசாக பெற்றுள்ளார். இவையல்லாமல் தமிழக நிதியிலிருந்து எம். கஸ்தூரி (ராயபுரம்), ஜி. கண்ணன் (பூணூர்) பெஞ்சமின் ஜெயராஜ் (கொட்டாராம்-குமரி மாவட்டம்) ஆகிய பள்ளி ஆசிரியர்கள் பரிசு பெற்றுள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் தொழிலதிபர் வழங்கிய நிதியிலிருந்து தமிழக மாணவர்கள் 20 பேர் பரிசுகள் பெற்றுள்ளனர். அவர்களது பெயர் விவரம் வருமாறு ஏ. ராமச்சந்திரன் (ராஜபாளையம்) ஏ. ரமேஷ் ஆர்.வி. சுரேஷ் பாபு பி. வஜாரஞ்சன் என். செல்வி, ஆர்.வி. கிருஷ்ணன் பி. ஸ்ரீவித்யா ஆகிய சென்னைப் பல்கலைப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் எஸ். சாந்தி, ஜெக பிரான்சிஸ் ஆகிய கோவை நகரைச் சேர்ந்தவர்கள் முகமது அன்சார் (களத்தூர்), டி. சுரேஷ் செல்வராஜ் (திருத்தாங்கல்), எஸ் எஸ். பாலராஜ் (நீலகிரி), ஆர். நாகேஷ்பாபு (ராணிப்பேட்டை), ஆர்.முத்துக்குமார் (ராஜபாளையம்) என். ராமபிரசாத் (ராயக்கோட்டை), ஆர். ஜெயராஜ் (திருச்சி), என். கல்யாணசுந்தரம் (மன்னார்குடி), ஜி. முத்தய்யா (திருவெள்ளார்), எஸ். முருகு இளங்கோ (தஞ்சை) ஆகியவர்களும் பரிசுகள் பெற்றுள்ளனர்.

### விறகும் வெப்பமும்

காடுகள் அழிந்த இடங்களில் மீண்டும் மரங்களை வைத்துக் காடு வளர்ப்பது கட்டாயம் தேவை. நிறையக் கிளைகள் பரப்பி விரைந்து வளரும் மரங்கள் பல உள்ளன. அவற்றுள் ''ஹாவாய் ஜயன்ட்'' என்பது ஒன்று; எல் சால்வடோரில் உள்ள ''லுக்கேனா'' என்பது மற்றொன்று. இந்த லுக்கேனா மரம் காற்றில் ஈரப்பதம் மிக்க, அல்லது அரைகுறை ஈரப்பதம் உள்ள வெப்ப மண்டல நாடுகளுக்கு மிகவும் பொருத்தமானது. அது மழை காணாமலே நெடுநாள் வாடாமல் நிற்கக் கூடியது; பல வகையான மண்ணிலும் வளரக் கூடியது. மிகவும் அமிலத் தன்மையுள்ள நிலத்திலும் கடல் மட்டத்துக்கு மிகவும் உயரமான இடங்களிலுமே இது நன்கு வளர்வதில்லை.

# தமிழால் பெறுக பண்பாடு!

கு. சிவமணி



மொழியே சம்மா மொழிபேசு!
மூத்த தாய்தமிழ் மொழிபேசு!
வழியே வழங்கும் மொழிபேசு!
வான்புகழ் வள்ளுவர் மொழிபேசு!
இயல்தமிழ் அறிவின் கூறாகும்,
இசைத்தமிழ் உணர்வின் ஒலியாகும்,
செயல்திறம் நாடக இயல்பாகும்,
சேர்ந்திடும் முத்தமிழ் மனமாகும்.
தமிழே உயிரென நீபாடு!
தமிழே வாழ்வென நீஆடு!
தமிழின் ஆக்கம் நீநாடு!
தமிழால் பெறுவாய் பண்பாடு!



## இது உங்கள் பக்கம்

மாணவ மணிகளே! இது உங்கள் பக்கம். உங்கள் திறமைகளை வெளிப்படுத்த இந்தப் பகுதி உதவும். கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு, சித்திரம் முதலானவற்றை நீங்கள் எழுதி அனுப்பலாம். அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். எழுதும் போது உங்கள் பள்ளியின் முழு முகவரியையும் குறிப்பிடவேண்டும்.

—ஆசிரியர்.

## அறிவுச் சுடர்

உலகில் முதன் முறையாகப் பொருட்களின் விலை மற்றும் எடையினை அறிவிக்கும் 'பேசும் நிறுத்தல் கருவி' ஒன்றை ஜப்பானிய நிறுவனம் உருவாக்கியுள்ளது.

அண்மையில் விற்பனைக்கு வந்த இந்தக் கருவியில், பொத்தானை அழுத்தியவுடன் பொருளின் விலையை அது தெரிவிக்கும். 0 முதல் 9 வரையிலான எண்கள் இதில் உள்ளன.



ஆண்டுதோறும் ரூ. 5,000 கோடி மதிப்புள்ள உணவுத் தானியங்களை விழுங்கிவிடுகின்றன எலிகள். இதுமட்டுமல்ல, ஒவ்வொரு எலியும் ஒரு தானியத்தைக் கொறித்துவிட்டு, நான்கு தானியங்களைக் கொண்டுபோய் வலைகளில் சேமித்துவைக்கிறது. இவ்வாறு ஐம்பது இலட்சம் டன்களுக்கு மேல் எலி வயிற்றிலும், வலையிலும் போகிறது!

## அதிசயக் கோழி

இதர பெட்டைக் கோழிகள் உண்பதனைவிட மிகக் குறைவாக உண்டு, ஆண்டுக்கு 260 முட்டைகளை இடும் கோழி ஒன்றை பம்பாய் ஆரே பால் காலனியில் உள்ள மத்திய கோழி வளர்ப்புப் பண்ணை உருவாக்கி உள்ளது. 'பம்பாய் ஹைபிரிட்-78' என்று பெயரிடப்பட்டுள்ள இந்தக் கோழி 'பி எச்-78' என்று சுருக்கமாக அழைக்கப்படுகின்றது.

பண்ணையில் பத்தாண்டுகளுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான வளர்ப்புத் திட்டங்களின் பயனாக பி.எச்-78 உருவாக்கப்பட்டுள்ளது. இதனை உருவாக்கிய விஞ்ஞானிகள் பிஎச்-78 இலாபந் தரும் ஒரு இனம் எனப் பெருமையுடன் குறிப்பிடுகின்றனர்.

இருபத்தியிரண்டு வாரங்களிலேயே முட்டையிடுவதற்கான பாதி பக்குவத்தை பிஎச்-78 அடைகின்றது. 28 வாரத்தில் முட்டையிடத் துவங்கி, 48-வது வாரம் வரை பிஎச்-78 முட்டையிடுதலில் உச்சகட்டத்தினை அடைகின்றது. பிஎச்-78 இடும் முட்டையின் எடை 54 கிராம். இதன் இறப்பு விகிதமும் மிகவும் குறைவாகவே உள்ளது.

''கோழி வளர்ப்பு உலக வழக்கு, ஆயினும் இலாபகரமானது பிஎச்-78'' என்ற ஒரு முழக்கத்தைப் பண்ணையினர் உருவாக்கியுள்ளனர்.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
# தொழில் வளர்ச்சிக்குத் தேவை
# டான்சி




தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

## டான்சி


**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI


DIPR

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணர்ச்சியை உருவாக்கப் பஞ்சாயத்துக்கள் பயன்படுத்தப்படும்.

மாணவர் சமூகத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பொதுவினியோக முறை விஸ்தரிக்கப்படும். விடுதி மாணவர்களுக்கு அவசியப் பண்டங்களுக்கான பர்மீட்டுகள், வினியோக நெறிமுறைகள் ஒழுங்கு படுத்தப் படும். பாடப்புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் அச்சடிப்பதற்குத் தேவையான காகிதங்களை மாநிலங்களுக்கு மத்திய கல்வி அமைச்சகம் ஒதுக்கீடு செய்தது. வருங்காலத்தில் பள்ளிகளில் சேர்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு மாநிலங்களுக்கு அனுப்பப்படும் காகித அளவும் அதிகரிக்கப்படும். நோட்டுப் புத்தகங்கள் கண்ட்ரோல் விலைகளில் வழங்கப்படும் தற்போதைய நடைமுறையும் தொடரும்.

குறைந்த கட்டணங்களில் பாடப்புத்தகங்களை வெளியிடுவதற்குக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பாடப் புத்தகங்களில் அடிக்கடி மாறுதல்கள் தவிர்க்கப்படும்.

பாடப் புத்தகங்கள் வெளியிடுவதில் காலதாமதத்தைத் தவிர்க்கும் விதத்தில் பாடப் புத்தகங்கள் அச்சிடும்போது மொத்த ஆர்டர் குறித்த காலத்தில் தரப்படும்.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள புத்தக பாங்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

பள்ளிக்கூடங்களிலிருக்கும் கூட்டுறவுகள் மூலம் பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வினியோகிக்கப்படும். இதன் மூலம் இடைத்தரகர்களுக்குப் போய்ச்சேர வேண்டிய கமிஷன் மிச்சப்படுத்தப்படும். இதனால் பாடப் புத்தகங்கள் எழுது பொருட்கள் குறைந்த விலையில் மாணவர்களுக்குக் கிடைக்கும்.



## தொழில்துறைக் கொள்கை

**அம்சம் 18 :** முதலீட்டு நடை முறையைத் தாராளமாக்கித் திட்டங்களை உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்காகத் தொழில்துறைக் கொள்கைகளைச் சீரமைத்தல், நவீன தொழில்நுட்பம் பெற கைத்தறி, கைவினை, சிறு கிராமத் தொழில்களுக்கு உதவுதல்.

ஆறாவது திட்டத்தில் இந்த லட்சியங்களையும், இலக்குகளையும் அடைவதற்காக முதலீட்டு நடைமுறையைத் தாராளமாக்கவும் தொழில்துறை கொள்கைகளைச் சீரமைக்கவும் கடந்த இரண்டாண்டுகளில் பல்வேறு நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. லைசென்சுகள் வழங்குவதற்கான காலவரையறை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சிறுதொழில்கள் அபிவிருத்திக்கும் அவற்றின் துரித வளர்ச்சிக்கும் வழி காணும் விதத்தில் இந்தத் தொழில் பிரிவுகளில் வரையறுக்கப்பட்டுள்ள முதலீட்டு வரம்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தொழில்துறை லைசென்சு முறையில் மேற்கொண்டு சீரமைப்பதற்குக் கவனம் அளிக்கப்பட்டு வருகிறது.

கிராம சிறுதொழில்களில் பெருமளவுக்கு வேலைவாய்ப்புவசதி இருப்பதால் அவற்றில் ஆறாவது திட்டத்தில் கணிசமான முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆறாவது திட்டத்தில் இதற்காக 1780 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கீடான 535 கோடி ரூபாயோடு இதை ஒப்பிட்டுப் பார்க்கையில் 3.3 மடங்கு அதிகமாகும்.

1984-85ம் ஆண்டிற்கான ஆறாவது திட்டத்தில் உற்பத்திக்கும் வேலை வாய்ப்பு இலக்குகளுக்கும் கிராமச் சிறுதொழில்களில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். அதுவும் குறிப்பாக பட்டுப்புழு வளர்ப்பு, ஜமுக்காளம் நெய்தல் போன்றவற்றில் அதிக முக்கியத்துவம் செலுத்தப்படும். நலிந்து போன தொழில் பிரிவுகளை மீண்டும் புதுப்பிப்பதற்கும் தேசிய கைத்தறி அபிவிருத்தி கார்ப்பொரேஷன் அமைப்பதற்கும் ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கைத்தறிப் பிரிவில் கண்ட்ரோல் துணி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டத்தை தீவிரப்படுத்துவதில் அக்கறை காட்டுமாறு மாநில அரசுகள் கோரப்பட்டுள்ளன. குறிப்பாக கிராமப்பகுதிகளில் நலிவுற்ற பிரிவினருக்கு கண்ட்ரோல் துணிகள் அதிக அளவுக்குக் கிடைக்கச் செய்வதே இம்முயற்சியின் நோக்கம்.

## கறுப்புப் பணத்தை எதிர்த்துப் போராட்டம்

**அம்சம் 19 :** கள்ளக் கடத்தல்காரர்கள், பதுக்கல்காரர்கள் மீது கடும் நடவடிக்கைகளை எடுத்துக் கறுப்புப் பணத்தைத் தடுத்தல்.

பதுக்கல் காரர்கள், கறுப்புச் சந்தைக் காரர்கள் மற்றும் கள்ளக் கடத்தல் காரர்கள் போன்ற சமூக விரோத சக்திகளுக்கு எதிராக அரசின் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்படும். அவசியப் பண்டங்கள் சட்டம், கறுப்புச் சந்தைத் தடுப்பு மற்றும் அவசியப் பொருட்கள் சப்ளை மற்றும் பராமரிப்புச் சட்டம் போன்ற நிர்வாக சட்டப்பூர்வமான நடவடிக்கைகள் கடுமையாக்கப்படும். கணக்




கில் காட்டாத வருமானத்தையும் வரி ஏய்ப்பையும் அடியோடு தடுக்கும் விதத்தில் வரி நிர்வாகம் கடுமையாகச் செயலில் இறங்கும்.

புலனாய்வு நிர்வாக இயந்திரத்தை வலுப்படுத்தல், ''காபி போஸா'' சட்டத்தின் ஷரத்துக்களை நடைமுறைப்படுத்துவதில் தீவிரம், பொருளாதாரம் மற்றும் சட்டப்பூர்வ நடவடிக்கைகள், அண்டை நாடுகளுடன் இருதரப்பு ஏற்பாடுகள் ஒத்துழைப்புஆகியவை அந்தச் செயல்முறைத் திட்டத்தில் அடங்கும்.

### அரசுத்துறை நிறுவனங்கள்

**அம்சம் 20 :** அரசுத்துறை நிறுவனங்கள் செயல்பாட்டில் அபிவிருத்தி காணுதல்.

உற்பத்தி, சுரங்கத் தொழில், போக்குவரத்து, வர்த்தகம், விற்பனை, திட்ட ஆலோசனை இப்படி பலவகையான பொருளாதார நடவடிக்கைகளில் இன்றைக்கு அரசுத்துறை நிறுவனங்கள் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றன. எஃகு, அணுசக்தி, சுரங்கத் தொழில் பெட்ரோலியம், இரசாயனங்கள் மற்றும் உரங்கள், கனரகப் பொறியியல் ஆகிய முக்கிய தொழில்களின் அபிவிருத்தியில் அரசுத்துறை நிறுவனங்கள் மகத்தான பங்காற்றி வருகின்றன. நுகர் பொருட்கள், மின்னணுச் சாதனங்கள் துறை ஆகியவற்றிலும் அரசுத்துறை நிறுவனங்கள் அடியெடுத்து வைத்திருக்கின்றன.

கடந்த 30 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தின் அடிப்படையில் முக்கியத் தொழில்துறைகளின் பொறுப்பு அரசுத்துறை நிறுவனங்கள் வசம் விடப்பட்டுள்ளது. துரிதமான வளர்ச்சிக்கு அவசியமான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தருவதிலும் மாநிலங்களுக்கு மகத்தான பங்கு உண்டு.

முழு ஆற்றல் திறனையும் முழுமையாகப் பயன்படுத்தி சிறப்பாகச் செயலாற்றுவதே நிறுவனங்களுக்கு இருக்கும் அவசிய, அவசர பொறுப்பாகும்.

1982-ம் ஆண்டு உற்பத்தி ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே உற்பத்திப் பிரிவு ஒவ்வொன்றும் முழு ஆற்றல் திறனுக்கும் செயல்படும் திறனுக்கும் இடையில் உள்ள இடைவெளிக்குக் காரணமாக அமையும் பிரச்சினைகளைக் களைந்துவிட்டு கூடுதல் உற்பத்திக்கு வழி காணவேண்டியது அவசியம்.

''வாய்மையே வெல்லும்'' என்பது நமது நாட்டின் தேசிய குறிக்கோள். அத்துடன், நம் அன்றாட வாழ்வில் ''உழைப்பே வெல்லும்''




என்ற குறிக்கோளையும் மக்கள் அனைவரும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நாட்டின் பிரதமர் புதிய 20 அம்சத் திட்டத்தையறிமுகப்படுத்தும்பொழுது நாட்டு மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளார். "முயற்சிதன் மெய்வருத்தக் கூலிதரும்'' என்பது வள்ளுவர் வாக்கு. உழைப்பே செல்வம்! 20 அம்சத் திட்டம் இந்த உண்மையைத்தான் வலியுறுத்துகிறது!

— பத்திரிகை தகவல் நிலையம்.
சென்னை

## சங்ககாலத் தமிழ் அறிஞர் அதங்கோட்டு ஆசானுக்குச் சிலை

அதங்கோட்டு ஆசானுக்கு அவர் பிறந்த குமரி மாவட்டம் அதங்கோட்டில் சிலை நிறுவப் படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சிலை உருவாக்க அரசு 65 ஆயிரம் ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது. வள்ளுவர் கோட்டத்தில் உள்ளது போன்று அதங்கோட்டு ஆசானின் சிலை அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. சிலை எழுப்பப்பட்ட பிறகு அங்கு மண்டபம் எழுப்புவது குறித்து ஆலோசனை செய்யப்படும். மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் சட்டசபையில் கேள்வி நேரத்தில் இத்தகவலைத் தெரிவித்தார்கள்.

## அரசினர் இந்திய முறை மருத்துவக் கல்லூரி பெயர் மாற்றம்

பாளையங்கோட்டை அரசினர் இந்தியமுறை மருத்துவக் கல்லூரியில் சித்தா முறையில் மட்டுமே பயிற்சி அளிக்கப்பட்டு வருவதால் அக்கல்லூரியின் பெயரை ''அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி'' என்று மாற்றம் செய்து தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.



# தொண்டு + தூய்மை

## துறைமுக மருத்துவ மனை

— மாதுசென்

**நம்நாட்டிலுள்ள துறைமுகப் பொறுப்புக் கழகங்களின் மருத்துவமனைகள் 11 உள்ளன. இவைகளில் 9 மருத்துவமனைகள் பெரியவை ஆகும். அந்தப் பெரிய மருத்துவமனைகளில் ஒன்றான சென்னைத் துறைமுக மருத்துவமனை மற்ற மருத்துவமனைகள் எல்லாம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாகவும் வழிகாட்டியாகவும் உள்ளது. அதன் அரிய பணிகளை விளக்குகிறது இக்கட்டுரை.**

**'த**னியார் துறையில் இயங்கி வரும் மருத்துவமனைகள் தாம் மிகவும் தூய்மையானவை - துப்புரவானவை. அவை போன்று ஒழுங்காகவும் அழகாகவும் நவீனமாகவும் பொதுமருத்துவ மனைகள் இயங்குவது கடினம்' என்று கூறுவோரின் கூற்றை நாம் பொய்யாக்க முடியும்.

ஆமாம், அப்படி உள்ளது இந்த மருத்துவமனை.

நவீன வளர்ச்சியில் முன்னணியில் நிற்கும் அயல்நாட்டைச் சேர்ந்த பலரும் இந்த மருத்துவ மனையைப் பார்த்த பிறகு ''எங்கள் நாட்டு மருத்துவ மனைக்கு ஒப்பாக இது விளங்குகிறது'' என்று கூறியுள்ளனர்.

தோற்றத்தில் மட்டுமல்ல; தொண்டிலும் எல்லாரும் கொண்டாடும் வகையில் விளங்குகிறது இந்த மருத்துவமனை. 13,000 பேர்கள் இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெறத்தகுதியுடையவர்கள். அவர்களுடைய குடும்பத்தினர் அனைவருக்குமே இங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் குறைந்தது 5 பேர் என்றும் கூடுதலாக சுமார் 15 பேர் என்றும் உள்ளனர். இத்தனைப் பேர் சிகிச்சை பெறும் மருத்துவமனைதான் இவ்வளவு சிறப்பாக இயங்குகிறது.

சேவையில் சிறந்த இந்த மருத்துவமனை 1939ஆம் ஆண்டில் ஒரு மருந்தகமாக ஏற்படுத்தப்பட்டது. அதுதான் படிப்படியாக வளர்ந்து இன்று சென்னைத் துறைமுக மருத்துவமனையாக வளர்ந்துள்ளது. புதிய மருத்துவ மனை 5.3.1959 அன்று சென்







னைத் துறைமுகத்தின் பன்னி
ரண்டாவது வாயில் அருகில்
தொடங்கப்பட்டது.

இம் மருத்துவமனைக்கு முன்ன
தாக 1942ஆம் ஆண்டில் நங்கூர
வாயிலுக்கு ( Anchorgate )
அருகில் மருந்தகம் தொடங்கப்
பட்டிருந்தது. அந்த மருந்தகத்
துடன் தண்டையார்பேட்டையில்
உள்ள துறைமுகப் பொறுப்புக்
கழகக் குடியிருப்புப் பகுதியிலும்
ஒரு மருந்தகம் தொடங்கப்பட்டு
சிறப்பாகச் செயல்பட்டு வரு
கிறது.

சென்னைத் துறைமுகப்
பொறுப்புக் கழகத்தில் ஏறத்
தாழ 13,000 பேர் வேலை செய்
கிறார்கள். அவர்களும், அவர்
களது குடும்பத்தாரும் 'டாக்
போர்டில்' வேலை செய்வோரும்
இந்த மருத்துவ மனையில்
சிகிச்சை பெறுகிறார்கள்.

இந்த மருத்துவமனையின்
சிறப்புக்களைப் பார்த்தவுடன்
புரிந்து கொள்ளலாம். இந்தியா
விலுள்ள துறைமுகப் பொறுப்புக்
கழகங்களின் மருத்துவ மனை
களுக்கு, பலவகைகளில் ஓர் எடுத்
துக்காட்டாக இந்த மருத்துவ
மனை திகழ்கிறது.

ஏனைய மருத்துவமனைகளில்
இல்லாத எத்தனையோ வசதிகள்
இந்த மருத்துவமனையில் உள்
ளன.

எலும்பு முறிவுக்குச் சிகிச்சை
அளிப்பதில் 'A.O' டெக்னிக்
முறை என்பது நவீனமானது.
உடைந்த எலும்புகளைத் துருப்
பிடிக்காத உயர்ரக இரும்புப்
பொருட்களை வைத்து இணைக்
கும் இந்தச் சிகிச்சை முறை
சென்னையில் தனியார் மருத்துவ
மனையில்தான் செய்யப்படு
கிறது. பொதுத் துறையில் உள்ள
மருத்துவமனைகளிலே இதுதான்
முதலாவதாகும். இந்தியாவில்





'A.O' டெக்னிக்முறையில் சிகிச்சை அளிக்கப்படும் மூன்றாவது மருத்துவ மனையாகும் இது. இதுவரை 11 பேருக்கு 'A.O' டெக்னிக்கில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. மூட்டுகளில் ஏற்படும் முறிவுகளுக்கு செயற்கை உறுப்புகளைப் பொருத்தி சிகிச்சை அளிக்கப் படுகிறது.

இந்த மருத்துவமனையின் ஒவ்வொரு பகுதியும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது. 'மலேரியா கிளினிக்' மிகுந்த சிறப்புடன் செயலாற்றி வருகிறது. வருமுன் காக்க, ரத்த சோதனை நிலையம் விரைந்து செயல்படுகிறது.

இம் மருத்துவமனையின் நீரிழிவு கிளினிக் குறிப்பிடத்தக்க ஒரு பகுதியாகும். இது எல்லா வித வசதிகளும் உள்ள ஓர் ஆராய்ச்சிக் கூடமாகத் திகழ்கிறது.

''DEX TROMETER'' என்ற கருவியின் மூலம் ரத்தத்தில்உள்ள சர்க்கரையை ஒரு நிமிடத்தில் தெரிந்து கொள்ளலாம். இன்சுலின் பம்பு இதுவரையில் சென்னையில் கிடையாது. இங்கு அமைக்கப்பட்டுள்ளது. இங்குஎம். சி. இன்சுலின் பயன்படுத்தப்படுகிறது.

இப்பகுதியில் சத்துணவுப் பொருட்காட்சி நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளது. நீரிழிவு நோயாளிகள் தானே செயல்படுவதற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. ஷிப்டு முறையில் துறைமுகத் தொழிலாளர்கள் வேலை செய்வதால் அவர்கள் வசதிக்கு ஏற்ப இங்கு மருத்துவம் அளிக்கப்படுகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு உரிய எல்லா வகையான சிகிச்சைகளும் இங்கு அளிக்கப்படுகின்றன.

காது மூக்கு தொண்டை சிகிச்சைப் பிரிவில் 'மைக்ரோ சர்ஜரி' செய்ய எல்லாவிதமான வசதிகளும் உள்ளன. காது கேட்காத தொழிலாளர்களுக்கு ரூ. 750 முதல் ரூ. 850 வரை மதிப்புள்ள காது கேட்கும் கருவி வழங்கப் படுகிறது. ஆடியோ டிராபிக் அறைகூட மிகச் சிறப்பாக உள்ளது. தேவையான வசதிகளும் நிறைந்துள்ளன. ஊனமுற்றோர் ஆண்டில் இங்கு 500 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஊனமுற்றோர் ஆண்டில் இம் மருத்துவ மனை ஆற்றிய பணியைத் தமிழ்நாடு அரசு பாராட்டியுள்ளது.

துறைமுக மருத்துவமனையில் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய பகுதிகளில் ஒன்று இருதயநோய்ச் சிகிச்சைப் பிரிவு. இங்கு இருதய அறுவை சிகிச்சை செய்கிறார்கள். இங்கும் நவீன வசதிகள் அனைத்தும் உள்ளன.

குழந்தைகள் மருத்துவப் பிரிவு மகப்பேறு மருத்துவப் பிரிவு என இம்மருத்துவ மனையில் மிக முக்கியப் பகுதிகள் உள்ளன. முடநீக்கு இயல் துறையைச் சேர்ந்த (Psychotheraphy) பகுதியில் மிக நவீனமான கருவிகள் உள்ளன.

காலை 7.30 மணி முதல் மாலை 7.30 மணி வரை இயங்கும் சென்னைத் துறைமுக மருத்துவமனையில் ஒரு கட்டடத்திற்குள்ளேயே பல மருத்துவத்துறையின் பிரிவுகளும் உள்ளன. இது ஒரு (Reference Hospital) என்ற வகையில் பலவகை வசதிகளைக் கொண்டதாக உள்ளது.

இம்மருத்துவ மனையினைச் சார்ந்த மருந்தகங்களாகஇரண்டு மருந்தகங்கள் உள்ளன. சென்னைத் துறைமுக நங்கூர வாயிலுக்கு அருகில் உள்ள மருந்தகம் ஒன்றும் , தண்டையார் பேட்டை குடியிருப்புப் பகுதியில் ஒன்றுமாக இரண்டு மருந்தகங்கள் உள்ளன. நங்கூர வாயிலில் உள்ள மருந்தகம் 1942-ல் உருவானது. இங்கு நாள்தோறும் வரும் நோயாளிகள் எண்ணிக்கை அதிகம். ஷிப்டு முறையில் பணி செய்ய வருவோர்














அனைவரும் இந்த மருந்தகத்தில் வந்து சிகிச்சை பெற்றுக்கொள்கின்றனர். இந்த மருந்தகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கும் தொழிலாளர் குடும்பங்களில் உள்ளவர்கள், அனைவருடைய விவரங்கள் அடங்கிய அட்டைகளை வைத்துள்ளனர். ஒருவர் தமது கார்டு எண்ணைச் சொன்ன ஓரிரு நிமிடங்களில் அவரைப் பற்றிய அந்தக் கார்டை எடுத்து விடுகின்றனர். அந்தக் கார்டுகள் அனைத்தும் தொகுத்து வைத்துள்ள முறையே நம்மைக் கவரக் கூடியதாக இருக்கிறது.

இந்த மருந்தகத்தில் உள்ள ஒவ்வொரு துறையும் நம்மை மிகவும் கவரக்கூடியதாக உள்ளது. மிகவும் கூட்டம் நிறைந்த ஒரு மருந்தகம் துப்புரவாகவும் விரைவாகவும் எப்படி செயல்படமுடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இது விளங்குகிறது.

தண்டையார்பேட்டைத் துறைமுகத் தொழிலாளர் குடியிருப்பு பகுதியில் அமைந்திருக்கும் இன்னொரு மருந்தகத்திற்குச் செல்கிறோம்.

துறைமுகக் குடியிருப்பு மருந்தகம் என்றால் எப்படி இருக்கவேண்டும் என்ற இலக்கணத்திற்கு விளக்கமாக இம்மருந்தகம் சிறப்பாக விளங்குகிறது. இக்குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் 1500 தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த மருந்தகத்தில் சிகிச்சை அளிக்கப் படுகிறது. இந்த மருந்தகத்தில் சிகிச்சைபெற வந்திருந்த திரு சி.வி. கோவிந்தன், டி.ஈ.சி. டிரைவர் (கார்டு எண் 9614); திரு சி. எம். நாராயணன், சீனியர் அட்டண்டர், (கார்டு எண் 4418), திருமதி வனஜா (இவரது கணவர் திரு ஏ. பாட்ரிக் போஸ்கா துறைமுகப் பாதுகாப்பு பிரிவில் பணியாற்றுகிறார்) ஆகியோரைச் சந்தித்து இம்மருந்தகத்தில் அவர்களுக்கு அளிக்கப் படும் சிகிச்சைகளைப் பற்றி வினவினோம்.

எல்லோருமே ஒருமித்த குரலில் இம்மருந்தகத்துக்குப் புகழ்மாலை சூட்டினார்கள். "இங்கு பணியாற்றும் டாக்டர் எஸ். வெற்றிராஜ் அவர்களின் குடியிருப்பும் இப்பகுதியிலேயே இருப்பதால், இரவு நேரத்திலும் அவரை வீட்டுக்குப் போய் அழைத்து வருகிறோம். எங்களுக்கு மருந்துகள் இல்லை என்பதே தெரியாது. எப்பொழுதும் இங்கு எல்லாம் கிடைக்கும்'' என்றனர்.

வேறு ஏதாவது சொல்லுங்களேன் என்று வற்புறுத்திக் கேட்டபொழுது ''இன்னும் அதிக டாக்டர்கள் இருந்தால் மேலும் நன்றாக இருக்கும்'' என்றார் சி.வி. கோவிந்தன்.










''இங்கு டாக்டர்கள் மட்டு மல்ல; பணியாற்றும்அனைவருமே எங்களுடைய பாராட்டுக்கு உரிய வர்கள். ஸ்பெஷலிஸ்ட்டுகள் வாரம் ஒருமுறை இங்கு வந்தால் நல்லது'' என்றார் சி.எம். நாரா யணன்.

''அவசர கேஸ்களுக்காக இங் கேயே ஒரு வேன் வைத்திருந்தால் மிகவும் நல்லது'' என்றார் திருமதி வனஜா.

இன்னும் 3 ஆண்டுகளில் வெள்ளிவிழாவைக் கொண்டாட விருக்கிறது இந்த மருந்தகம். இதன் கட்டடத்தையும் விரிவாக்க விருக்கிறார்கள். (Ideal dispensary) என்பதற்கு எடுத்துக்காட்டு இந்த மருந்தகம்.

இம்மருந்தகப் பகுதியின் ஓரி டத்தில் மலேரியா நோய்க்குச் சிகிச்சை அளிக்கும் பிரிவை சென்னை மாநகராட்சி ஏற்படுத் தியுள்ளது.

துறைமுக மருத்துவமனையும் அதன் மருந்தகங்களும் ஆற்றி வரும் தொண்டு, துறைமுகத் தொழிலாளர்களையும் அவர்களு டைய குடும்பங்களையும் 'டாக் போர்டு' தொழிலாளர்களையும் அவர்களது குடும்பங்களையும் மட்டும் மகிழ்ச்சியில் ஆழ்த்த வில்லை.

அயல்நாட்டுக்காரர்களையும் கவர்ந்திருக்கிறது. சென்னைத் துறைமுகத்தை நோக்கி வந்து கொண்டிருக்கும் கப்பலில் ஒருவ ருக்கு மாரடைப்பு ஏற்பட்டுவிட் டது. உடனே செய்தி சென்னைத் துறைமுக மருத்துவமனைக்கு வருகிறது. இங்கிருந்து மருத்து வர்கள் விசைப்படகுகள் மூலம் பத்து பதினைந்து மைல் தொலை தூரம் கடலில் சென்று சிகிச்சை அளிக்கிறார்கள். விரைந்து வந்து சிகிச்சை அளித்த மருத்துவர்க ளின் தொண்டைப் பாராட்டினார் கள் அவர்கள், இதுபோன்ற நிகழ்ச்சிகளும் உண்டு.

துறைமுகப் பகுதியில் வெளி யார் எவரும் விபத்துக்கு ஆளா னால் உடனே இங்கு சிகிச்சை அளிக்கிறார்கள். சென்னைத் துறைமுகத்தினுள்ளே ஆறு இடங் களில் முதலுதவி சிகிச்சை நிலை யங்கள் உள்ளன. விபத்துக்கு ஆளானோர்களுக்கு இங்கு சிகிச்சை அளித்து உடன் துறை முக மருத்துவமனைக்கு அழைத்து வருகிறார்கள்.

தொண்டில்-தூய்மையில் சிறந்து விளங்கும் துறைமுக மருத்துவமனையின் சிறப்புகள் அனைத்துக்கும் யார்பொறுப்பு? என்று துறைமுக மருத்துவ மனையின் தலைமை மருத்துவ அலுவலர் திருமதி டாக்டர் மீரா ஸ்ரீகுமார் அவர்களிடம் கேட்டோம்'',

''இம்மருத்துவமனையின்சிறப்பு அனைத்துக்கும் காரணமாக விளங்குபவர்கள் இங்கு பணியாற் றும்அத்தனை பேரும்தான். இங்கு வரும் நோயாளிகள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர் கள் என்ற உணர்வோடு சிகிச்சை










பெறுகிறார்கள். அவர்களும் நமது மருத்துவமனை என்ற சொந்த உணர்வோடு தூய்மையாக வைத்துக்கொள்ள உதவுகிறார்கள். பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்கிறார்கள். எங்களுடைய வெற்றிஅனைத்துக்கும் காரணம் 'டீம் ஒர்க்' - கூட்டுப்பணிதான்'' - என்கிறார் டாக்டர் மீரா ஸ்ரீகுமார். இவர் கருத்தையே முழுக்க ஆதரிக்கிறார் துணைத்தலைமை மருத்துவ அலுவலரான டாக்டர் செல்வி சரோஜினி.





"இம் மருத்துவமனையின் மீது மிகுந்த அக்கறை கொண்டு இதன் தேவைகளை நிறைவேற்ற துறைமுகப் பொறுப்புக்கழகத் தலைவர் திரு செல்வராஜ் ஐ.ஏ.எஸ். உதவிவருகிறார். விரைவில் சென்னைத் துறைமுக நூற்றாண்டு விழா நினைவாக இம்மருத்துவமனைக்குப் புதியதாகப் பல மாடிக்கட்டடம் கட்டவிருக்கிறோம்'' என்ற செய்தியையும் அவர்கள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்கள்.

மருத்துவமனை என்பது எப்படி விளங்க வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக - இங்கு இல்லாதன இல்லை என்று சொல்லும் அளவில் வளர்ந்து வரும் துறைமுக மருத்துவமனை மக்கள் நல்வாழ்வுக்கு ஆற்றிடும் தொண்டினைப் பாராட்டிப் போற்றுவோம்!

அதன் தொண்டு தொடர வாழ்த்துவோம்.

# நூல் நயம்

**புதுமனிதன்**

**ஆசிரியர்:** ஆலந்தூர் கோ. மோகனரங்கன்,
வெளியீடு: வசந்தா பதிப்பகம், 21, தருமராசா கோயில் தெரு, ஆலந்தூர், சென்னை-600016.
விலை ரூ. 4.50. பக்கங்கள்: 80

கவிதைகள் எழுதலாம். பல கோணங்களில். ஆனால், கவிதை நாடகங்கள் எழுதுவதில் உள்ள சிரமம், அவற்றில் இல்லை எனலாம்.

கவிதைகளில் படிக்கத் தகுந்தவை, பாடத் தகுந்தவை, நடிக்கத்தகுந்தவை என்று பல உண்டு. அவற்றுள் படிக்கவும், நடிக்கவும் ஏற்ப அமைந்த கவிதை நாடகங்களின் தொகுப்புதான் 'புதுமனிதன்'.

இந்நூலில் ஐந்து நாடகங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் நெஞ்சுக்கு நீதி புகட்டுகின்றன. பல கவிதை வரிகளில், ஆசிரியரின் ஆழ்ந்த சிந்தனைகள் இழைந்திருக்கின்றன. மாணவர் படிக்கவும் நடிக்கவும் ஏற்ற நாடகங்கள் இவை.

**போட்டோ எடுப்பது எப்படி?**

**ஆசிரியர்:** 'பரணீயன்'
வெளியீடு: யமுனா பிரசுரம். 10, சல்லிவன்ஸ் கார்டன் சந்து, மயிலாப்பூர். சென்னை-600004.
விலை: ரூ. 3.75. பக்கங்கள்: 568.

பல்வேறு கலைகளுள் புகைப்படக் கலையும் ஒன்று. கல்வியோடு கைத்தொழில் ஒன்றையும் கற்றுக் கொண்டால், நாளை சொந்தக் காலிலேயே நிற்கலாம் அல்லவா?

ஆசிரியர் 'பரணீயன்' இந்நூலில், புகைப்படம் எடுப்பது பற்றிய அடிப்படை நிலையிலிருந்து, படங்களைக் கழுவிச் சுத்தம் செய்தல், டெவலப் செய்வது, மருந்துகள் தயாரிக்கும் முறை போன்ற பல்வேறு விளக்கங்களை — செய்முறைகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். புகைப்படக் கலையில் ஆர்வமுள்ளவர்களுக்குத் துணை புரியும் நல்ல நூல் இது.

**160 சிறு தொழில் செய்முறைகள்:**

**ஆசிரியர்:** எஸ். ஏ. சூசைராஜா,
வெளியீடு: ஸ்டார் பிரசுரம், 72, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600005.
விலை: ரூ. 9.50. பக்கங்கள்: 183,

படித்துவிட்டு வேலை தேடுவோர்-வேலையின்றி வேதனைப்படுவோர்-வேலை கிடைக்காமல் வாழ்நாளை வீணே கழிப்போர் இப்படி இளைஞர்கள் திண்டாடுவதை விடுத்து, சுயவேலை வாய்ப்பில் ஈடுபடுவது வெற்றியைத் தரும் எனலாம்.

'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' என்றார் நாமக்கல் கவிஞர். ஏதாவதொரு தொழில் தெரிந்தால் எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம் அல்லவா?

இந்த நூலில் 160 சிறுதொழில்கள் பற்றிய விளக்கங்கள்-செய்முறைகள் உள்ளன.

ஸ்நோ முதல் சுக்கு மிட்டாய் வரை அதனைத் தயாரிக்கும் முறைகளை ஆசிரியர் தெளிவாக விளக்கியிருக்கிறார்.

தாம் விரும்பும் தொழிலை எளிதில் மேற்கொண்டு, ஏற்றம் பெற இந்நூல் பெரிதும் உதவும்.

—பி. வி. கிரி.




இந்தியாவில் உள்ள 32.8 கோடி எக்டேர் நிலத்தில் 23 சதவிகிதம் நிலம்தான் வனவளம் மிக்கதாக இருக்கிறது. அதாவது, இந்திய நாடு விடுதலையடைந்த போது இருந்ததில் சரிபாதி காடு தான் இப்போதுள்ளது.

இதிலிருந்து, இன்னும் பத்தாண்டுகளுக்குள் 11.6 கோடி டன் விறகுக்கும், கரிக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் இப்போதே தெரிகிறது.

இந்நிலையில், சமூக நல வன வளத் திட்டம் தமிழகத்திலே தீவிரமடைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

நாட்டு மக்களுக்கு நலம் பயக்கின்ற இத்திட்டத்தின் 'விரிவாக்கப் பணியினை ஊக்குவிக்கும் வகையில், ஸ்வீடன் அரசு, நமது தமிழ்நாட்டுக்கு 45 கோடிரூபாய் மான்ய உதவி அளிக்கிறது.

**தமிழகத்திற்கு ஸ்வீடன் நாட்டு உதவி**

இதற்கென அண்மையில் (13-2-82) சென்னைக்கு வருகை தந்த ஸ்வீடன் நாட்டுப் பிரதமர் தார்ப் ஜான் பால்டினை மேதகு தமிழக ஆளுநர் சாதிக் அலி அவர்களும், மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்களும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் விமான நிலையத்தில் இன்முகங்காட்டி இனிது வரவேற்றனர்.

சமூக வன வளத்திட்டத்தின் புதிய பணிகள், அன்று மாலையே ஸ்வீடன் நாட்டுப் பிரதமரால் செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி அருகே உள்ள நெற்குன்றம் கிராமத்தில் துவக்கி வைக்கப்பட்டன.

இதற்கென அங்கே வருகை தந்த அவர்களை மாண்புமிகு செய்தி-அறநிலைத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களும், தொகுதிச் சட்ட மன்ற உறுப்பினர் திரு. சக்ர பாணியும் மற்றும் அதிகாரிகளும் வரவேற்றனர்.

ஸ்வீடன் பிரதமர் தார்ப் ஜார்ன் பால்டின், 'இயல்வாகைக்' கன்று ஒன்றினை நட்டு வைத்துப் பணித் துவக்கம் செய்தார்.

அவரது மனைவி திருமதி சால்வீக் பால்டின் மற்றொரு 'இயல் வாகைக்' கன்றினையும் ஸ்வீடன் நாட்டுத் தொழிலமைச்சர் நீல்ஸ் அஸ்லிங்க் புளியங்கன்று ஒன்றையும் இவ்விழாவில் பங்கேற்று நட்டார்கள்.

ஞாயிறு கிராமத்திற்கு வருகை தந்த அவர்கள், அப்பகுதித் தாய்மார்கள் சிலரை அன்போடழைத்து செடி நட்டு மரமாக்கிப் பராமரிக்கும் விதம் பற்றி விளக்கிச் சொன்னார்கள். வனத்துறை ஊழியர்களை அருகழைத்து அவர்கள் பணி-ஊதியம் உள்ளடக்கிய பல விவரங்களைக் கேட்டறிந்தார்கள்.

சமூக வன வளத் திட்டம் தமிழகத்தில் ஏற்றம் பெற ஸ்வீடன் நாடு தரும் 45 கோடி ரூபாயில் ஆக்கபூர்வமான அரிய பணிகள் பல அடுக்கடுக்காக நிறைவேற்றப் படத் திட்டமிடப்பட்டுள்ளன.

வரும் ஐந்தாண்டுகளில், இத் திட்டத்தின் கீழ், 1,44,500 எக்டேர் நிலப்பரப்பில் காடு வளர்க்கப்படும்.

**வனத்துறையின் அரும்பணிகள்**

இந்தியாவில், வனக் கல்வி ஒரு நூற்றாண்டுக் காலத்தை முடித்துள்ளது. இந்தியாவிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் வரும் அலுவலர்களுக்கு உயர் மட்ட அளவில் பயிற்சியளித்து-வனப் பாதுகாப்பிற்காக வன ஆய்வு நிலையமும் கல்லூரிகளும் அரும்பணி ஆற்றியுள்ளன.

இருந்தும்கூட - நீர்-மின் திட்டங்களுக்கும், சாலைகள், ரயில் பாதைகள் அமைப்பிற்கும் தொழில்கள் பெருக்கத்திற்கும் பெரும்பகுதியான காடுகள் பயன்படுத்தப்பட்டமையாலும், காடுகளின் மூலப்பொருட்களைஅடிப்படையாகக் கொண்ட தொழில்கள் தொடங்கப்பட்டமையாலும் காடுகள் அழியத் தொடங்கின. இதனால், விறகு போன்ற எரிபொருட்கள் குறைந்த விலையில் மக்களுக்குக் கிட்டாத நிலை. வீடுகள் கட்ட தேவைப்படும் மரங்களுக்குத் தட்டுப்பாடு. கால்நடைகளுக்கான தீவனப்பற்றாக் குறை. மேலும் காடுபடு பொருட்களைக் காண்பதே அரிதான ஒரு நிலை.

இவ்வாறான இக்கட்டுகளைத் தவிர்த்திடும் நோக்கிலேயேசமூக வன வளத் திட்டம் ஊக்குவிக்கப் படுகிறது. ஸ்வீடன் நாட்டுப் பொருளாதார உதவி இந்த ஊக்கத்திற்கு ஊட்ட மருந்தாகும் என்பது உறுதி.

**பி.எல்.ராஜேந்திரன்**

இத்திட்டம் குறித்தும், இதன் சார்பான பிற விவரங்கள் பற்றியும் தலைமை வனத்துறைத் தலைவர் திரு. டி. அச்சையா, ஐ. எப். எஸ்., வனத்துறைப் பொருளாதார நிபுணர் திரு. கே. ஜி. காலா ஐ. எப். எஸ். ஆகியோரைப் பேட்டி கண்டு உரையாடினோம். அப்போது அவர்கள் தெரிவித்த விவரங்கள் வருமாறு:

பொதுவாகவே காடு என்றால் சிங்கம், புலி போன்ற கொடிய மிருகங்கள் வளரும் இடம் என்றுதான் எல்லோராலும் நினைக்கத் தோன்றும். அந்தக் காடு தன்னிச்சையாய் வளர்ந்ததாகும். துணிந்து நெருங்கமுடியாது என்பதால் அவ்வளவாக மக்களுக்குப் பயன்படாததும் கூட!

சமூக நல வன வளம் என்பது அதற்கு நேர்மாறானதாகும்.

மக்களின் தேவைகளுக்காக மக்களே உருவாக்கும் பயன்மரங்கள் மிகுந்ததுதான் சமூகநலக் காடு என்பது. ஊராட்சி மன்றங்களுக்கு உரிய இடங்களிலோ புறம்போக்கு நிலங்களிலோ இந்தக் காடுகள் உருவாக்கப்படுகின்றன.

இந்த சமூக நல வனவளத் திட்டம் 1960-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டதாகும்.

1980-ஆம் ஆண்டு வரை இத்திட்டத்தின் கீழ் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் எக்டேரில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

1981ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டுவரை இரண்டரை இலட்சம் எக்டேரில் 45 லட்சம் கோடி ரூபாயில் சிறப்புறச் செயல்படுத்தப்படவிருக்கிறது. இத்தொகையில் 50 சதவீதத்தொகை ஸ்வீடன் நாட்டு அரசால் தரப்படுகிறது. மீதத்தை நமது அரசு தருகிறது.

செடிகளை நடுவது, வளர்ப்பது மரங்களை வெட்டுவது ஆகிய பணிகளை இப்போது அரசே முன்னின்று நடத்தினாலும் நாளடைடைவில் இப்பணிகள் அந்தந்த ஊராட்சி மன்றங்களிடமே ஒப்படைக்கப்படும்.

சமூக நலக் காடுகள் உருவாக்கப்படும் இடத்திலேயே செடிகளுக்கான நாற்றங்காலும் போடப்படுகிறது.

இந்த ஓராண்டில், இத்திட்டத்தின்படி ஆயிரம் கிராமங்களில் சமூக வன வளத் திட்டம் செயல்படுத்தப்பட விருக்கிறது. இத்திட்டத்திற்காக முன்பெல்லாம் ஆண்டொன்றுக்கு ஒரு கோடி இரண்டு கோடி என்ற அளவில் தொகை செலவிடப்பட்டு வந்தது. இப்போதோ ஓராண்டுக்கு ஒன்பது கோடி ரூபாய் பத்துக்கோடி ரூபாய் என்கிற அளவில் மக்களின் பயன் கருதி இதற்காகச் செலவிட்டு வருகிறோம்.






தகுந்த நிலம் இருக்குமானால் பொது மக்களே இத்திட்டத்தைச் செயல்படுத்தவும் செய்யலாம். இப்படி முன்வருகிறார் ஒருவர் என்றால் அவருக்கு நாங்கள் 500 செடி தருகிறோம். ஓராண்டுக் காலம் அந்தச் செடிகள் அத்தனையையும் உயிரோடு பாதுகாக்கிறவருக்கு வனவளத்துறை மனமுவந்து ரூ. 77,50 தருகிறது.

யாராவது 500 செடிகளுக்கு மேல் கேட்டால் அந்த உபரி செடி ஒன்றுக்குப் பதினைந்து பைசா விலை வைக்கிறோம்.





இத்திட்டத்தின் மேன்மை கருதி இப்போது ஸ்வீடன் நாடு தரும் பெரும் பொருளுதவிக்கு இதய பூர்வமான நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

**பிற மாநிலங்களுக்கும் ஸ்வீடன் உதவி:**

இந்தியாவில், இதே வனவளத் திட்ட மேன்மைக்காக தமிழகத்திற்குப் போலவே மேற்கு வங்கத்திற்கும் ஆந்திரா, கன்னடம் போன்ற மாநிலங்களுக்கும்கூட ஸ்வீடன் நாடு பொருளுதவி செய்கிறது.

குஜராத்திற்கும், உத்தரப் பிரதேசத்திற்கும் உலக வங்கி உதவுகிறது.

மகாராஷ்டிரத்திற்கும், மத்தியப் பிரதேசத்திற்கும் USAID உதவுகிறது.

பீகார், ஒரிஸா போன்ற மாநிலங்களில் இத்திட்டம் செயல்படுவதற்காக ஸ்வீடன் அரசே இனி உதவத் திட்டமிட்டிருக்கிறது.

சமூக வனவளத் திட்டத்தால் மக்களுக்கு நல்ல வருவாயும் உண்டு என்பது ஒருபுற மிருந்தாலும், அந்தந்தப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான மக்கள் வேலைவாய்ப்பும்பெறுகிறார்கள். முக்கியமாகப் பெண்களுக்கும் நிறைய வேலை கிட்டுகிறது.

**வனவளத் திட்டத்தின் பயன்கள்:**

சமூக வனவளத் திட்டம் இங்கே ஐந்தாண்டுக்காலம் செயல்படுத்தப்படுவதால், அதற்காக ஒரு கூடுதல் வனத்துறைத் தலைவர் நியமிக்கப்படுவார். 5 வனப் பாதுகாவலர்கள், 21 கோட்ட வன அலுவலர்கள் 115 Rangers வேலை பெறுகிறார்கள்.

ஐந்தாண்டுக் காலத்தில் சுமார் 30.6 மில்லியன் வேலை நாட்கள் மரங்கள் உற்பத்தியிருக்கும். 1380 டெக்னிகல், டெக்னிகல் அல்லாத சிப்பந்திகளுக்கு வேலை இருக்கும். 5,000 கிராம மக்களுக்குச் செடி நடுவது வளர்ப்பது போன்ற வேலைகள் இருக்கும். மரங்களை வெட்டும் காலத்திலோ 100 மில்லியன் வேலை நாட்கள் மேலே குறிப்பிட்டபடி பலருக்கு வேலை வாய்ப்புகள் இருக்கும்.

இவ்வாறு தலைமை வனத்துறை அதிகாரியும் வனத்துறைப் பொருளாதார நிபுணரும் நமக்குத் தெரிவித்தார்கள்.

கூடுமான வரை தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலுமே இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்த அவர்கள், 'இந்தியாவிலேயே முதன்முதலில் தமிழ்நாட்டில்தான் சுமார் 940 எக்டேர் நிலப் பரப்பில் சமூக வனவளத்திட்டம் துவக்கப்பட்டது.' என்பதையும் மகிழ்வோடு தெரிவித்தார்கள்.

# சம்பளத்திலிருந்து சரியான வரித்தொகையைக் கழித்துக் கொள்ள தவறவேண்டாம்

வருமான வரிச் சட்டப்படி, சம்பளம் கொடுப்பவர்கள் ஒவ்வொருவரும், சம்பளத்திலிருந்து, உரிய விகித வருமான வரித்தொகையைக் கழித்துக் கொள்ளவேண்டும். அரசு ஊழியர்களிடமிருந்து கழிக்கப்பட்ட வரித் தொகையை உடனடியாகவும், மற்ற ஊழியர்களிடமிருந்து கழிக்கப்பட்ட வரித் தொகையை ஏழுநாட்களுக்குள்ளும், மத்திய அரசின் கணக்கில் செலுத்திவிட வேண்டும்.

## இதில் தவறினால்:

1) வேலைக்கு அமர்த்திக் கொள்ளுபவர்களிடமிருந்தே முழு வரித் தொகையும் வசூலிக்கப்படலாம்;

2) வட்டி மற்றும் அபராதமும் விதிக்கப்படலாம்;

3) வழக்குத் தொடரப்பட்டு, விளைவாக கடுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பெறக்கூடும்.

## இத்தண்டனைகளைத் தவிர்க்க:

சம்பளங்களிலிருந்து சரியான வரித்தொகை கழிக்கப்பட்டு, அத்தொகை காலத்தில் அரசுக் கணக்கில் சேர்க்கப்படுமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

சிறுதொகை ஏதேனும் கழிக்கப்பட வேண்டியிருந்தால் 1982 பிப்ரவரி / மார்ச் மாத சம்பளங்களில் ஈடு செய்து கொள்ளுங்கள்.

டைரக்டர் ஆ.ஃப் இன்ஸ்பெக்ஷன்,
(ரிஸர்ச், ஸ்டாடிக்ஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ்)
இன்கம்-டாக்ஸ் டிப்பார்ட்மெண்ட்,
நியூ டில்லி-110001.

டி. ஏ. வி. பி. 81/326

# அரசின் அறிவிப்புகள் - ஆக்கப்பணிகள்

## 6—2—82

மதுராந்தகத்தில் காகித ஆலை ஒன்று நிறுவுவதற்கென 50 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதன் காரணமாகப் பாதிக்கப்படும் நிலச்சொந்தக் காரர்களுக்கு போதிய உதவி செய்ய, மாற்று இடம் தர அரசு பரிசீலனை செய்து வருகிறது. இந்த ஆலை 1983-ஆம் ஆண்டு செயல் படத் தொடங்கும். இந்த ஆலையில் நேரடியாக 250 பேருக்கும் மறைமுக மாக 150 பேருக்கும் ஆக மொத்தம் 400 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இந்த ஆலையை அமைக்க நிலம் வழங்குகின்றவர்களின் குடும்பத்தின ருக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படும். என்று மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் குன்றக்குடியில் ஒன்றேகால் கோடி ரூபாய் செலவில் பொட்டாசியம் குளோரைடு கூட்டுறவுத் தொழிற்சாலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்கள்.

## 8—2—82

குடும்ப நலத் திட்டங்களுக்காகத் தமிழக அரசுக்கு மத்திய அரசு 9.6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளத் தகுதியுள்ள தம்பதிகளில் 28 விழுக்காடு குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டுள்ளனர். குசராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாகத் தமிழ் நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் அறிவித்தார்கள்.

## 9—2—82

கன்னியாகுமரி மாவட்டத்தை கேரள மாநிலத்தினின்று மீட்கவும் திருத்தணியை ஆந்திர மாநிலத்தினின்று மீட்கவும் நடந்த எல்லைப் போராட்டங்களில் உயிரிழந்த 13 தியாகிகள் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் நிதி வழங்கத் தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

## 10—2—82

சென்னை நகரில் தற்போது 16 தானியங்கிப் பால் வழங்கும் நிலையங்கள் உள்ளன. இதே போல் மொத்தம் 100 நிலையங்கள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரகத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் அறிவித்தார்.

## 13—2—82

சென்னையில் பெரியார் பெயரில் 1982-83-ஆம் ஆண்டில் 4.8 கோடி ரூபாய் செலவில் அறிவியல் அரும் பொருட் காட்சியகம் ஒன்று அமைக்கப்படும்.

## 15—2—82

மதுரை மாவட்டம் வேடசந்தூரில் 40 கோடி ரூபாய் செலவில் சிமெண்ட் தொழிற்சாலை ஒன்றைத் துவக்குவதற்குத் தமிழக அரசு மத்திய அரசிடம் அனுமதி கேட்டுள்ளது. என்று சட்ட சபையில் கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்கள்.

சுமார் 71 இலட்சம் ரூபாய் செலவில் ஏறத்தாழ 500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் தமிழ்நாட்டில் 4 இடங்களில் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் அமைக்கும் திட்டம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சட்ட சபையில் கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்கள்.

தமிழகத்தில் வறுமையில் வாடும் வயது முதிர்ந்த திரைப்படக் கலைஞர்களுக்கு நிதியுதவி செய்யும் திட்டம் ஒன்று தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மேலவையில் கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

## 17—2—82

சென்னையில் கூவம் நதிக்கரையோரத்தில் சாலைகள் அமைத்து அவற்றில் மின் விசையால் இயங்கும் மோட்டார் வண்டிகளை இயக்கலாமா என்று பரிசீலனை செய்யப்பட்டு வருவதாக மேலவையில் கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எஸ். முத்துசாமி அவர்கள் அறிவித்தார்.

கட்டடம் கட்டும் தொழிலாளி வேலை நேரத்தில் விபத்துக்குள்ளாகி மாண்டால் அவருடைய குடும்பத்துக்கு 10 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்

போது மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு ராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்கள்.

**18—1—82**

மருத்துவ மனைகளில் விதவைகளுக்கு வேலை கொடுக்கும்படி அரசு உத்தர விட்டு இருக்கிறது.

புதிதாக அமைக்கப்பட விருக்கும் பெண்கள் பல்கலைக் கழகத்துக்கு, ஒரு பெண் துணைவேந்தராக நியமிக்கப் படுவர். இத்தகவலை மேலவையில் மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்கள்.

ஆண்டுக்கு 15 ஆயிரம் பேருக்குத்தான் மின் இணைப்பு என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், 1976க்கு முன்னால் பதிந்து காத்திருக்கும் 48 ஆயிரத்து 215 பேருக்கும் இந்த ஆண்டுக்குள் மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று சட்ட சபையில் கேள்விநேரத்தில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

**20—1—82**

படித்த இளைஞர்கள் சுயவேலைவாய்ப்பு பெறும் நோக்கத்தில் தனிக் கூட்டுறவு அமைப்பு ஒன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. என்று சட்டசபையில் கேள்வி நேரத்தின் போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் அறிவித்தார்கள்.

**21—2—82**

தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கோவில் களிலும் இலவச சிறப்புத் திருமணங்கள் நடத்த அரசு ஏற்பாடு செய்யும் என்று மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

மின்சார வாரிய ஊழியர்களுக்கு இது வரை 6,720 வீடுகள் கட்டிக் கொடுத்துள்ளதாகவும் ஆண்டுக்கு 5 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் மேலவையில் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்கள்.

**22—2—82**

சென்னை நகரில் 3.34 ஹெக்டேர் நிலப் பரப்பில் காவல் துறையினருக்காக வாடகைக்கு குடியிருப்புக்களைக் கட்டுவதற்காக 2 கோடி ரூபாய் திட்டமொன்றிற்கு தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் செயல்படுத்தும் என்று அதிகாரப்பூர்வமாக அரசுச் செய்திக் குறிப்பு ஒன்று அறிவித்துள்ளது.

சென்னை நகரிலுள்ள முக்கியப் பள்ளிகள் திரையரங்குகள் அருகில் போக்குவரத்துக்களை ஒழுங்குபடுத்துவதற்காக போக்குவரத்துக் காவலர்கள் அமர்த்தப்படுவார்கள் என காவல் துறை ஆணையாளர் திரு ஸ்ரீபால் அறிவித்தார்.

## நுகர் பொருள் அட்டைக்கான கோரிக்கைகள்

ஒரு ஊரிலிருந்து மற்றொரு ஊருக்கு மாறுதலாகி அல்லது குடிபெயர்ந்த பொது மக்கள், புதிதாக குடும்ப அட்டைக்கு மனுச் செய்யும் பொழுது அந்த மனுவுடன் ஏற்கனவே தனக்கு வழங்கப்பட்டிருந்த குடும்ப அட்டையை ஒப்படைத்ததற்கான சான்றிதழ் (Surrender Certificate), வேறொரு குடும்ப அட்டையில் சேர்க்கப்பட்டிருந்து பின்பு பிரிந்து தனியாகக் குடும்பம் அமைத்தவர்கள், ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருந்த குடும்ப அட்டையிலிருந்து நீக்கப்பட்ட (Deletion Certificate) சான்றிதழை மனுவுடன் இணைக்க வேண்டும். அத்தகைய சான்றிதழ்கள் ஒப்புவிக்க இயலாதவர்கள் ஒரு உறுதி பத்திரத்தில் ரூ. 4-50 நீதிமன்றக் கட்டண வில்லை (Court fee Stamp) ஒட்டி கீழ்க்கண்ட அலுவலர்களில் எவரேனும் ஒருவரின் ஒப்புதலைப் பெற்று உதவி ஆணையாளர்/வட்ட வழங்கல் அலுவலர் களிடம் மனுச் செய்து கொண்டால் புதிய அட்டைக்கான கோரிக்கைகள் கவனிக்கப்படும்.

1. முதலாம் / இரண்டாம் / மூன்றாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்.
2. அரசிதழ் பதிவு பெற்ற 'ஏ' பிரிவு அலுவலர்
3. சான்றுறுதி அலுவலர் (Notary Public)

ஒரு ஊரிலேயே நீண்ட நாள் வசித்து வந்தும் ஆனால், குடும்ப அட்டை வாங்கவில்லை என்று புதிதாகக் குடும்ப அட்டைக்கு மனு செய்பவர்களுக்கு மேற்கண்ட அறிவுரை பொருந்தும்.

உறுதி பத்திரத்தின் படிவம் உதவி ஆணையர் அலுவலகங்களிலும் வட்ட வழங்கு அதிகாரி அலுவலகங்களிலும் கிடைக்கும்.

# தமிழ்நாடு அரசு சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழுவின் அறிக்கை

1. சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு அமைத்தது.

2. சித்த மருத்துவ வாரியம் அமைய இருப்பது.

3. சென்ற பத்து ஆண்டுகள் முடங்கிக் கிடந்த RIMP தேர்வுக்கு உரிமை வழங்கியது.

4. தோல்வி அடைந்தோர்க்கு மீண்டும் மறுதேர்வு வைத்திருப்பது.

5. RIMP பதவிக்கு RSMP என்னும் புதுப்பெயர் இட்டது.

6. தமிழக அரசின் மாநில சித்த மருத்துவ மாநாட்டிற்கு அரசு மானியமாக ரூ. 10,000 வழங்கி இருப்பது.

7. சென்னையில் சித்த மருத்துவக் குழுவின் அலுவலகக் கட்டடத்துக்கு ரூபாய் 5,00,000 (ஐந்து லட்சம்) கிடைத்தது.

8. பாளையங்கோட்டைஇந்திய மருத்துவக் கல்லூரியின் பெயரைச் சித்த மருத்துவக் கல்லூரி என்று மாற்றி இருப்பது.

ஆக உயர்த்தியது. மேலும் 5 ஆண்டு பணிபுரிந்தோருக்கு ரூபாய் 650-ம் 2 ஆண்டு பணிபுரிந்தோர்க்கு ரூ. 500-ம் வழங்கியிருப்பது.

15. மேற்குறிப்பிட்ட 75 மாணவர்களுக்கு மேலும், 10-ஆம் வகுப்பு வரை படித்த பரம்பரை மருத்துவர் பிள்ளைகளுக்குக் கல்லூரியில் 25 இடங்கள் கிடைத்திருப்பது.

16. பாளையங்கோட்டைக் கல்லூரியில் பரம்பரை மருத்துவர் ஒருவரை ஆசிரியர் பதவியில் அமர்த்தியது.

17. 200 ஊராட்சி ஒன்றியங்களில் சித்த மருத்துவ மனைகளை அமைத்திருப்பது.

18. பாச்சிலர் ஆப் இந்தியன் மெடிசின் (BIM) என்ற பட்டத்தை பாச்சிலர் ஆப் சித்தா மெடிசின் (BSMS) என்று மாற்றியது.

19. வேலையில்லாது இருந்த 150 சித்த மருத்துவப் பட்டதாரிகளுக்கு உடனே வேலை வழங்கியது.

# சித்த மருத்துவ மறுமலர்ச்சி

கி. ஆ. பெ. விசுவநாதம்
பெருந்தலைவர்,
சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு,
தமிழ்நாடு அரசு.

இரா. குமாரசுவாமி
செயலர்,
சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு
தமிழ்நாடு அரசு.

9. புதிய சித்த மருத்துவக் கல்லூரி ஒன்றைத் தொடங்க இருப்பது.

10. BSMS பட்டப்படிப்பு மாணவர் தேர்வுக் குழுவில் பரம்பரை மருத்துவர் ஒருவருக்கு உறுப்பினர் பதவி கிடைத்தது.

11. சித்த மருந்து ஆளுநர் மாணவர் எண்ணிக்கையை 15-லிருந்து 50 ஆக உயர்த்தியிருப்பது.

12. இந்த மருந்தாளுனர் தேர்வுக் குழுவில் பரம்பரை மருத்துவர் ஒருவருக்குத் தலைவர் பதவி தந்தது.

13. சித்த மருத்துவக் கல்லூரியில் மாணவர் எண்ணிக்கையை 44-லிருந்து 75 ஆக உயர்த்தி இருப்பது.

14. சித்த மருத்துவக் கல்லூரி பட்ட மேற்படிப்பு மாணவர்களின் உதவித் தொகையை ரூ. 200லிருந்து ரூ. 325

20. பழனித் திருக்கோவில் நூல் வெளியீட்டுப் பணியில் முடங்கிக் கிடந்த சுவடிகள், நூல்கள், அச்சுக் காகிதங்கள், கையிருப்பு நிதி அனைத்தும் திரும்பக் குழுவுக்கு கிடைத்திருப்பது.

21. கீழ்த்திசை நாடுகளில் சித்த மருத்துவத்தைப் பரப்ப எழுவர் கொண்ட அறிவியல் தூதுக் குழு ஒன்றிற்கு அனுமதி வழங்கியிருப்பது.

22. மூலிகைகளின் சிறப்பை அறிவிக்க பேராசிரியர் குமாரசுவாமியுடன் மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை மேற்கு ஜெர்மனி செல்ல ஏற்பாடு செய்திருப்பது.

23. உலகத் தமிழ் மாநாட்டில் சித்த மருத்துவ மாநாட்டை நடத்தி, உலகப் பிரதிநிதிகளுக்குச் சித்த மருத்துவ உயர்வை விளக்கியது.

24. பரம்பரை மருத்துவப் பங்குதாரர்களைக் கொண்ட கூட்டுறவு மருந்து செய்யும் நிலையத்திற்கு அனுமதி அளித்திருப்பது.

25. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மூன்று பேராசிரியர்களைக் கொண்ட சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அமைத்திருப்பது.

26. மூலிகை மருந்துகளை மேம்படுத்த, தமிழ்நாடு அரசின் மூலிகை வாரியம் ஒன்று அமைய இருப்பது.

27. பாளையங்கோட்டையில் மூடிக்கிடந்த மூலிகை ஆய்வுக்கூடம் மறுபடியும் திறந்து செயல்பட இருப்பது.

28. சித்த மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டிற்கு நிபுணர் குழு ஒன்று அமைய இருப்பது.

29. மாநில அளவில் சித்த மருந்துகள் 'தர ஆய்வு நிலையம்' ஒன்று அமைய இருப்பது.

30. வெளிநாடுகளுக்குச் சித்த மருந்துகளைப் பெரும் அளவில் ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டிருப்பது.

31. மருந்தாக்கியல் ஆலோசனைக் குழு ஒன்று அமைத்திருப்பது.

32. பொள்ளாச்சியில் ரூ. 35 இலட்சம் செலவில் ஒரு பெரிய மருந்து செய் சாலை நிறுவத் திட்டமிட்டிருப்பது.

# பார்த்தோம்--படித்தோம்

ஒரு தாய்க்கு ஒன்பது குழந்தை—எஸ்.ஓ.எஸ். பகுதி பண்புவளர்க்கும் ஒரு பகுதி.

பயிர் பாதுகாப்பு அவசியமா? என்ற பகுதியில் ''பயிர் நெருக்கம்; ஒரு பயிர் சாகுபடி; அதிக அளவு உரமிடல்; புதிய சாகுபடி முறைகள் முதலியன நோய்க் காரணிகள் பெருகிப் பரவுவதற்கு வழி வகுக்கின்றன'' என்ற தகவல் உண்மையான கண்டுபிடிப்பைக் காட்டுகின்றது.

சீனி ஸ்ரீ. சந்திரன்
சென்னை-1.

'தமிழரசு' ஒவ்வொரு இதழிலும் ஒரு சிறுகதை, கவிதை இடம்பெற வேண்டும்.

—வெங்கடேஸ்வரன்
பேரணாம்பட்டு.

சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி பற்றிய கட்டுரை மிக அருமையாக இருந்தது. அட்டைப்படமும் கண்ணைக்கவர்ந்தது.

— குமார்,
பெங்களூர்

'தமிழரசு' வர வர பொலிவுடன் திகழ்கிறது. புதுமையான கருத்துக்கள் அதில் பொதிந்துள்ளன.

—த. கணேசன்
காரைக்கால்

16.2.82 இதழில் 'அண்ணா பிறந்த மண்ணில் பெரியார் நினைவுத்தூண் கட்டுரையும், 'பல்கலை அறிஞர் பாவாணர்' என்ற கட்டுரையும் பயனுள்ளவை.

—எஸ். விவேகானந்தன்,
கும்பகோணம்.

கலைமாமணி விருது வழங்கும் விழா நிகழ்ச்சித் தொகுப்பு மிக நன்றாக இருந்தது. அது நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

—நீலாவதி
ஸ்ரீபெரும்புதூர்

புலவர் தமிழ்ப்பித்தன் எழுதிய 'அண்ணா ஓர் தெய்வம்' என்னும் கவிதை நெஞ்சைத் தொட்டது. பேரறிஞர் அண்ணாவையே கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது.

—எம். செல்வராஜ்
திருவள்ளூர்.

ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளைத் தாய் - தந்தையர்கள் இருந்து காப்பாற்றுவதைப்போல் எஸ்.ஓ.எஸ். இல்லங்களில் பேணி வளர்ப்பதைச் சிறப்பாக எடுத்துக் கூறி இருந்தது. ''ஒரு தாய்க்கு ஒன்பது குழந்தைகள்'' இதுபோன்ற கதைகளை வெளியிடும்படி கேட்டுக் கொள்கிறேன்

—புதுக்கோட்டைமாணிக்கம்
சென்னை-28.

''மாணவர் பக்கம்'' என்னும் பகுதி பல அரிய கருத்துக்களை எளிய முறையில் அள்ளித் தருகிறது. இது மாணவர்களின் பொது அறிவை வளர்த்துக் கொள்ள வழி வகுக்கிறது. பழைய மாணவர்களும் தங்களது கடந்த கால நிகழ்ச்சிகளை தெரிவிக்கப் பயன்படும்படி ஏற்பாடு செய்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

—விண்ணவர் மன்னன்,
சென்னை-1.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
Sir

Licence No. TN/MS(C)/PP-23

